# உதயன்



23

www.onlineuthayan.com

32 பக்கங்கள் சுடர் 28 கதிர் 023 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 04 புதன்கிழமை (19/12/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00


## சிப்பாய்களை திருமணம் செய்ய தமிழ்ப் பெண்களுக்கு நிர்ப்பந்தம்

### கருணாநிதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.19

இலங்கை இராணுவத்தினரைத் திருமணம் செய்து கொள்ளுமாறு வடபகுதித் தமிழ்ப்பெண்கள் வற்புறுத்தப்படுகின்றனர் என்று குற்றஞ்சாட்டியுள்ளார் தமிழக முன்னாள் முதல்வர் மு.கருணாநிதி. இது தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்குமாறு அவர் இந்திய அரசிடம் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் வடபகுதியில் குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள தமிழ்ப்பெண்கள் இராணுவச் சிப்பாய்களைக் கட்டாயத் திருமணம் செய்து கொள்ள வற்புறுத்தப்படுகிறார்கள். என்று அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். அவரது இந்தக் குற்றச்சாட்டை இராணுவம் மறுத்துள்ளது.

மாவீரர் தினத்தன்று, இறந்தவர்களுக்கு அஞ்சலி

பார்க்க பக்கம் 4

## 15 பேர் சாவு

### சீரற்ற காலநிலையால் 21 ஆயிரம் பேர் பாதிப்பு



கொழும்பு, டிசெ.19

நாட்டின் பல பாகங்களிலும் நிலவிவரும் சீரற்ற காலநிலையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இது வரை 5 ஆயிரத்து 202 குடும்பங்களைச் சேர்ந்த 21 ஆயிரத்து 120பேர் நிர்க்கதியாகியுள்ளனர்.

அடை மழை, வெள்ளம், மண்சரிவு, மரம்முறிவு போன்ற இடர்களால் நேற்று மாலை வரை 15 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பேரிடர் முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.12இற்கு மேற்

பார்க்க பக்கம் 4

## குற்றப் பிரேரணையை எதிர்க்கும் சட்டத்தரணிகளுக்கு கொலை மிரட்டல்

### ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ.19

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணைக்குக் கடும் எதிர்ப்பு வெளியிடும் சட்டத்தரணிகளை அச்சுறுத்தி, அவர்களை கொலை செய்ய அரசு முயற்சிக்கிறது. சட்டத்தரணி குணரட்ன வன்னிநாயக்கவுக்கு விடுக்கப்பட்ட சாவு அச்சுறுத்தல் இதற்குத் தகுந்த எடுத்துக்காட்டாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சி நேற்றுக் குற்றஞ்சாட்டியது.

குற்றப் பிரேரணை விடயத்தில் பொதுநலவாயத்தின் உடன்படிக்கைக்கமைய செயற்

பார்க்க பக்கம் 4

## ஷிராந்தியின் கண் தானம்

கொழும்பு, டிசெ.19

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ தனது கண்ணைத் தானம் செய்துள்ளார்.

தேசிய கண்தான தினத்தை முன்னிட்டு கொழும்பு ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாளிகையில் நேற்று இடம்பெற்ற கண்தான நிகழ்வில் தனது கண்களைத் தானம் செய்யும் ஒப்பந்தத்தில் அவர் கைச்

பார்க்க பக்கம் 4

## கொலைச் சந்தேகநபர்களுக்கு 2 வருடங்களின் பின் பிணை

யாழ்ப்பாணம்,டிசெ 19

இளம்பெண் ஒருவரை வன்புணர்வு செய்து கொலை செய்தமை, அதற்கு உதவி புரிந்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் இரண்டு வருடங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மூன்று பேர் யாழ்.மேல் நீதிமன்றினால் நேற்று செவ்வாய்க்கிழமை

பார்க்க பக்கம் 4

# மூன்று வாரங்களில் 39 தமிழர்கள் கைது

### சுன்னாகத்தில் நேற்று ஒரு பெண் தடுப்புக்கு

யாழ்ப்பாணம்,டிசெம்பர்19

பயங்கரவாத விசாரணைப் பிரிவுப் பொலிஸாரால் யாழ்ப்பாணத்தில் நேற்றுப் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்று அவரது உறவினர்கள் தெரிவிக்கின்றனர். அவர் என்ன காரணத்துக்காகக் கைது செய்யப்பட்டார் என்பது பொலிஸாரால் தெரிவிக்கப்படவில்லை. இவருடன் சேர்ந்து கடந்த மூன்று வாரங்களில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் 39 பேர்வரை கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

சுன்னாகம் மின்சார நிலைய வீதியைச் சேர்ந்த சுரேஷ்குமார் சிவாகினி (வயது -40) என்ற பெண் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டார் என்று அவரது உறவினர்கள் கூறுகின்றனர்.

சுன்னாகத்தைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார் என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருப்பதாக அதன் யாழ். மாவட்ட இணைப்பாளர் தெரிவித்தார். ஆனால் பெயர் விவரங்களை அவர் வெளியிடவில்லை.

இந்தக் கைதுடன் யாழ்ப்பாணத்தில் 36 பேர் கடந்த மூன்று வாரங்களில் பயங்கரவாத விசாரணைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும் மூவர் கிளிநொச்சி மாவட்டத்தில்

பார்க்க பக்கம் 4

## '13' இற்கு மேர்வின் ஆதரவு

கொழும்பு, டிசெ.19

''எந்தவொரு இனத்தையும் ஒதுக்கிவைத்துவிட்டு ஒற்றுமையை நோக்கி நகர முடியாது. நாம் அனைவரும் ஒற்றுமையாகப் பயணிக்க வேண்டிய தருணம் இது. இன ஒற்றுமைக்காகத் தொடர்ந்தும் நான் போராடுவேன். அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை நீக்குவது தொடர்பில் அரசு எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை.''

- இவ்வாறு மக்கள் தொடர்பாடல் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்தார்.

அரசமைப்பிலிருந்து 13ஆவது திருத்தச் சட்டம் நீக்கப்படக்கூடாது எனக் கோரி ஆளும் தரப்பில் உள்ள சிலரால் ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள மனு தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அமைச்சர் மேர்வின் சில்வா

பார்க்க பக்கம் 4




கைது செய்யப்பட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரி கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது....

## இலங்கை மீது உரிய அழுத்தத்தை சர்வதேசம் பிரயோகிக்க வேண்டும்

### கனேடிய எம்.பி. வலியுறுத்து

கொழும்பு,டிசெ.19

இலங்கையில் இடம்பெற்றுவரும் தொடர்ச்சியான வன்முறை நிறைந்த சூழ்நிலை குறித்து தாம் கவலையடைகிறார் எனவும், இலங்கை அரசு மீது சர்வதேச சக்திகள் உரிய அழுத்தங்களைப் பிரயோகித்து மக்களின் அடிப்படை உரிமைகளை மதிக்கும்படி வலியுறுத்த வேண்டும் எனவும் கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்

பார்க்க பக்கம் 4


மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.......

குகன் ஸ்ரோர்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்



★ மலிவான விலையில் மளிகைப் பொருள்களைப் பெற்றுக் கொள்ள........

★ நத்தார்,புதுவருடத்தை முன்னிட்டு கேக்கிற்குரிய பொருள்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.



★ வீட்டுக்குரிய பலசரக்கு பொருள்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள......

★ தைப்பொங்கலுக்குரிய பொருள்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

மொத்தமாக கொள்வனவு செய்யும் வர்த்தகர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

குகன் ஸ்ரோர்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்

இல. 180,(380) ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்.

T.P.021 221 9469 சு.செ.ஆ.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்டத்தை ஈடு செய்வதற்கே பெற்றோல் விலை அதிகரிப்பு

### அமைச்சர் சுசில் கூறுகிறார்

கொழும்பு, டிசெ.19
நட்டத்தை ஈடு செய்யும் நோக்கிலேயே பெற்றோலின் விலை உயர்த்தப்பட்டுள்ளது என்று பெற்றோலிய வளத் துறை அமைச்சர் சுசில் பிறேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

ஒரு லீற்றர் பெற்றோல் இறக்குமதி செய்யும்போது 10 முதல் 12 ரூபா வரையில் நட்டம் ஏற்படுகிறது என்று அவர் குறிப்பிட்டார். இந்த நட்டத்தை ஈடுசெய்யும் நோக்கிலேயே விலை அதிகரிக்கப்பட்டது என்று அவர் கூறினார்.

ஒரு லீற்றர் டீசல் இறக்குமதி செய்யும்போது 16 ரூபாவும், ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் இறக்குமதி செய்யும் போது 26 ரூபாவும் நட்டம் ஏற்படுகிறது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

**விலையேற்றத்துக்கு எதிர்க் கட்சி கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது**

மசகு எண்ணெய் இறக்குமதியால் ஒரு லீற்றருக்கு 40 ரூபா நட்டம் ஏற்படுகிறது. இந்த நட்டங்களை ஈடு செய்வதற்காகவே பெற்றோல் விலை அதிகரிக்கப்பட்டது என்று அவர் கூறினார். இதே வேளை, எரிபொருள் விலையேற்றத்துக்கு எதிர்க் கட்சி கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தன்னைத் தாக்க முயற்சி; சட்டத்தரணி முறைப்பாடு

கொழும்பு, டிசெ.19
இனந்தெரியாத குழுவொன்று தன்மீது தாக்குதல் நடத்துவதற்கு முயற்சித்துள்ளதாக ஸ்ரீ மார்ச் சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏற்பாட்டாளரும் தேசிய சட்டத் தரணிகள் சங்கத்தின் முன்னாள் செயலாளருமான சட்டத்தரணி குணரத்ன வன்னிநாயக்க பொரலஸ்கம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

பொரலஸ்கமவில் உள்ள தனது வீட்டுக்கு மனைவியுடன் காரில் சென்று கொண்டிருந்த போதே இனந்தெரியாத நபர்கள் தம்மீது தாக்குதல் நடத்துவதற்கு முயற்சித்தனர் என்று சட்டத்தரணி குணரத்ன அந்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் நிலவரம் குறித்து இராஜதந்திரிகளுக்கு விளக்கம்

### நேற்று அமைச்சர் பீரிஸ் தலைமையில்



கொழும்பு, டிசெ.19
நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை உட்பட பல்வேறு பிரச்சினைகள் குறித்து சர்வதேச பிரதிநிதிகளுக்கு முழுமையான விளக்கம் கொடுக்கப்பட்டதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மாநாடு ஒன்று கொழும்பில் நேற்று இடம்பெற்றது. இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில்-

இலங்கையில் அரசியல் மற்றும் பொருளாதாரம் தொடர்பில் தற்போது நிலவும் பரந்துபட்ட பிரச்சினைகள் குறித்து கொழும்பிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் விளக்கமளித்தார்.

இதன்போது, பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா, அமைச்சின் செயலாளர் திலக் அமுனுகம ஆகியோரும் கலந்துகொண்டிருந்ததாக அந்த அறிக்கையில் குறிப்படப்பட்டுள்ளது. (ஐ)

# ஐ.தே.க. பதவிகளில் ஜனவரியில் மாற்றம்

### செயற்குழுவில் எதிர்ப்பு வெளியிடப்பட்டால் வாக்கெடுப்பு நடத்தப்படும் என்கிறார் திஸ்ஸ

கொழும்பு, டிசெ.19
ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர், உப தலைவர், தேசிய அமைப்பாளர் உட்பட பிரதான பத விகளுக்கு தகுதி உடையோர் எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறும் செயற்குழுக் கூட்டத்தில் நியமிக்கப்படுவர் என்று ஐ.தே.க. பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

3 பிரதான பதவிகளுக்கும் ஆள்களை நியமிக்கும் போது முழு செயற்குழு உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் எதிர்ப்பு வெளியிட்டால், மற்றுமொரு பெயர் பிரேரிக்கப்படும். அதற்காக வாக்கெடுப்பும் நடத்தப்படும் என்று அவர் கூறினார்.

செயற்குழுவில் 92 பேர் உள்ளனர். இதில் 31 பேர் பிரேரிக்கும் வேட்பாளருக்கு எதிர்ப்புத் தெரிவித்தால் வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

பிரதானமூன்றுபதவிகளில் இரு பதவிகளுக்காக கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ருவன் விஜேவர்தனவின் பெயரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகருணாநாயக்காவின் பெயரும் முன்வைக்கப்படும் என்று ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## வடமத்திய மாகாணத்தில் சகல வீடுகளுக்கும் மின்!

கொழும்பு, டிசெ.19
அடுத்த வருடம் பூர்த்தியாவதற்குள் வடமத்திய மாகாணத்திலுள்ள சகல வீடுகளுக்கும் மின்சாரம் வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று வடமத்திய மாகாண முதலமைச்சர் ரஞ்சித் சமரகோன் தெரிவித்தார்.

ஜனாதிபதி பதவி ஏற்கும்போது வடமத்திய மாகாணத்தில் 40 வீதமான கிராமங்களுக்கே மின்சாரம் வழங்கப்பட்டிருந்தது.

ஆனால் தற்பொழுது 98 வீதமாகக் காணப்படுகிறது என்று அவர் கூறினார்.

# கடன் வழங்குவதை நிறுத்தியது சீனா

கொழும்பு, டிசெ.19
இலங்கைக்கு நீர் மின்சாரத் திட்டத்துக்காக வழங்கப்படவிருந்த 8.9 பில்லியன் ரூபா கடனை சீனா நிறுத்தியுள்ளது.

இலங்கை அரசு சீனாவின் காப்புறுதி நிறுவனத்துக்கு காப்புறுதிக் கட்டணமாக செலுத்தவுள்ள 627 மில்லியன் ரூபாவைச் செலுத்தும் வரை இந்தக் கடன் வழங்குவதை சீன அரசு நிறுத்தி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சீனாவின் தேசிய மின்சாரத் துறை உபகரணக் கூட்டுத்தாபனம், அங்குள்ள வங்கி ஒன்றின் ஊடாக களனி கங்கை நீர்மின்சார திட்டத்துக்காக இலங்கைக்கு கடன் வழங்குவதாக உறுதியளித்திருந்தது.

எனினும் இதனை வழங்குவதற்கு முன்னர் இலங்கை அரசு, குறித்த தொகையில் 7 வீதமான 627 மில்லியன் ரூபாவை காப்புறுதிக் கட்டணமாக சீன காப்புறுதி நிறுவனத்துக்கு செலுத்தவேண்டும் என்று சீன அரசு கோரியுள்ளது. இந்தநிலையில் குறித்த காப்புறுதித் தொகை செலுத்தப்பட்டால் மாத்திரமே கடனை வழங்க முடியும் என்று சீன அரசு இலங்கைக்கு அறிவித்துள்ளது.

## தங்கம் கடத்திய இந்தியப் பெண் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 19
மலவாயிலில் மறைத்து வைத்து தங்கக் கட்டிகளைக் கடத்த முயன்ற இந்தியப் பெண் கட்டுநாயக்காவில் பிடிபட்டார்.

நேற்றுமுன்தினம் அதிகாலை இலங்கையிலிருந்து இந்தியாவுக்குப் புறப்படவிருந்த விமானத்தினூடாக மிகவும்தந்திரமான முறையில் தங்கக் கட்டிகளைக் கடத்த முற்பட்டபோதே சுமார் 31 வயது மதிக்கத்தக்க இந்தியப் பெண் விமான நிலைய சுங்க அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டார்.

இவர் கடத்திய தங்கத்தின் பெறுமதி சுமார் 27 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

பறிமுதல் செய்யப்பட்ட தங்கத்தை அரசுடைமையாக்கிய அதிகாரிகள் குறித்த பெண்ணுக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தனர். (ஐ-16)

## பஹ்ரெய்னில் இலங்கைத் தூதரகம்

பஹ்ரெய்னில் இலங்கை தூதரகம் ஒன்று அமைக்கப்படவுள்ளது என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.பஹ்ரெய்னில் சுமார் 20,000 இலங்கையர்கள் தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இலங்கைத் தூதரகம் ஒன்றை அமைப்பதன் மூலம் பஹ்ரெய்னில் வாழும் இலங்கையர்கள் கூடுதல் நன்மை அடைவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

# படைப்பலத்தை வைத்துக் கொண்டு பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது

### அமைச்சர் ராஜித தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.19
படைப்பலத்தை வைத்துக்கொண்டு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாது எனத் தெரிவித்துள்ள கடற்றொழில்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ண, அரசியல் ரீதியான அணுகுமுறைகள் மூலமே பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வினை எட்டமுடியும் என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

கிளிநொச்சியில் கடந்த வாரம் பூநகரி இரணைமாதா நகரில் கடலுணவு பதனிடல் நிலையத்தினை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நாட்டில் நிலவுகின்ற நீண்ட கால பிரச்சினைக்கு அரசியல் வழிமுறைகள் மூலமே நல்ல தீர்வினை காணவேண்டும். லிபியாவில் ஏற்பட்ட கிளர்ச்சியின்போது அந்நாட்டு படைகளால் லிபியாவின் முன்னாள் ஜனாதிபதி கடாபியை காப்பாற்ற முடியாமல்போனது.

இனவாதங்கள் பேசிக் கொண்டு மீண்டும் மீண்டும் மக்களையும் நாட்டினையும் அழிவுக்கு இட்டுச் செல்வது நல்லதல்ல.

நான் எப்பொழுதும் இனவாதத்தை முற்றாக எதிர்க்கின்றேன். அதுக்கு எதிராகவும் செயற்படுகின்றேன். இதன் காரணமாக சிங்கள மக்களுக்கு எதிராக நான் செயற்படுவதாக தெற்கிலுள்ள சிலர் கூறிவருக்கின்றனர். இருப்பினும் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் குறித்து நான் அலட்டிக் கொள்வதில்லை. அனைத்து மக்களும் நிம்மதியான வாழ்க்கையை வாழ வேண்டும் என்பதே எனது விருப்பமாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

## வீட்டுக்கு தீ வைத்த விஷமிகள்

தென்மராட்சி, டிசெ. 19
வீட்டுக்காரர் வெளியே சென்ற நேரம் பார்த்து விஷமிகள் தீ வைத்ததில் வீடு முற்றாக எரிந்ததுடன், உடைமைகளும் எரிந்து நாசமாகின.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வரணி கரம்பைக்குறிஞ்சி கிழக்கில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி சத்தியசீலன் என்பவர் வீட்டில் தனித்து வாழ்பவர். நேற்றுமுன்தினம் அவர் யாழ்ப்பாணத்தில் உள்ள உறவினர் வீட்டுக்குச் சென்றிருந்த வேளையில் வளவினுள் புகுந்த விஷமிகள் வீட்டினைத் தீயிட்டு எரித்துள்ளனர். அப்போது வீட்டினுள் வைக்கப்பட்டிருந்த பல பெறுமதிமிக்க பொருள்களும் எரிந்து நாசமாகின.

**உறவினர் வீட்டுக்குச் சென்றிருந்த வேளையில் வளவினுள் புகுந்த விஷமிகள் வீட்டினைத் தீயிட்டு எரித்துள்ளனர்.**

காலையில் தகவல் அறிந்து வீட்டுக்கு வந்த வீட்டு உரிமையாளர் சம்பவம் தொடர்பாகக் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-9)

## வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட இரு இளைஞர் மாயம்

மட்டக்களப்பு மாவடியோடைப் பகுதியில் இரு இளைஞர்கள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதே இடத்தைச் சேர்ந்த மயில்வாகனம் ராகுலன் (வயது-35), பா.பத்மநாதன் (வயது-34) ஆகிய இருவருமே காணாமல் போயுள்ளனர். நேற்று இரவு வரை இவர்கள் மீட்கப்படாததால் இவர்களை உயிருடன் மீட்பது கடினம் என பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ஐ-16)

# சட்டக் கல்லூரியும் முஸ்லிம் மயமாகிறது

### தேசிய புத்திஜீவிகள் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ.19
சட்டக்கல்லூரியை முஸ்லிம் மயமாக்க முயற்சிக்கப்பட்டு வருகிறது என்று ஜாதிக ஹெல உறுமய கட்சியின் துணை நிறுவனமான தேசிய புத்திஜீவிகள் சங்கம் குற்றம்சாட்டியுள்ளது.

சட்டக்கல்லூரி அனுமதிக்கான போட்டிப் பரீட்சை பெறுபேறுகளின் மூலம் இந்த முஸ்லிம் மயமாக்கல் அம்பலமாகியுள்ளது.

இந்தமுறை பரீட்சை வினாத்தாள் மதிப்பீடுகளில் முறைகேடு ஏற்பட்டுள்ளதா என்பது குறித்து விசாரணை செய்யப்பட வேண்டும் என்று அந்தச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

முறைகேடுகள் இடம் பெற்றிருந்தால் மீண்டும் பரீட்சை நடத்தப்பட வேண்டும். ஆண்டுதோறும் நடைபெறும் போட்டிப் பரீட்சைக்காக 11,000 பேர் விண்ணப்பித்தபோதிலும், 300 வரையிலான மாணவர்களே சட்டக்கல்லூரியில் இணைத்துக் கொள்ளப்படுகின்றனர் என்று தேசிய புத்திஜீவிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

சிங்கள மொழி மூலம் 80 வீதமானவர்களும், தமிழ் மொழி மூலம் 5 வீதமானவர்களும், ஆங்கிலமொழிமூலம் 15 வீதமானவர்களும் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

இந்தமுறைப் பரீட்சையில் 309 பேர் சட்டக் கல் லூரிக்காக சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர். அதில் 191 சிங்கள மாணவர்களும், 40 தமிழ் மாணவர்களும், 78 முஸ்லிம் மாணவர்களும் சேர்த்துக்கொள்ளப்பட உள்ளனர். தமிழ், முஸ்லிம் மாணவர்களின் எண்ணிக்கை சடுதியான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது என்று தேசிய புத்திஜீவிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட 50 மாணவர்களில் 28 பேர் முஸ்லிம்களாகும்.

முதல் முறையாக பிரதான இடங்களைப் பெற்றுக் கொண்ட மூன்று மாணவர்களும் முஸ்லிம்கள் என்று தேசிய புத்திஜீவிகள் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்த இடங்களை விடுவிக்காமையால் பச்சிலைப்பள்ளி மேற்கு மக்கள் சிரமத்தில்

பளை,டிசெ.19

*சொந்த இடங்கள் விடுவிக்கப்படாமையால் பச்சிலைப்பள்ளி மேற்கு பிரதேச மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். கடந்த 2000 ஆண்டு மார்ச் 26 ஆம் திகதி இரவு பளைப் பகுதியில் இடம்பெற்ற மோதலை தொடர்ந்து இடம்பெற்ற பச்சிலைப்பள்ளி மேற்கின் வேம்பொடுகேணி, இத்தாவில், இந்திராபுரம், முகமாலை போன்ற இடங்களைச் சேர்ந்த சுமார் 300 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் தமது சொந்த இடத்தில் மீளக்குடியமர முடியாமல் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.*

போர் முடிவடைந்து மூன்று வருடங்களுக்கு மேலாகியும் வெடிப்பொருள்கள் அபாய பலகைகளைப் பொருத்தி விட்டு உரிய அதிகாரிகள் ஏனோதானோ என்று இருக்கின்றனர்.

இத்தாவில் பிரிவின் ஒரு பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்த போது கடந்த ஓகஸ்ட் மாதம் வேம்பொடுகேணியின் நவுலாவெளி அம்பாள் ஆலயம் வரையுள்ள பகுதியில் மக்கள் மீளக் குடியமர்த்தப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் நான்கு மாதங்கள் சென்றும் இதுவரை எந்தவொரு மீள்குடியமர்வும் இடம்பெறவில்லை.

மாவட்டத்தில், பிரதேசத்தில் உள்ள உயர் அதிகாரிகளுடன் பேசினால் இன்னும் சில மாதங்களில் விடுவிக்கப்படுமென கடந்த மூன்று வருடங்களாகக் கூறுகிறார்களே தவிர, இடம் பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்த தேவையான எந்தவொரு செயற்பாடுகளும் மேற்கொள்ளவில்லை.

போர் வேளையில் ஒட்டுமொத்தமாக இடம்பெயர்ந்த பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் வேம்பொடுகேணி பிரிவில் முழுமையாகவும், இத்தாவில், முகமாலை பிரிவுகளில் பெரும் பகுதிகளிலும் இன்னமும் மீளக்குடியமர்த்தப்படவில்லை என்று கவலை தெரிவித்தனர் மக்கள்.

இந்தப் பகுதி மக்கள் விடயத்தில் கவனம் எடுப்பார் எவரும் இல்லையா என்றும் கேட்கின்றனர். (ம-9)

# 'காப்பெற்' வீதிகளால் விபத்துகள் அதிகரிப்பு

### அவதானமாக பயணிக்குமாறு பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

வலி.வடக்கு, டிசெ.19

யாழ்.குடாநாட்டில் பிரதான வீதிகளுக்குக் 'காப்பெற்' போடப்பட்டு வரும் நிலையில் விபத்துக்களும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

எனவே பயணிகள் மிகவும் அவதானமாகப் போக்குவரத்து நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜிப்றி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நிலவும் போக்குவரத்துப் பிரச்சினைகள், அதிகரித்துள்ள விபத்துகள் தொடர்பாக கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

போக்குவரத்துச் செய்யும் வாகனங்கள் உரிய முறையில் சைகைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

போக்குவரத்துச் செய்யும் வாகனங்கள் உரிய முறையில் சைகைகளைக் கடைப் பிடிக்க வேண்டும்.

வாகனச் சாரதிகளைப் பயிற்றுவிப்போர் உரிய வகையில் பயிற்சிகளை வழங்க வேண்டும். சைகைகள் அனைத்தையும் இவர்கள் அறிந்துள்ளனரா என்பதைப் பயிற்றுவிப்பாளர்கள் உறுதி செய்ய வேண்டும்.

உரிய சைகைகள் குறித்து அறியாத சாரதிகளாலேயே விபத்துக்கள் அதிகம் ஏற்படுகின்றன.

இந்த விடயங்களில் எதிர்வரும் காலங்களில் போக்குவரத்துப் பொலிஸார் கடும் நடவடிக்கை எடுப்பர்- என்று கூறினார். (ம-86)

## தொழிலாளர் சட்டங்களை பின்பற்றுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,டிசெ.19

வாத்தக நிலையங்கள் விடுமுறை நாள்களில் பூட்டப்பட்டுத் தொழிலாளர்களுக்கு அன்றைய தினம் விடுமுறை வழங்க வேண்டும் என்ற தொழில் சட்ட விதிகளைப் பின்பற்ற வேண்டும்.

குறிப்பாகக் கிராமப்புறத்தை விட நகர் பகுதிகளில் அனைத்து வர்த்தக நிலையங்களும் ஞாயிறு மற்றும் வர்த்தக விடுமுறை நாள்களைப் பின்பற்றி நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வடமாகாண பிரதி தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய சேவை நிலையங்களைத் தவிர ஏனைய வர்த்தக நிலையங்கள் விடுமுறை நாள்களில் மூடப்பட வேண்டும்.

தொழில் சட்டத்துக்கு அமைவாக மூடப்படாத வர்த்தக நிலையங்கள் மீது தொழில் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதனைவிடக் கிராமப்புறங்களில் மக்களின் தேவை கருதி வர்த்தக நிலையங்களைத் திறந்தே வியாபாரம் செய்ய வேண்டும்.

அதனை விடத் தொழிலாளர்கள் எட்டு மணி நேரத்துக்குப் பின்னர் கடமையாற்றுபவராக இருந்தால் மேலதிக கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும். - என்று அவர் மேலும் கூறினார். (ம-17)

# சுகாதார வாரத்தில் நன்மையடைந்த மக்கள்

தென்மராட்சி, டிசெ.19

மாகாண சுகாதார அமைச் சால் முன்னடுக்கப்பட்ட தேசிய சுகாதார வாரத்தில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையும் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரும் இணைந்து மேற்கொண்ட சேவைகளால் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான மக்கள் பயனடைந்துள்ளனர்.

கடந்த பத்தாம் திகதி தொடக்கம் நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் தேசிய சுகாதார வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

கடந்த பத்தாம் திகதி தொடக்கம் நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் தேசிய சுகாதார வாரம் அனுஷ் டிக்கப்பட்டு வருகிறது.

தேசிய சுகாதார வாரத்தில் சாவகச்சேரி நகரசபையின் உத்தியோகத்தர் ஊழியர் களுக்கான தொற்றா நோய் சிகிச்சை, கெற்பேலி அ.த.க. பாடசாலையில் மருத்துவ முகாம், கைதடி முதியோர் இல்லத்தில் கண் சிகிச்சை முகாம், கச்சாயில் நீரிழிவு சிகிச்சை முகாம், வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவுக்கு வருவோருக்கு தின மும் விழிப்புணர்வு கருத்தரங்கு, உலக எயிட்ஸ் தினம், பாடசாலைகளில் சுகாதாரக் கருத்தரங்கு, பொது அமைப்புகளின் உதவியுடன் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு செயற்பாடுகள் போன்றவை மேற்கொள்ளப்பட்டன.

கெற்பேலி, கச்சாய், கைதடி போன்ற இடங்களில் வைத்தியசாலையின் பொது வைத்தியர் மற்றும் பயிற்றப்பட்ட தோல் மற்றும் கண் ஆகியவற்றின் வைத்திய அதிகாரிகளால் நடத்தப்பட்ட பரிசேதானையின்போது பாதிப்புக்கு உள்ளானவர்களை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, யாழ். போதனா வைத்தியசாலை ஆகியவற்றில் சிகிச்சைபெற மேலதிக சிகிச்சை ஆலோசனை வழங்கப்பட்டது.

அத்துடன் பார்வையில் குறைபாடு காணப்பட்டவர் களுக்கு விஷன் 2020 திட் டத்தின் கீழ் இலவச கண் சத்திர சிகிச்சை செய்யவும் சிபார்சு செய்யப் பட்டுள்ளது. (ம-9)

## தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் படையினர் சிரமதானம்



*சுகாதார வாரத்தை முன்னிட்டு தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் படையினர் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த சிரமதானப் பணியில் 515 ஆவது படையணி பிரிகேடியர் ரத்தெனியகல தலைமையில் ஈடுபட்டனர். வைத்தியசாலை வளாகத்தின் சுற்றுப்புறங்களில் இருந்த பற்றைகள் வெட்டப்பட்டுக் கழிவுகளும் அகற்றப்பட்டன. நுளம்புப் பெருக்கத்தைத் தடுக்கும் நோக்குடன் சிரமதானப் பணிகள் இடம்பெற்றன.* (ம-86)

## நிகழ்வுகள் இன்று

### ஒளிவிழா

சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் நடத்தும் ஒளி விழா காலை 9 மணிமுதல் பிரதேச செயலர் க.முரளிதரன் தலைமையில் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். (ம-100)

### பரிசளிப்பு விழா

நல்லூர் பிரதேச சபையின் ஏற்பாட்டில் ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் அனுசரணையுடன் தேசிய வாசிப்பு மாதமும் பரிசளிப்பு விழாவும் பிற்பகல் 2 மணிக்கு திருநெல்வேலி பழங்கிணற்றடி கோயில் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஏசியா பவுண்டேசன் நிறுவனப் பணிப்பாளர் அன்ரன் நல்லதம்பி, சிறப்பு விருந்தினர்களாக வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவர் திருமதி நா.ஐங்கரன், நல்லூர் பிரதேச சபை உபதவிசாளர் திருமதி கோ.ரவிதாஸ், நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் கி.தர்மரட்ணம், பிராந்திய தொலைத்தொடர்பு அலுவலக முகாமையாளர் எஸ். சிவானந்தன், யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் திருமதி கல்பனா சந்திரசேகர், சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கி.சத்தியலோகன் ஆகியோர் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வில் கோண்டாவில் பொது நூலகத்தால் நடத்தப்பட்ட தமிழ் வாசிப்பு, ஆங்கில வாசிப்பு, சித்திரம், சுவரொட்டி, துண்டுப் பிரசுரம், வர்ணம் தீட்டல், சிறுகதை, கட்டுரை ஆகிய போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குச் சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் தனி மனித ஆளுமை பயிற்சிப் பட்டறையில் பங்கு பற்றியவர்களுக்கு சான்றிழ்கள் வழங்கலும் இடம்பெறும். (ம-14)

### கௌரவிப்பு

இலங்கை போக்குவரத்துச் சபையின் நலன்புரிசங்க உறுப்பினர்களின் பிள்ளைகளில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை, சாதாரண தரப் பரீட்சை, உயர்தரப் பரீட்சை ஆகியவற்றில் சித்தி பெற்றவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு காலை 9 மணிக்கு கோண்டாவில் சாலையில் இடம் பெறவுள்ளது என்று சாலை முகாமையாளர் எஸ்.குல பாலசெல்வம் தெரிவித்தார். (ம)

### விருது விழா

யாழ்ப்பாணம்,டிசெ.19

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தின் ஏற்பாட்டில் இளைஞர் விருது விழா மாலை 4.30 மணிக்கு யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலை அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற செயற்பாட்டு முகாமையாளர் மிலிந்த ராஜபக்ஷ, யூஎஸ்.எயிட் நிறுவன பிராந்திய திட்டமுகாமையாளர் ஸ்ரீமதி டோன் ஷேடன், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற [illegible] சந்திரபுலா ஆகியோர் கலந்துகொள்வர். (ம-14)




*யாழ். நகரின் மத்தியில் வின்சர் சந்திக்கு அருகிலுள்ள வண்ணாங்குளத்தை ஆழமாக்கி புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தக்குளம் நீண்டகாலமாகக் கவனிப்பாரின்றி பற்றைகள் மூடிக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.* (ம-135)

## பாஷையூர் கடற்றொழிலாளர் சங்கத்துக்கு புதிய கட்டடம்

யாழ்ப்பாணம்,டிசெ.19

பாஷையூர் புனித அந்தோனியார் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்துக்குப் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடம் இன்று மாலை 4.30 மணியளவில் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

பிரதம விருந்தினராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் சிறப்பு விருந்தினராக யாழ்.மாநகரசபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜாவும் கௌரவ விருந்தினராக பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய பங்குத் தந்தை அருட்பணி றோய் பேடினன் அடிகளாரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பெண்களை இராணுவத்தில் சர்வதேசம் தடுத்து நிறுத்த வேண்டும்

## பழ. நெடுமாறன் கோரிக்கை

இலங்கை இராணுவத்தில் தமிழ் பெண்கள் கட்டாயமாக இணைக்கப்படுவதை எதிர்த்து சர்வதேச சமுதாயம் குரல் கொடுக்க வேண்டும் என்று இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பழ. நெடுமாறன் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

இது குறித்து நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இலங்கை இராணுவத்தில் முதல் முறையாக தமிழ் பெண்களை இணைக்கும் திட்டத்தை அந்தநாட்டு அரசு செயற் படுத்தி வருகிறது. மாதம் 30 ஆயிரம் ரூபா கொடுப்பனவு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் வேலைக்கு விண்ணப்பித்த பெண்களை இராணுவப் ப்யிற்சிக்கு கட்டாயப்படுத்தி அனுப்பியுள்ளனர்.

பயிற்சி முகாம்களில் உள்ள அவர்களைச் சந்திக்க பெற்றோர், குடும்பத்தினருக்கு அனுமதி மறுக் கப்படுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடா ளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன், தமிழ்ப் பெண்களுக்கு அளிக்கப்படும் இந்தப் பயிற்சி குறித்து சந்தேகம் தெரிவித்துள்ளார்.

பயிற்சியில் இணைக்கப்பட்ட 103 பெண்களும் அங்கிருந்து வெளியேற விரும்புவதாகவும், ஆனால் அவர்களைக் கட்டாயப்படுத்தி பயிற்சி பெற வைப்பதாகவும் அவர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

மனித உரிமை மீறல் மற்றும் பாலியல் குற்றச் சாட்டுகளுக்கு ஆளாகியுள்ள இலங்கை இராணுவம், தமிழ்ப் பெண்களைக் கட்டாயப் படுத்தி இராணுவத்தில் சேர்ப்பது அப்பட்டமான மனித உரிமை மீறலாகும்.

இதனை சர்வதேச சமு தாயம் கண்டிக்க வேண் டும்-என்றுள்ளது. (வ)

# ஒரு மில்லியன் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு

இந்த வருடத்தில் மட்டும் இலங்கைக்கு வருகைதந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஒரு மில்லியனை எட்டியுள்ளதாக சுற்றுலாத்துறை அபிவிருத்திச் சபை அறிவித்துள்ளது.

நேற்றுடன் இந்த வருடத்தில் வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 950,000 ஆகப் பதிவாகியுள்ளது.

கடந்த ஐந்து வருடங்களுடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்திலேயே அதிகளவானோர் இலங்கைக்கு உல்லாசப் பயணிகளாக வருகை தந்துள்ளனரென சுற்றுலா அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது. அடுத்த ஆண்டில் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்குமென எதிர்பார்ப்பதாகவும் சபை தெரிவித்துள்ளது. (ஐ-16)

## ஷிராந்தியின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

சாத்திட்டார்.ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் 18 ஆம் திகதி தேசிய கண்தான தினமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

இதுவரை இலங்கையில் ஒரு மில்லியன் பேர் கண்தானம் செய்துள்ளனர். மில்லியனாவது நபராக ஷிராந்தி ராஜபக்ஷவின் கண் தானம் பதிவாகியுள்ளது. (ஐ-16)

## இலங்கை மீது...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பாம் ஜில் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையின் தற்போதைய மோசமான மனித உரிமை மீறல் நிலைமைகள் தொடர்பாகக் கருத்துக்கூறிய பாம் ஜில், இடம் பெற்ற பல்வேறு மனித உரிமை மீறல் குற்றங்கள் குறித்து, குறிப்பாக அண்மையில் இடம்பெற்ற யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கைது தொடர்பாக தனது கவலையை வெளியிட்டார்.

யாழ். பல்கலை மாணவர் கைது தொடர்பாக தனது தொகுதியைச் சேர்ந்த பல பொது மக்களும் தன்னிடம் தங்கள் கவலையை வெளிப்படுத்தினர் எனக் குறிப்பிட்ட பாம் ஜில், மாணவர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான அவர்களது கரிசனையில் தானும் பங்கேற்கிறார் எனக் கூறினார்.

மனித உரிமையும், பேச்சுச் சுதந்திரமும் மதிக்கப்படும் கனேடிய நாட்டில் வாழும் நாம், அதே உரிமைகளை கனேடியர்களின் உறவுகளும் பெற வேண்டுமென்று நினைக்கிறோம். இலங்கை அரசு, தனது நாட்டின் குடிமக்களது அடிப்படை மனித உரிமைகளை வழங்குவதுடன், அவர்கள் ஒன்றாகக் கூடி தங்களது எதிர்ப்பை அமைதியான முறையில் வெளிப்படுத்தும் உரிமையையும் மதிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன் எனவும் தெரிவித்தார்.

கனேடிய வெளிவிவகார அமைச்சர் யோண் பெயார்ட் ஏற்கனவே பலதடவைகள் கூறியபடி, இலங்கையில் அமைதியான தீர்வு ஏற்படவும், யாழ். பல்கலைக்கழகத்தின் பதற்றமான சூழ்நிலையை முடிவுக்குக்கொண்டு வரவும், தனது இணை ஆதரவை வழங்குகிறார் எனவும் பாம் ஜில் தெரிவித்தார்.

அமைச்சர் பெயார்ட், இலங்கை பற்றிய தனது கருத்துக்களைத் தெரிவித்தபோது, அந்த நாட்டில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் மற்றும் இன அழிப்பு தொடர்பான நீதியான விசாரணை நடத்தப்படுவதற்கு அந்நாட்டு அரசு ஒத்துழைக்க வேண்டுமெனக் கோரியிருந்தார். மக்களது தேவைகளே முதன்மைப் படுத்தப்பட வேண்டுமென்றும் அவர் தெரிவித்திருந்தார்.

அமைச்சரின் இந்தக் கருத்துக்களை நாடாளுமன்ற உறுப்பினர் பாம் ஜில்லும் வலியுறுத்தினார்.

## 13 இற்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மேற்கண்டவாறு தெரிவித்தார்.

''அந்த இனம், இந்த இனம் என பாகுபாடு பார்க்கும் தருணமல்ல இது. நாம் அனைவரும் இலங்கையர்கள் என்ற உணர்வுடன் சமத்துவத்தை நோக்கிப் பயணிக்கவேண்டும். இப்பயணத்தின்போது எவரையும் ஒதுக்கி வைத்துவிடக்கூடாது.

அத்துடன், நாட்டில் தற்போது இருப்பவை அப்படியே இருக்கட்டும். அவற்றை ஏன் நீக்கவேண்டும். 13ஆவது அரசமைப்புத் திருத்தச்சட்டத்தை நீக்குவது தொடர்பில் அரசோ அல்லது அமைச்சரவைக் குழுவோ எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை. அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சரொருவர் என்ற அடிப்படையில் இதனை நான் பொறுப்புடன் கூறுகின்றேன்.

13 விவகாரம் தொடர்பில் அரசுக்குள் இருப்பவர்கள் வெவ்வேறான நிலைப்பாடுகளைக் கொண்டிருக்கலாம். ஆனால், மக்களுக்கு என்ன தேவையோ அதற்கேற்பதான் எனது நிலைப்பாடு இருக்கும். நான் 13இற்கு எதிரானவன் அல்லன்'' - என்று அமைச்சர் மேர்வின் தெரிவித்தார்.

## கொலைச்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

யாழ்.மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே. விஸ்வநாதன் முன்னிலையில் சந்தேகநபர்களின் பிணை மனு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

2010 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 30 ஆம் திகதி அல்வாய் தெற்கைச் சேர்ந்த தேவசகாயம் துளசி (வயது-19)என்ற இளம்பெண் வன்புணர்வு செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டார். இதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் அதே இடத்தைச் சேர்ந்த இலங்கநாகன் புஸ்பராணி, இலங்கநாகன் உதயகுமார், கணேஸ் ஜெயசீலன் ஆகியோர் பருத்தித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார். சுமார் இரண்டு வருடங்களாக இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இவர்களுக்கு நிபந்தனையுடன் பிணை வழங்கப்பட்டுள்ளது.

முதலாவது சந்தேக நபர் 2 இலட்சம் ரூபா பெறுமதியான தலா 2 ஆள் பிணையில் விடுவிக்கப்பட்டார். இரண்டாம், மூன்றாம் சந்தேக நபர்கள் தலா 30 ஆயிரம் ரூபா பெறுமதியான ரொக்கப்பிணையிலும் தலா 2 இலட்சம் ரூபா பெறுமதியான 2 ஆள் பிணையிலும் விடுவிக்கப்பட்டனர். ஒவ்வொரு மாதமும் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் இடையே பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் [illegible] கையொப்பமிட வேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டது. (த-4)

## குற்றப்பிரேரணை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

படாவிட்டால், அது பொதுநலவாய அரச தலைவர்களின் தீர்மானங்களை மதிக்காத செயலாகும் எனத் தெரிவித்தார். ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க. ''மக்களை மரண பீதிக்குள் தள்ளும் வெள்ளை வான் கலாசாரத்தை மீண்டும் கொண்டுவந்து நாட்டில் மீண்டும் அபாயநிலையைத் தோற்றுவிக்க அரசு அத்திபாரமிடுகிறது'' என்றும்கூறினார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சட்டத்தரணி குணரட்ன வன்னிநாயக்க மீது நேற்று (நேற்றுமுன்தினம்) அச்சுறுத்தல் விடுத்து கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப் பிரேரணை நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கப் பிரதிநிதிகளை அச்சுறுத்தி, அவர்களை அடக்க அரசு முயற்சிக்கிறது. சட்டத்தரணி குணரட்னவுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் ஏனைய சட்டத்தரணிகளுக்கும் எதிர்காலத்தில் விடுக்கப்படலாம்.

நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ண மீது தாக்குதல் நடத்தியவர்களை கைதுசெய்ய அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. இந்நிலையில், சட்டத்தரணி குணரட்னவுக்கு அச்சுறுத்தல் விடுத்த சந்தேகநபர்களை தம்மால் கைது செய்ய முடியவில்லை என அரசு கூறினாலும் புதுமை இல்லை.

**மீண்டும் வெள்ளை வான் கலாசாரம்**

சட்டத்தரணி குணரட்ன வன்னிநாயக்கவுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் சாதாரணமானதல்ல. இதனூடாக மக்களை மரணப் பீதிக்குள் தள்ளும் வெள்ளை வான் கலாசாரத்தை மீண்டும் கொண்டுவந்து நாட்டில் அபாயநிலையைத் தோற்றுவிக்க அரசு அத்திபாரமிடுகிறது. வெள்ளை வான் கலாச்சாரம் தொடர்பான கடந்தகால அனுபவங்கள் அதிகம் இருக்கின்றன. எனவே, மீண்டும் அந்த அபாய நிலையை நாட்டில் உருவாக்க வேண்டாம்.

குற்றச் செயல்கள் புரிபவர்களைக் கைது செய்ய பாதுகாப்புத் தரப்பினருக்கு சரியான உத்தரவுகளை வழங்கி, சரியான முறையில் அவர்களை வழிநடத்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.

## மூன்று ...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

கடந்த 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை நெல்லியடிப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர்கள் என்ன குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள், அவர்கள் மீது என்ன விசாரணைகள் அல்லது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்பது குறித்து அதிகாரிகள் இதுவரையில் எந்தவொரு முழுமையான தகவலையும் வெளியிடவில்லை. (த-5)

## சிப்பாய்களை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

செய்த யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டு துன்புறுத்தப்படுகிறார்கள் என்று அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்ப்பாணம் என்ற பெயரைச் சுருக்கமாக யாழ். எனக் கூறினாலே சிங்களவர்கள் கோபாவேசம் கொள்கிறார்கள் எனக் குறிப்பிட்டுள்ள கருணாநிதி யாழ். பொது நூலகம் எரிக்கப்பட்டமை, உலகத் தமிழர் மாநாட்டில் அறிஞர்கள் தாக்கப்பட்டமை என்பவற்றையும் சுட்டிக்காட்டி தற்போதைய இலங்கை நிலை தொடர்பாக இந்திய அரசின் உடனடித் தலையீடு அவசியமானதென வலியுறுத்தியுள்ளார். (ஐ-16)

## 15 பேர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பட்டோர் காணாமல்போயுள்ளனர். பலர் படுகாயமடைந்துள்ளனர்.

சீரற்ற காலநிலை சுழல் காற்று காரணமாக 92 வீடுகள் முற்றாகவும், 499 வீடுகள் பகுதி அளவிலும் சேதமடைந்துள்ளன. இடம்பெயர்ந்த ஆயிரத்து 791 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 312 பேர் 29 தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

**வடக்கு, கிழக்கில்**

வடக்கு, கிழக்கிலும் காலநிலை சீரற்றுக் காணப்படுகின்றது. இதனால் மக்கள் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகளவு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

**குருநாகல் மாவட்டம்**

குருநாகல் மாவட்டத்தில் ஆயிரத்து 395 குடும்பங்களைச் சேர்ந்த 5ஆயிரத்து 229பேர் பாதிக்கப்பட்டுள்ளளர்.

**காலி மாவட்டம்**

இங்கு ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 4பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**அம்பாந்தோட்டை மாவட்டம்**

இங்கு ஆயிரத்து 514 குடுடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 933பேர் பாதிப்படைந்துள்ளனர்.

**மொனராகலை மாவட்டம்**

இங்கு 47 குடும்பங்களைச் சேர்ந்த 156 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், 37 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

**மண்சரிவால் போக்குவரத்து முடக்கம்**

கொழும்பு - பதுளை பிரதான வீதி, பெரகல, ஹப்புத்தளையில் நேற்று முற்பகல் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக குறித்த வீதியினூடான போக்குவரத்து முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் இவ்வீதியினூடாகப் பயணத்தை மேற்கொள்ள உள்ளவர்கள் மாற்று வீதிகளைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**மலையக ரயில் சேவைகள் பாதிப்பு**

சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு, மண்சரிவு, மரம் முறிவு போன்ற இடர்களால் மலையகத்திற்கான ரயில் சேவைகள் பாதிப்படைந்துள்ளன.

கொழும்பு - பதுளை ரயில் சேவைகள் நானு ஓயாவிற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என ரயில்வே கட்டுப்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

ஒஹிய மற்றும் இதல்கஸ்ஹின்ன ஆகிய ரயில் நிலையங்களுக்கிடையில் இடிந்து வீழ்ந்திருந்த மண்மேட்டுக்குள் ரயில் இயந்திரம் சிக்கியதால் அந்த ரயில் தடம் புரண்டுள்ளது.

இதனால் கொழும்பு மற்றும் கண்டியிலிருந்து பதுளை நோக்கி பயணிக்கும் ரயில் சேவைகள் நானுஓயா ரயில் நிலையத்திற்கும். பதுளையிலிருந்து கொழும்பை நோக்கி பயணிக்கும் ரயில் சேவைகள் அப்புத்தளை ரயில் நிலையத்திற்கும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

**வெள்ளம் அள்ளிச்சென்ற பாலம்**

இதேவேளை, வெள்ளத்தினால் இரும்பு பாலம் ஒன்றும் அடித்துச்செல்லப்பட்டுள்ளது. மஹியங்கனையில் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மஹியங்கனை-தெய்யத்தகண்டி பிரதான வீதியில் உல்ஹிட்டி எனும் இடத்திலுள்ள பாலமே இவ்வாறு வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளது என கிராந்துருகோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், வெள்ளப்பெருக்கினால் 150 குடும்பங்கள் அந்தப் பிரதேசத்தில் நிர்க்கதியாகியுள்ளன என மஹியங்கனை பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது.

**இரவு தபால் ரயில் சேவைகள் இரத்து**

இது இவ்வாறிருக்க, நேற்று செவ்வாய்க்கிழமை இரவு சேவையில் ஈடுபடவிருந்த சகல இரவு தபால் சேவை ரயில்களும் இரத்துச்செய்யப்பட்டன என்று ரயில்வே கட்டுப்பாட்டுச்சபை அறிவித்துள்ளது.

மலையகம் மற்றும் வடக்கு ரயில் தண்டவாளங்கள் மண்சரிவு மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டிருப்பதால் நேற்றிரவு சேவையில் ஈடுபடுத்தப்படவிருந்த சகல இரவு தபால் சேவைகளும் இரத்து செய்யப்பட்டன என்று ரயில்வே கட்டுப்பாட்டுச்சபை மேலும் தெரிவித்துள்ளது.

**நீர்த்தேக்க வான்கதவுகள் திறப்பு**

நாட்டின் பல பாகங்களிலும் பெய்துவரும் அடை மழை காரணமாக ராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் ஆறு வான் கதவுகள் அவசரமாக திறக்கப்பட்டுள்ளன. கலாஓயாவின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதால் இந்த வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என புத்தளம் இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

கலாஓயாவை அண்மித்து வசிக்கும் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. அத்துடன், மீஓயாவின் நீர்மட்டமும் அதிகரித்துள்ளதால், இங்கினியாகல நீர்த்தேக்கத்தின் மூன்று வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன. மேலும், உடவலவ நீர்த்தேக்கத்தின் நான்கு வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன என்று இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை இன்னும் சில நாள்களுக்கு தொடரும் என்பதால் மக்களை அவதானத்துடன் இருக்ககுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(முன்னர் வந்த செய்தி 15 ஆம் பக்கத்தில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தெற்குக்கு ஒரு வகைசார் நீதி வடக்குக்கு மற்றொரு நீதியா?

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு வெலிக்கந்தையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நால்வரும் உடனடியாக விடுதலை செய்யப்படுவதற்கான சாத்தியம் அருகி வருகிறது: நம்பிக்கை குறைந்து வருகிறது.

தெற்கில் ஜே.வி.பியினர் அரசுக்கு எதிரான கிளர்ச்சிகளில் உயிர்நீத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்த அனுமதிக்கப்படும் போது வடக்கில் களத்தில் பலியான தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தத் தடைவிதிப்பது எந்த வகையில் நியாயம்? இது தொடர்பாக தாமதத்தின் பின்னர் தனது மௌனத்தைக் கலைத்து ஜனாதிபதி வாய் திறந்துள்ளார். ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசனுக்கு அவரது பிறந்த நாளன்று கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, ஜே.வி.பியும் புலிகள் இயக்கமும் வெவ்வேறானவை என்று தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியினர் நடத்திய போராட்டத்துக்கும் புலிகள் நடத்திய போராட்டத்துக்கும் இடையில் வேறுபாடுகள் உள்ளன. ஜே.வி.பி. நாட்டைப் பிரிக்கப் போராட்டம் நடத்தவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகள் நாட்டைப் பிரிக்கப் போராட்டம் நடத்தினார்கள். ஜே.வி.பி. இன்று தடைசெய்யப்பட்ட இயக்கம் அல்ல. விடுதலைப் புலிகள் அமைப்பு நாட்டில் தடை செய்யப்பட்டுள்ளது என்றும் விளக்கமளித்துள்ளார். ஆகவே, வடக்கில் படையினர் ஆரம்பித்துள்ள கைது நடவடிக்கைகள் தொடரத்தான் போகின்றன. கைதுசெய்யப்படுவோருக்குப் புனர்வாழ்வு அளிப்பது குறித்து பாதுகாப்புச் செயலர் கோத்தபாய கருத்து வெளியிட்டுள்ளார்.

ஜே.வி.பியினர் - தமிழீழ விடுதலைப் புலிகள், இந்த இரண்டு இயக்கங்களுமே ஜனாதிபதி கூறியதுபோன்று வெவ்வேறான நோக்கம் கொண்டவை. ஜே.வி.பி. நாடு முழுவதையும் பிடிக்கப் போராடியது. புலிகள் நாட்டின் ஒரு பகுதியில் ஆட்சி நடத்துவதற்குப் போராடினார்கள். இதுதான் வேறுபாடு.

1960 களின் பிற்பகுதியில் உருவாகிய ஜே.வி.பி., மிகவும் குறுகிய காலத்தில் வளர்ச்சி அடைந்து 1971 ஏப்ரலில் சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான மிகப் பலம் வாய்ந்த ஐக்கிய முன்னணி அரசுக்கு எதிராக ஆயுதக் கிளர்ச்சி நடத்தி தோல்வி கண்டது. மீண்டும் பிரேமதாஸ ஆட்சிக்காலத்தில் 1988 - 89 துகளில் நடத்திய கிளர்ச்சியிலும் ஜே.வி.பி. தோல்வி கண்டது. மிகவும் கொடூரமான முறையில் அக்கிளர்ச்சி அடக்கப்பட்டது. 1971 கிளர்ச்சியில் 15 ஆயிரம் தென் இலங்கை இளைஞர்களும், 1988 - 89 இல் 60 ஆயிரம் தென் இலங்கை இளைஞர்களும் அரசபடையினரால் கொல்லப்பட்டனர். ஜே.வி.பி. தலைவர் றோஹண விஜேவீர 1989 இல் பிடிக்கப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஆயுதபலம் மூலம் அரசைக் கைப்பற்றும் இந்த இரண்டு முயற்சிகளும் தோல்வி அடைந்த பின்பு ஜே.வி.பி. நாடாளுமன்றத் தேர்தல் மூலம் ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கத்துடன் அரசியல் நீரோட்டத்தில் இணைந்து கொண்டது. ஆனால் அதுவும் தப்புக்கணக்காகிவிட்டது. ஜே.வி.பி. இன்று பிளவுபட்டு பல துண்டுகளாகச் சிதறுண்டு போய்விட்டது. நாடாளுமன்றப் பலத்தையும் இழந்து பலவீனமாகிவிட்டது.

தமிழ் மக்களின் உரிமைகள் தென்னிலங்கை ஆட்சியாளர்களினால் நசுக்கப்பட்டு, சாத்வீகப் போராட்டங்கள் அனைத்தும் தோல்வி அடைந்த நிலையில் 1970 களின் பிற்பகுதியில் விடுதலைப் போராட்டங்களுக்கான ஆயுதம் ஏந்திய இயக்கங்கள் எழுச்சி பெற்றன. இவற்றுள் பலமானதான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் 4 ஆவது ஈழப்போரில் 2009 மே மாதம் அழிக்கப்பட்டுவிட்டது. அதன் தலைவர் பிரபாகரனும் கொல்லப்பட்டுவிட்டார். ஜே.வி.பி., அரசுக்கு எதிரான தனது இரு கிளர்ச்சிகளிலும் பல்லாயிரக்கணக்கான தனது போராளிகளை இழந்தது போன்று, விடுதலைப் புலிகள் இயக்கமும் நான்கு ஈழப் போர்களிலும் பல்லாயிரக்கணக்கான தனது உறுப்பினர்களை இழந்தது.

அத்தகைய நிலையில் மரணித்தவர்களின் உறவினர்கள் தமது உறவுகளை நினைவுகூர்ந்து தீபமேற்றுவதற்குத் தடைவிதிப்பது மனித நேயம் ஆகாது. மரணித்தவர்களுக்கு அஞ்சலி செய்வதால் மரணித்தவர்கள் உயிர்த்தெழுந்து விடப்போவதில்லை.

இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவது அரசியலுக்கு அப்பாற்பட்டது. ஜே.வி.பியினர் இன்று தமிழ்ப் பகுதிகளிலும் தமது அரசியல் நடவடிக்கைகளை விஸ்தரித்துள்ள போதிலும், அன்று சிங்கள மக்களின் உரிமைகளை முன்னிறுத்தியே போராடினார்கள். இவை இரண்டும் ஒரு வகையில், அந்தந்தக் காலத்தின் தேவைகளாக இருந்தன என்பது தப்பன்று. விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் போராடினார்கள்.

இன்று புலிகள் அழிக்கப்பட்ட நிலையில், ஜே.வி.பி. அரசியல் நீரோட்டத்தில் இணைந்து தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கிறது. 1960களின் பிற்பகுதியில் அது ஆரம்பிக்கப்பட்டபோது பல்கலைக்கழகங்கள் மற்றும் சமூக அமைப்புகளுக்குள் ஊடுருவும் யுக்தியை எப்படிக் கையாண்டதோ, அதே யுக்தியையே அரசியல் நீரோட்டத்துக்குள் பிரவேசித்த பின்பும் தொடர்கிறது. இத்தகைய ஒரு நிலையில் ஜே.வி.பிக்கு ஒரு நீதி, தமிழ் மக்களுக்கு இன்னொரு நீதி சம தர்மமும் அன்று. ஏற்புடையதுமன்று. இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவது அடிப்படை மனித உரிமை.

வெலிக்கந்தையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பல்கலைக்கழக மாணவர்களை விடுதலை செய்து அரசு தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வேண்டும். தெற்குக்கு ஒரு நீதி, வடக்குக்கு இன்னொரு நீதி என்றால் அது ஜனநாயக ஆட்சி அன்று. சர்வாதிகாரத்தை நோக்கிய போக்கன்றி வேறல்லவே...!

# மாவட்டங்களின் எல்லைகளை நிர்ணயம் செய்வதற்கு குழு

கொழும்பு,டிசெ.19

மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளின் அதிகாரத்துக்கு உட்பட்ட பிரதேசங்கள் அனைத்தையும் தொகுதிகளாகப் பிரிப்பது தொடர்பாக தேசிய எல்லை நிர்ணயக் குழு ஒன்றும் மாவட்டங்கள் தொடர்பான எல்லை நிர்ணயக் குழுவும் நியமிக்கப்பட்டுள்ளன.

தேசிய எல்லைகளை நிர்ணயம் செய்வது தொடர்பாக ஐந்து உறுப்பினர்களைக் கொண்டுள்ள குழு ஒன்று நியமனம் செய்யப்பட்டுள்ளதோடு அந்தக் குழுவின் தலைவராக ஜயலத் ரவிதிஸாநாயக்க நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

மாவட்டங்களின் எல்லைகளை நிர்ணயிக்கும் குழுக்கள் தொடர்பாக உறுப்பினர்கள் ஆறு பேர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மாவட்டச் செயலாளர் அந்தக் குழுக்களின் தலைவராகச் செயற்படுவார்.

தற்போது நிலவும் மாநகர சபைகள், நகரசபைகள் மற்றும் பிரதேச சபைகளின் அதிகாரப் பிரதேசங்களைத் தொகுதிகளாகப் பிரித்தல், இந்தத் தொகுதிகளின் எல்லைகளைத் தெளிவாகக் குறிப்பிடுதல் மற்றும் நிர்ணயித்தல், இது தொடர்பாக பொது மக்கள், மக்கள் பிரதிநிதிகள், சுயேச்சையான அமைப்புக்கள் போன்றவற்றின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளைப் பெறுதல், அந்தத் தொகுதிகளுக்கு பெயர், இலக்கம் வழங்குதல் போன்றனவே தேசிய எல்லை நிர்ணயக் குழுவினதும் மாவட்ட எல்லை நிர்ணயக் குழுக்களதும் கடமைப் பொறுப்புக்களாகும்.

இந்தத் தொகுதிகளைப் பிரித்து ஒதுக்கும் கருமத்தின் போது, சனத்தொகை, சனச்செறிவு, இனங்களின் விகிதாசாரம், பூகோளப் பிரதேசங்கள் மற்றும் பூகோளம்சார் லட்சணங்கள், பொருளாதார அபிவிருத்தி மட்டம் என்ற காரணிகள் கவனத்தில் கொள்ளப்படுவதற்கு சட்டத்தின் கீழ் விதிமுறைகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

2012 இலக்கம் 22 ஐக் கொண்டுள்ள உள்ளூராட்சி நிறுவன வாக்களிப்பு சட்டத்துக்கு அமைய அடுத்துவரும் உள்ளூராட்சி நிறுவனத் தேர்தல் தொகுதி வாரி முறைமை மற்றும் விகிதாசார முறைமை என்ற இரண்டும் கலந்ததாகவே நடத்தப்படவுள்ளது.

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் தேசிய எல்லை நிர்ணயக் குழுவின் செயலாளர் ஆர்.ஏ. ஏ. கே.ரணவக்கவினால் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. (ம-22)

## முதியோர் அ.அட்டை பெற முன்வராத பிரதேச மக்கள்

தென்மராட்சி,டிசெ.19

தென்மராட்சி பிரதேசத்தில் முதியோர் அடையாள அட்டை விண்ணப்பம் கிடைத்த தினத்தன்று வழங்கும் நடைமுறை உள்ள போதிலும், முதியோர் அடையாள அட்டை பெறுவதற்கு பிரதேச மக்கள் முன்வராதமை குறித்து கவலை தெரிவிக்கப்பட்டது.

பிரதேசத்தில் வதியும் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கும் தேசிய அடையாள அட்டையைத் தொலைத்த 55 வயதுக்கு மேற்பட்டோருக்கும் முதியோர் அடையாள அட்டைகள் வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முத்திரை அளவிலான இரு புகைப்படங்களைப் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து வழங்குமாறும் தேசிய அடையாள அட்டையைத் தொலைத்த 55 வயதுக்கு மேற்பட்டவர்கள் புகைப்படம், தேசிய அடையாள அட்டையின் இலக்கம் ஆகியவற்றைச் சமர்ப்பித்து பெறலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

முதியோர் அடையாள அட்டை அரசால் சட்டபூர்வமானது என்று அங்கீகரிக்கப்பட்டுள்ளமையால் அனைத்து தேவைகளுக்கும் பயன்படுத்த முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை மட்டுவிலில் இடம்பெற்ற பொலிஸாரின் நடமாடும் சேவையில் தேசிய அடையாள அட்டையைத் தொலைத்தமைக்கு முறைப்பாடு செய்து அறிக்கை பெற 55 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் பெருமளவில் வந்திருந்தமை தொடர்பாக கேட்ட போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## வலி.மேற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி வார இறுதி நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.19

வலி.மேற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நிறைவு நாள் நிகழ்வுகள் நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறும்.

சபைத் தலைவர் திருமதி நா.ஐங்கரன் தலைமையில் சித்தன்கேணி பெரியவளவு மகா கணபதிப்பிள்ளையார் ஆலய கலாசார மண்டபத்தில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பா.ஜெயகரன், உதயன்-சுடர்ஒளி நிர்வாக இயக்குநர் திருமதி ய.சரவணபவன், யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி இணைப்பாளர் பா.தனபாலன் ஆகியோர் கலந்து கொள்வர்.

சிறப்பு விருந்தினர்களாக சங்கானை பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் வி.சிவகுமார், தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் ப.நந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்வர்.

கௌரவ அதிதிகளாக வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் ச.கனகராசன், ஸ்கைலைன் இயக்குநர் ச.சசிகரன், சுந்தர்சன் எலக்ரிக்கல் விற்பனை நிலைய உரிமையாளர் எஸ்.சிவகுமார், யசோதா கட்டட ஒப்பந்த நிறுவன நிர்வாக இயக்குநர் திருமதி ச.கணேசநாயகம், ஆர்.குறூப் நிறுவன நிர்வாக இயக்குநர் இ.சிறீரங்கன் ஆகியோர் கலந்து கொள்வர்.

அன்றைய தினம் வலி.மேற்கு பிரதேச சபையில் 25 வருட சேவையை பூர்த்தி செய்த அலுவலர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதேவேளை பிரதேச எழுத்தாளர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

வலி.மேற்கின் வசந்தம் நூல் வெளியீடும் இடம் பெறவுள்ளது. வெளியீட்டுரையை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர் ந.குகபரன் நிகழ்த்துவார். (ம-50)

## பெண்களின் ஆயுள் காலம் இலங்கையில் நீள்கிறது

கொழும்பு,டிசெ.19

இலங்கையில் பெண்களின் ஆயுள் காலம் ஆண்களின் ஆயுள் காலத்தை விடவும் நீண்டு சென்றுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவிக்கிறது.

இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வுகளுக்கு அமைய பெண்களின் ஆயுள் காலம் 78 வருடங்கள் வரையிலும், ஆண்களின் ஆயுள் காலம் 74 வருடங்கள் வரையிலும் உள்ளது.

பொதுவாக நோக்குமிடத்து பெண்களது போன்றே ஆண்களது ஆயுள் காலமும் உயர்வடைந்துள்ளது. பெண்களது ஆயுள் காலம் உயர்வடைந்து செல்வதற்கு முக்கியத்துவம் பெறும் சில காரணிகள் காட்டப்பட்டுள்ளன.

ஆண்கள் மற்றும் பெண்கள் என்ற இரு தரப்பினரும் ஆயுள் காலம் உயர்வடைந்திருப்பதற்கு சுதந்திரமான சுகாதார சேவைகள் துரிதகதியில் மேம்பாடு அடைந்திருப்பதும்,மாற்று வலுவூட்டல் செயற்பாடுகள் உச்சமடைந்திருப்பதுமே காரணம் எனவும் சுகாதார அமைச்சு தெரிவிக்கிறது.

இன்றைய அளவில் தொற்று நோய்களான வைசூரி, க்முத்துத் திரளை, குக்கல் இருமல், சயரோகம், போலியோ, யானைக்கால்நோய் மற்றும் மலேரியா என்ற உயிர்க்கொல்லி நோய்கள் இந்த நாட்டிலிருந்து ஒழிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மூன்று கிலோ மீற்றர்களுக்குள்ளும் இலவச சுகாதார சேவை ஒன்றைப் பெற முடிந்திருப்பதும், ஆயிரத்து 750 பேருக்கு ஒரு வைத்தியர் என்ற வசதி அமைந்திருப்பதும், சுகாதார சேவையில் கிட்டியுள்ள வளர்ச்சியும் இந்த ஆயுள் நீடிப்புக்கு காரணம் என்று சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (ம-22)

## காரைநகர் சுற்று வீதிக்குக் 'காப்பெற்'

காரைநகர்,டிசெ.19

காரைநகர் சுற்று வீதியை அகலமாக்கி காப்பெற் வீதியாக அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கான பணிகள் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட உள்ளன என்று காரைநகர் பிரதேச சபை தெரிவித்துள்ளது.

மிகவும் மோசமாக சேதமடைந்துள்ள காரைநகர் பிரதான சுற்று வீதியை புனரமைக்க விரைவில் நடவடிக்கை எடுப்பதுடன் அதனை 'காப்பெற்' வீதியாக மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என காரைநகர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், தீவக அபிவிருத்திக் குழுக் கூட்டம் என்பவற்றில் சுட்டிக் காட்டப்பட்டதை அடுத்து இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

வீதி அகலிப்புப் பணிகளுக்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்கி புனரமைப்பு பணிகளைத் துரிதப்படுத்த முன்வர வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மாவட்டத்தில் காணி ஒதுக்கீடு முறையற்ற விதத்தில் நடைபெறுகிறது

## வவுனியா அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் சிவசக்தி ஆனந்தன்

மன்னார், டிசெ.19

மன்னார், முள்ளிக்குளம் பகுதியில் முஸ்லிம்களுக்குக் காணி ஒதுக்கீடா? முள்ளிக்குளம், முல்லைத்தீவு உட்பட பல்வேறு பகுதியில் போரால் பாதிக்கப்பட்டு ஒரு துண்டுக் காணிகூட இல்லாதவர்கள் இருக்கும் போது தமிழர் வாழும் பிரதேசத்தில் முஸ்லிம் மக்களுக்குக் காணி ஒதுக்கீடு செய்வது கவலை தருகிறது.

இவ்வாறு தெரிவித்தார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்.

வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட சிவசக்தி ஆனந்தன் வவுனியா மாவட்ட அரச அதிபர், அமைச்சர் ரிஷாத் பதியுதீன் ஆகியோர் முன்பாகவே இந்தக் கேள்வியை எழுப்பினார்.

> 18 வயதுக்கு மேற்பட்ட எல்லோருக்கும் குறிப்பாக 90 வீதம் முஸ்லிம் களுக்குக் காணிகள் வழங்குவது எனக் கூறப்படுகிறது. இது அநீதியானது.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் :-

மன்னார் ஆயர் இல்லத்துக்கு முன்பாக 100 ஏக்கர் காணி, மன்னாரின் ஏனைய பகுதிகளில் 500 ஏக்கர் காணி, முசலிப் பகுதியில் 500 ஏக்கர், தலைமன்னாரில் 100 ஏக்கர் என்று முஸ்லிம்களுக்கு ஒதுக்குவதன் மூலம் முஸ்லிம்களுக்கும் தமிழருக்கும் இடையில் இனமுரண்பாடே ஏற்படும்.

முன்னர் திருமணம் ஆனவர்களுக்குக் காணி வழங்குவதாகவும், குறிப்பாகக் காணிகள் அற்றவர்களுக்கே இந்தக் காணிகள் வழங்கப்படுவதாகவும் கூறப்பட்டது. ஆனால் இந்தக் கூட்டத்தில் 18 வயதுக்கு மேற்பட்ட எல்லோருக்கும் குறிப்பாக 90 வீதம் முஸ்லிம்களுக்குக் காணிகள் வழங்குவது எனக் கூறப்படுகிறது. இது அநீதியானது. முன்னர் சிங்களக் குடியேற்றங்களை அரசு தமிழர் பகுதிகளில் செய்தது.

தற்போது தமிழர் பகுதிகளில் முஸ்லிம் மக்களைக் குடியேற்றித் தமிழருக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்க முனைகிறது. விகிதாசார முறையில் முஸ்லிம் மக்களின் வாக்குகளைப் பெறும் நோக்கிலும் தமிழர் பகுதிகளை ஆக்கிரமிப்புச் செய்யும் திட்டத்திலும் இந்த நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

போரின்போது ஆயிரக் கணக்கான தமிழ் குடும்பங்கள் இருப்பிட வசதியின்றி மழையிலும் வெயிலிலும் மரங்களுக்குக் கீழ் இருக்க, அவர்களுக்கு ஒரு துண்டு நிலத்தைக்கூட வழங்க அனுமதி மறுக்கும் அரசு ஏன் இவ்வாறு செய்கிறது என்றார் அவர் - பதில் பேச்சு இன்றி இருந்தார் அமைச்சர் ரிஷாத் பதியுதீன். (ஐ-402)

---

முழங்காவிலில் நீண்ட காலம் தங்கியுள்ள

## கமநலசேவைக் கட்டடத்தில் இருந்து பொலிஸார் பெப்ரவரியில் வெளியேறுவர்

அக்கராயன், டிசெ. 19

கிளிநொச்சி, முழங்காவில் கமநலசேவை நிலையத்திலிருந்து எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி தாம் வெளியேறி விடுவோம் என பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் உறுதியளித்துள்ளார்.

பூநகரி பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயே பொலிஸ் அதிகாரி இந்த உறுதிமொழியை வழங்கினார்.

முழங்காவில் கமநலசேவை நிலையத்தில் பொலிஸார் நீண்டகாலமாக நிலைகொண்டுள்ளனர். இதுதொடர்பில் கடந்த ஜனவரியில் பூநகரி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

அப்போது தாம் ஒரு மாதத்தில் வெளியேறுவோம் என்று பொலிஸார் கூறியிருந்தனர். எனினும் இன்றுவரை வெளியேறவில்லை. 12 மாதங்கள் கடந்த நிலையில் மீளவும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்தவிடயம் சுட்டிக்காட்டப்பட்டது. இதன்போது கூட்டத்தில் பிரசன்னமாகியிருந்த பூநகரி பொலிஸ் அதிகாரி, பெப்ரவரி முதலாம் திகதியில் தாம் வெளியேறுவோம் என்று தெரிவித்துள்ளார். (ஐ-18)

---

## கண்ணி அகற்றும் பணி ஆனையிறவில் துரிதம்

கிளிநொச்சி ஆனையிறவுப்பகுதியில் "டாஸ்" கண்ணிவெடி அகற்றும் பிரிவினால் வெடி பொருள்கள் அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சியின் பல்வேறு பகுதிகளிலும் 'டாஸ்' நிறுவனத்தினால் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு வருகின்றன. தற்போது கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள ஆனையிறவுக்கு கிழக்குப் பக்கமாக உள்ள தட்டுவன்கொட்டி, உமையாள்புரம் பகுதிகளை ஊடறுத்துச் செல்லும் மண் அணையை அண்டிய பகுதிகளில் 'டாஸ்' கண்ணிவெடி அகற்றும் பிரிவினால் வெடி பொருள்கள் அகற்றப்பட்டு வருகின்றன.

போரின் போது அமைக்கப்பட்ட மண் அணைகளும் இராணுவக் காவலரண்களுமே இப்பகுதியில் காணப்படுவதுடன் இப்பகுதிகளில் காணப்படும் வெடி பொருள்கள் மிக ஆபத்தான நிலையிலேயே உள்ளன என்றும் இவற்றை அகற்றுவதில் காலதாமதம் ஏற்பட்டு வருகின்றது எனவும் மேற்படி நிறுவனத்தினர் கூறுகின்றனர். (த-6)

---

## வள்ளிபுனம் பிரதேசத்தில் 308 குடும்பங்களுக்கு வீடு

### இந்திய அரசின் உதவியுடன்


முல்லைத்தீவு,டிசெ. 19

முல்லைத்தீவு வள்ளிபுனம் பகுதியில் 308 குடும்பங்களுக்கு இந்திய அரசின் நிதியுதவியுடனான வீட்டுத் திட்டங்கள் கிடைத்துள்ளன.

முல்லைத்தீவு வள்ளிபுனம் பகுதியில் தற்போது 540 குடும்பங்கள் மீள்குடியேறியுள்ளன. இந்த நிலையில் தற்போது 308 குடும்பங்களுக்கு இந்திய அரசின் நிதியுதவியுடனான வீட்டுத் திட்டம் கிடைத்துள்ளது.

ஏனைய குடும்பங்களுக்கு வீடுகள் வழங்குவது தொடர்பான மீளாய்வுகள் கடந்த 3 ஆம் திகதி திங்கட்கிழமை வள்ளிபுனம் பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெற்றுள்ளன. (த-6)

---



கிளிநொச்சி வன்னேரிக்குளம், தேவன்குளம் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பிரிவால் அகற்றப்பட்ட வெடிபொருள்களில் ஒரு பகுதி. (ம-18)

---

## கால்நடைகளின் தொல்லைகள் அதிகரிப்பு

வவுனியாவில் உள்ள பிரதான வீதிகள், கிராமப்புற வீதிகளில் இரவு, பகல் வேளைகளில் கால் நடைகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது என்று பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பெரும்போக நெற்செய்கை பண்ணப்பட்டிருக்கும் இவ்வேளையில் கமக்கார அமைப்பு ஊடாக கால்நடை வளர்ப்போர் கால் நடைகளைக் கட்டி வளர்க்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருந்தது.

எனினும் இது குறித்து எவரும் கவனத்தில் எடுக்கவில்லை என்று கூறப்படுகிறது.

தற்போதும் கால்நடைகள் பட்டிகளில் அடைக்காமல் இரவு, பகல் என்று வீதிகளிலும் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட வயல்களிலும் அலைந்து திரிகின்றன.

வீதிகளில் அலையும் கால்நடைகளால் விபத்துக்கள் ஏற்படும் நிலைமையும் காணப்படுகிறது.

இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் கேட்கின்றனர். (ம-421)

---

## மீள்குடியேற்றத்துக்குத் துணை நின்றவர்கள் கண்ணிவெடி அகற்றும் பணியாளர்கள்

### கிளிநொச்சி அரச அதிபர் புகழாரம்

அக்கராயன், டிசெ. 19

ஆபத்தான சூழலில் தம்மை அர்ப்பணித்து கண்ணிவெடிகளை அகற்றி மீள் குடியேற்றத்துக்குத் துணை புரிந்தவர்கள் கண்ணிவெடி அகற்றும் பணியாளர்கள். இவர்களின் பணி அளப்பெரியது. இவ்வாறு தெரிவித்தார் கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன்.

பூநகரி ஜெயபுரத்தில், டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் அணியினர் மிதிவெடியகற்றப்பட்ட தேவன்குளம், இத்தாவில் பகுதிகளைக் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

> மீள்குடியேற்றத்தின் உயிர்நாடியாக இருந்தவர்கள் கண்ணிவெடி அகற்றும் அணியினர்தான்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு :-

கிளிநொச்சி மாவட்டத்தின் மீள்குடியேற்றத்தை ஆரம்பிப்பதற்கு மிதிவெடிகள் தடையாக இருந்தன. பூநகரி பிரதேச செயலர் பிரிவில் ஜெயபுரம், முழங்காவில் பகுதிகளில் டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் நீண்டகாலமாகப் பணியாற்றுகின்றனர்.

மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு வாழ்வாதார நடவடிக்கைகளுக்காகக் காணிகள் தேவைப்பட்டாலும் அவற்றின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவில்லை. இருப்பிடங்களுக்கான கண்ணி வெடியகற்றல் முடிவுற்ற பின்னர் தான் வெற்றுக்காணிகள் நோக்கி நகர முடியும். தேவன்குளத்தில் கண்ணிவெடியகற்றல் பணி நிறைவு பெற்றுள்ளது.

மீள்குடியேற்றத்தின் உயிர்நாடியாக இருந்தவர்கள் கண்ணிவெடி அகற்றும் அணியினர்தான் என்பதை நாம் நன்றியுணர்வுடன் நினைவில் கொள்ள வேண்டும். ஆபத்தான சூழலிலே தம்மை அர்ப்பணித்துக் [illegible] கின்றனர் - என்றார். (ஐ-18)

---

## கரைச்சிப் பிரதேசத்தில் 36 கிராமங்களுக்கு குடிதண்ணீர்

### பிரதேச சபையின் ஏற்பாட்டில்

கிளிநொச்சி,டிசெ.19

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசத்திற்கு உட்பட்ட சில கிராமங்களில் குடிதண்ணீர் இல்லாத நிலையில் குறிப்பிட்ட சில கிராமங்களுக்கு வருடம் முழுவதும் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. மேலும் குறிப்பிட்ட சில கிராமங்களுக்கு கடும் வறட்சிக் காலங்களில் மட்டுமே குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள தட்டுவன்கொட்டி, கல்லாறு, சுண்டிக்குளம் போன்ற கிராமங்களில் சுமார் ஐநூறுக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு வருடம் முழுவதும் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

> குறிப்பிட்ட சில கிராமங்களுக்கு கடும் வறட்சிக் காலங்களில் குடி தண்ணீர் விநியோகிக்கப் பட்டு வருகின்றது.

இதனைவிட ஸ்கந்தபுரம், அக்கராயன், பொன்னகர், பாரதிபுரம், கிருஷ்ணபுரம், வட்டக்கச்சி உள்ளிட்ட கிராமங்களுக்கும் கரைச்சிப் பிரதேச சபையினால் சுமார் 36 கிராமங்களுக்கு குடிதண்ணீர் விநியோகிக்கப்படுகின்றது. (வ-6)

---

## கண்ணி வெடி அகற்றப்பட்ட தேவன்குளம் பாவனைக்கு

அக்கராயன், டிசெ. 19

கிளிநொச்சி, ஜெயபுரத்தில் டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் மிதிவெடி அகற்றப்பட்ட இரு பகுதிகளான தேவன்குளம் மற்றும் ஜெயபுரம் வடக்கின் இத்தாவில் பகுதிகளைக் கையளிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற்றது.

டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் பிரிவின் செயற்றிட்ட முகாமையாளர் பொன் சேகா தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

தேவன்குளத்தின் 64,630 சதுர அடி நிலப்பரப்பில் 635 நிலக்கண்ணிவெடிகளும், தோட்டாக்கள் 4,414 என்பனவும், இத்தாவில் பகுதியில் 78 நிலக்கண்ணிவெடிகள் 47,699 சதுர அடி நிலப்பரப்பில் மீட்கப்பட்டன என்று டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் பிரிவால் தெரிவிக்கப்பட்டது. (ஐ-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை இரத்த வங்கியால் நோயாளர்கள் பெரும் நன்மை

## வைத்திய அத்தியட்சகர் தெரிவிப்பு

வலி.வடக்கு, டிசெ.19

கடந்த காலங்களில் இரத்தம் வேண்டுமாக இருந்தால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு நோயாளியைக் கொண்டு செல்ல வேண்டிய நிலைமை காணப்பட்டது.

இரத்த வங்கி ஒன்றை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் ஆரம்பித்துள்ளமையால் இந்த நிலைமை மாற்றம் பெற்று நோயாளிக்கு வேண்டிய இரத்தத்தை உடனடியாக வழங்கக் கூடிய வசதிகளும் வாய்ப்புகளும் கிடைத்துள்ளன.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் எம்.உமாகரன் இவ்வாறு குறிப்பிட்டார்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கி திறப்பு விழா வைத்திய அத்தியட்சகர் எம்.உமாகரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இரத்த வங்கி ஒன்றை ஆரம்பிப்பதற் கான அனுமதி கிடைக்கப் பெற்ற போதிலும் இதனை திறப்பதற்கு வேண்டிய நிதி யைப் பெறுவதில் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைமை காணப்பட்டது.

வருட இறுதியாக இருந்த போதிலும் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் காட்டிய ஒத்துழைப்பின் மூலம் அதனை ஈடு செய்து இரத்த வங்கியை திறக்கக் கூடியதாக இருந்தது.

அடுத்து இரத்த வங்கிக்கான ஊழியர்களை நியமனம் செய்வதில் பிரச்சினைகள் எதிர்நோக்கப்பட்டன. அதுவும் ஓரளவுக்குச் சீர் செய்யப்பட்டு இரத்த வங்கியின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தேசிய குருதி மாற்றுச் சேவை அமைப்பின் உறுப்பினர்கள் வேண்டிய உதவிகளையும் ஆலோசனைகளை வழங்கியுள்ளனர்.


இதேபோன்று வைத்தியர் எஸ்.சிவசங்கரும் கூட வேண்டிய ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார்.

நிதி உதவி வேண்டிய வேளையில் உடனடியாகத் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் இயங்கும் உளநலச் சங்கத்தினர் வேண்டிய உதவிகளைச் செய்துள்ளனர்.

இதேபோன்று, இரத்த வங்கி உடனடியாகச் செயல்படக் கூடிய வகையில் காங்கேசன் துறையில் நிலைகொண்டுள்ள 515 ஆவது படையின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் ரன்தெனியா தலைமையிலான இராணுவத்தினர், நல்லூர் றோட்டரிக் கழக உறுப்பினர்கள், தெல்லிப்பழை பொலிஸார், வைத்தியசாலை ஊழியர்கள் எனப் பலரும் இணைந்து உடனடியாக இரத்த வங்கி இயங்குவதற்கான இரத்தத்தை வழங்கியுள்ளனர்.

கடந்த பல வருட கால இடைவெளியின் பின்னர் வைத்தியசாலை இந்த ஆண்டு தொடக்கம் தனது சொந்த இடத்தில் மீள இயங்கத் தொடங்கியுள்ளது.

வைத்தியசாலைக்கு மேலும் தேவைகள் காணப்படுகின்ற போதிலும் படிப்படியாக அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்ய அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.- என்று கூறினார். (ம-86)



நெல்லியடி-கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கிராமிய வங்கிக் கட்டடத்தை யாழ்.மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் வி.கே அருந்தவநாதன் நாடாவை வெட்டித் திறந்து வைக்கிறார். அருகில் சங்கத் தலைவர் எஸ்.செல்வராஜா காணப்படுகிறார். (ம-8)



தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் இரத்த வங்கி திறக்கப்பட்டதைத் தொடர்ந்து சுமார் எழுபத்தைந்து பைந் இரத்தத்துக்கு மேல் இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள், நல்லூர் றோட்டறிக் கழக உறுப்பினர்கள் வழங்கியுள்ளனர். (ம-86-38)

## அபிவிருத்திக்கு நிதி

வலி.வடக்கு, டிசெ. 19

அராலி கிழக்கு அம்பாள் முன்பள்ளி அபிவிருத்தி செயற்பாடுகளுக்கென பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனிடம் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் இந்த நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. முன்பள்ளிச் சிறார்களின் நன்மை கருதி 30 ஆயிரம் ரூபா நிதியை நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வழங்கியுள்ளதுடன் எதிர் காலத்திலும் முன்பள்ளிச் சிறார்களின் நன்மை கருதி உதவிகள் வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (ம-86)

★ ★ ★

கோப்பாய் பிரதேச சபைக்கு உட்பட்ட ஆவரங்கால் கிழக்கு ஆலடி முருகன் வீதி நிர்மாணப் பணிகளுக்கு பன்முகப் படுத்தப் பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவிடம் அப்பகுதி மக்கள் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் இந்த நிதி பன்முகப் படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது. இந்த வீதியை உடனடியாகத் திருத்த நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில் ஒரு லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.(ம-86)

## வட்டு. கிழக்குப் பகுதியில் தோல் உற்பத்தி பயிற்சி

யாழ்ப்பாணம்,டிசெ.19

வட்டுக்கோட்டை கிழக்கு அந்திரான் கிராம இளைஞர், யுவதிகளின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக விலங்குத் தோலைப் பயன்படுத்தி உற்பத்திப் பொருள்களைத் தயாரிப்பதற்கான பயிற்சி நிலையம் நேற்று முதல் அங்கு ஆரம்பித்து வைக்கப் பட்டுள்ளது.

உள்ளூர்உற்பத்திப் பொருள்களுக்குச் சந்தை வாய்ப்பு அருகிவரும் நிலையில் இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் ஒரு புதிய முயற்சியாக இந்தப் பயிற்சி நிலையத்தில் விலங்குத் தோலைப் பயன்படுத்தி உற்பத்திப் பொருள்களை தயாரிப்பதற்கான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

விலங்குத் தோலைப் பயன்படுத்தி செய்யப்படுகின்ற உற்பத்திப் பொருள்களை எவ்வாறு தயாரிக்கலாம் என்பது தொடர்பான பயிற்சிகள் தகுந்த வளவாளர்கள் மூலம் வழங்கப் படவுள்ளன.

இந்தப் பயிற்சி நிலையம் ஊடாக பயிற்சி பெறும் பயிற்சியாளர்கள் சுயமாகத் தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொள்வதுடன் வாழ்வாதார மேம்பாட்டுக்கான வழிகாட்டலையும் பெற முடியும்.

அந்திரான் கிராமத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் தொழில் வாய்ப்புக்கான களமாகப் பயன்படுத்தி நன்மை பெறலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்திரான் கிராம ஜன சக்தி சனசமூக நிலையத்தால் இந்தப் பயிற்சி நிலையம் ஆரம்பித்து வைக்கப் பட்டுள்ளது. (ம-14)

## சாவகச்சேரி வைத்தியசாலையின் கிளினிக்குகளுக்கு கூட்டம்

தென்மராட்சி,டிசெ.19

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நடத்தப்படும் பொது மருத்துவம், நீரிழிவு கிளினிக்குகளுக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துள்ளது.

ஏற்கனவே வைத்தியசாலையில் நடத்தப்படும் நோயாளர்களிடம் யாழ். போதனா வைத்தியசாலையில் கிளினிக்குகளில் சிகிச்சை பெற்ற தென்மராட்சி, பளை, வடமராட்சி கிழக்கு, பூநகரி போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த நோயாளர்கள் இங்கு மாற்றப்பட்டுள்ளதால் கிளினிக்குகளில் நோ யாளர்கள் அதிகரித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பொது வைத்திய நிபுணர் கடமையாற்றுவதால் யாழ். போதனா வைத்தியசாலையில் நீரிழிவு மற்றும் பொது மருத்துவம் ஆகிய கிளினிக்குகளில் சிகிச்சை பெற்ற நோயாளர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு மாற்றம் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படடது. (ம-9)

## கொடிகாமம் கூட்டுறவு நகர் கடையின் மோசடி பிடிபட்டது

கொடிகாமம்,டிசெ.19

கொடிகாமம் நகர்ப் பகுதியில் உள்ள கூட்டுறவு நகர் கடையில் மேற்கொள்ளப்பட்ட பல மோசடிகள் தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவரால் கையும் மெய்யுமாக பிடிபட்டுள்ளன.

பொது மக்கள் கொடுத்த முறைப்பாட்டை அடுத்து திடீரென கிளைக்கு வந்த தலைவர் அங்கு பரிசோதனைகளை மேற்கொண்ட போது அங்கு மேற்கொள்ளப்பட்ட மோசடிகள் அம்பலத்துக்கு வந்துள்ளன.

பொருள்கள் கொள்வனவு செய்தமைக்கு பின்னரான திகதியிடப்பட்ட சிட்டைகள் வைத்திருந்தமை, அந்தப் பொருள்களுக்கு சிட்டை வழங்காமல் விற்பனை செய்தமை, கொள்வனவு செய்தமை, கொள்வனவு சிட்டையில் உள்ள திகதிகளை மாற்றியமை, கொள்வனவு சிட்டைகளை உடனுக்குடன் தலைமை அலுவல கத்துக்கு அனுப்பாமை போன்ற விடயங்கள் பொது மக்கள் முன்னிலையில் கண்டுபிடிக்கப் பட்டன.

இந்த விடயம் தொடர்பாக இயக்குநர் சபைக்கு அறிவிக்கப்பட்டு விசாரணைகள் நடத்தப்பட்டு வரு வதாகவும், விசாரணை மேற்கொண்ட இயக்குநர் சபை உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. (ம-9)

## மணியந்தோட்டத்துக்கு உள்ளக வீதி அமைக்கும் பணி

கொழும்புத்துறை,டிசெ.19

மணியந்தோட்டம் கிராமத்துக்கு உள்ளக வீதிகள் அமைக்கும் முதற்கட்டப் பணியாக அந்தப் பகுதிகளில் வடிகால் அமைப்புக்களை ஏற்படுத்தும் வகையில் பாலங்கள், கால்வாய்கள் திருத்தப்பட்டு வருகின்றன.

கத்தர் கோவில் வீதி மற்றும் குறுக்கு வீதிகளில் உள்ள தாழ்வான பகுதிகளில் இருந்து வெள்ளம் கடலுக்கு வழிந்தோட வசதியாக மதகுகள், கால்வாய்கள் அமைக்கும் பணிகள் கனரக வாகனங்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தப் பகுதிகளின் வீதிகள் 'நெல்சிப்' திட்டத்தின் கீழ் நல்லூர் பிரதேச சபையால் திருத்தப்பட்டு வருகின்றன.

அதேவேளை 8 ஆம் குறுக்கு வீதியை அரியாலை நாவலடியுடன் இணைத்து தார் வீதியாக அமைக்கும் பணிகளின் பெரும் பகுதி நிறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-135)

## வீதியைக் கடந்தவரை மோதியது ஓட்டோ

தென்மராட்சி,டிசெ.19

வேகமாக வந்த ஓட்டோ வீதியைக் கடந்தவரை மோதித் தள்ளியது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு சாவகச்சேரி நகர்ப் பகுதியில் இடம்பெற்றது.

படுகாயங்களுக்கு இலக்காகி மூர்ச்சையுற்ற நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நபர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

பெயர் மற்றும் விவரங்கள் தெரியாத நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் அவரிடமிருந்து கிடைத்த தற்காலிக அடையாள அட்டை ஒன்றில் சின்னையா நகுலேந்திரன் (வயது-38) எனக் காணப்பட்டது.

விபத்தின் போது காயமடைந்த ஓட்டோ சாரதியான சாவகச்சேரி கல்வயலைச் சேர்ந்த சிவயோகநாதன் சிவகாந்த் (வயது-28) என்பவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடிகுண்டுடன் பெண்; பீதி கிளப்பிய இளைஞர்

**பஸ் நிலையத்தில் அதிரடி சோதனை**

திருச்சி, டிசெ.19

திருச்சி சத்திரம் பஸ் நிலையத்தில் வெடிகுண்டுகளுடன் ஒரு பெண் நடமாடுவதாக பொலிஸுக்கு மர்ம நபர் தகவல் கொடுத்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

திருச்சி கோட்டை பொலிஸ் நிலையத்துக்கு நேற்று முன்தினம் மாலை வந்த மர்ம தொலைபேசியில், சத்திரம் பஸ் நிலையத்தில் பச்சைக் கலர் சுடிதாருடன் ஒரேஞ் நிற துப்பட்டா அணிந்து நிற்கும் பெண் வெடிகுண்டுடன் நிற்பதாகத் தகவல் தெரிவித்தனர்.

இதையடுத்து சத்திரம் பஸ் நிலையத்துக்கு விரைந்து சென்ற பொலிஸார் மர்ம நபர் கூறிய அடையாளத்துடன் இருந்த பெண்ணைச்சுற்றி வளைத்து சோதனை நடத்தினர். ஆனால் அந்த உடை அணிந்திருந்த பெண்ணிடம் எந்த ஒரு வெடி பொருளும் சிக்கவில்லை. இருப்பினும் சத்திரம் பஸ் நிலையப் பகுதியில் பச்சை நிற சுடிதார், ஒரேஞ் நிற துப்பட்டா அணிந்த பெண்கள் அனைவரையும் பொலிஸ் சோதனை நடத்தினர். ஆனால் எந்த ஒரு வெடிகுண்டும் கிடைக்கவில்லை. யாரோ ஒரு இளம் பெண்ணை பழிவாங்க நினைத்த இளைஞரின் சதி நடவடிக்கை இது என்று பொலிஸார் கருதுகின்றனர்.



மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளின் மாநாடு சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் தலைமையில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. இந்த மாநாடு மூன்று நாள்கள் நடைபெறவிருக்கிறது.

# மத்திய அரசைக் கண்டிக்கிறது பா.ஜ.க.

## பாக். அமைச்சரின் கருத்துக்கு அரசு மறுப்பு தெரிவிக்காதது ஏன்?

டில்லி, டிசெ.19

பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரகுமான் மாலிக் வெளியிட்ட சர்ச்சைக்குரிய கருத்துக்கு இந்திய அரசு சார்பில் மறுப்புத் தெரிவிக்காதது கண்டிக்கத்தக்கது என்று எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

மும்பைத் தாக்குதல் தொடர்பான விசாரணையை வேண்டும் என்றே தாமதப் படுத்தும் பாகிஸ்தான், அதன் முக்கிய குற்றவாளியான ஹபீஸ் சயீத்தை பாதுகாப்பதில் தீவிரம் காட்டி வருவதாக பாரதீய ஜனதா குற்றம் சாட்டியுள்ளது. இந்த நிலையில் பாகிஸ்தான் அரசுடன் பேச்சு நடத்துவதால் இந்தியாவுக்கு எந்தப் பயனும் இல்லை என்று அந்தக்கட்சி கருத்துத் தெரிவித்துள்ளது.



இதுதொடர்பாக செய்தியாளர்களைச் சந்தித்த அந்தக்கட்சியின் மூத்த தலைவர் யஷ்வந்த் சின்ஹா,

பாகிஸ்தான் என்றுமே தனது வாக்குறுதிகளை காப்பாற்றியதில்லை என்று கூறினார். முன்னாள் பிரதமர் வாஜ்பாய்க்கு அதிக வாக்குறுதிகளை பாகிஸ்தான் அளித்து ஏமாற்றியது என்றும் அவர் குற்றம் சாட்டினார். பாகிஸ்தானின் அத்துமீறல்களை பொறுத்துக் கொண்டு அந்தநாட்டுடன் நட்புறவை வளர்க்க இயலாது என்றும் கருத்துத் தெரிவித்துள்ளார்.

மக்கள் மத்தியில் மறக்கப்பட்டு வரும் பாபர் மசூதி தகர்ப்பு சம்பவத்தை ரகுமான் மாலிக் பேச்சு மீண்டும் நினைவு படுத்தி உள்ள தால், பாரதீய ஜனதாக் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் உள்நாட்டு விவகாரம் குறித்து கருத்துக் கூற பாகிஸ்தானுக்கு உரிமை இல்லை என்றும் அந்தக்கட்சி தெரிவித்துள்ளது.

தேவையின்றி இதுபோன்று கருத்துக்களை வெளியிடும் ரகுமான் மாலிக் பேச்சுக்கு, மத்திய அரசு எந்தவித மறுப்பும் தெரிவிக்காதது கண்டிக்கத் தக்கது என்றும் அந்தக் கட்சி குறிப்பிட்டுள்ளது.

# கூகுளைப் போன்று மத்திய அரசும் ஆரம்பிக்கிறது இணையத்தளம்

டில்லி, டிசெ.19

கூகுள் போன்று மத்திய அரசின் பல்வேறு துறைகள் தொடர்பாக இணையத்தளம் 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் தெரிவித்தார்.

தேடுதல் வலைத் தளமான கூகுள் பன்முக தகவல்களைத் தருவதில் முன்னணி வலைத்தளமாக உள்ளது. இதனைப்போன்று மத்திய அரசின் பல்வேறு துறைகளை உள்ளடக்கிய புதிய இணையத்தளம் ஆரம்பிக்கப்பட உள்ளது.

தேசிய தகவல் மையத்தின் (என்.டி.சி ) கட்டடத்துக்கான அடிக்கல் நடும் விழா புதுடில்லி யில் நடைபெற்றது.

இந்த விழாவில் மத்திய தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் கபில்சிபல் கலந்து கொண்டார். அதன் பின்னர் அவர் பேசுகையில்,

மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்கள் தொடர்பான விவரங்களை அறிய கூகுள் தேடுதல் இயந்திரம் போன்று மத்திய அரசு புதிய இணையத் தளத்தை 2014 ஆம் ஆண்டுக்குள் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது எனது நீண்ட நாள் கனவு திட்டம் இதனை நிறைவேற்ற ஆவலாக உள்ளேன்.

குறித்த இணையத்தளம் வாயிலாக 'மவுஸை கிளிக் செய்தால் பல்வேறு அமைச்சகத்தின் துறை தொடர்பான தகவல்களை பொது மக்கள் எளிதாகப் பார்வையிட முடியும்.தேவையான விவரங்களையும் பெறமுடியும்- என்றார். (வ)

## மாலைதீவுக்கான விசா கட்டுப்பாடுகள் அதிகரிப்பு

டில்லி, டிசெ.19

மாலைதீவு மக்களுக்கு விசா வழங்கும் நடைமுறைக் கட்டுப்பாடுகளை இந்தியா அதிகரித்துள்ளது.

அண்மையில் மாலே சர்வதேச விமான நிலையத்தை மேம்படுத்த இந்திய நிறுவனமான ஜி.எம்.ஆர்., எடுத்திருந்த ஒப்பந்தத்தை மாலைதீவு அரசு ரத்துச் செய்தது. இதையடுத்து, இந்தியா மற்றும் மாலை தீவுகள் இடையே உறவு களில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இந்தநிலையில், மாலைதீவு மக்களுக்கு விசா அளிக்கும் நடைமுறையை இந்தியா கடுமையாக்கியுள்ளது. இதன்படி, 90 தினங்களுக்கும் மேலாக மருத்து வம், கல்வி மற்றும் பிற விடயங்களுக்காக இந்தியாவில் தங்கியிருக்க விரும்புவோர் உரிய விசாவை எடுக்க வலி யுறுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு இல்லையென்றால் அவர்கள் உடனடியாக நாடு கடத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ள நேரிடும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (வ)

# கூடங்குளம் விஞ்ஞானிகளுக்காக குமரியில் விமான நிலையம் தேவை

**தி.மு.க வின் கோரிக்கையால் சர்ச்சை**

சென்னை , டிசெ.19

கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கு வந்து செல்லும் ரஷ்ய விஞ்ஞானிகளின் வசதிக்காக கன்னியாகுமரியில்விமானநிலையம்அமைக்க வேண்டும் என்று தி.மு.க. கோரிக்கை விடுத்துள்ளது.

தி.மு.க. உறுப்பினர் ஹெலன் டேவிட்சன் நேற்று முன்தினம் லோக்சபாவில் கேள்வி எழுப்பி பேசுகையில், ஆன்மிக சுற்றுலாத் தலமாக கன்னியாகுமரி திகழ்கிறது. அங்கு விமான நிலையம் அமைக்க மத்திய அரசுக்கு தமிழக அரசு பரிந்துரை செய்தது. இதைத் தொடர்ந்து 800 ஏக்கர் நிலப்பரப்பில் க்ரீன் ஃபீல்ட் விமான நிலையம் அமைக்க நிலம் கண்டறியப்பட்டது. ஆனால் கடந்த 3 ஆண்டுகளாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கன்னி யாகுமரியில் விமான நிலையம் அமைந்தால் வேலை வாய்ப்பு அதிகரிக்கும். கூடங்குளம் அணுமின் நிலைய திட்டத்தைப் பார்வையிட வரும் ரஷ்ய விஞ்ஞானிகள், நிபுணர்கள் வந்து செல்ல வசதி ஏற்படும் - என்றார் அவர். கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கு எதிராக ஓராண்டுக்கும் மேலாக போராட்டம் நீடித்து வரும் நிலையில் தி.மு.கவோ ரஷ்ய விஞ்ஞானிகளுக்காக விமான நிலையம் அமைக்கக் கோரி இருப்பது சர்ச்சையை உருவாக்கியிருக்கிறது. (வ)

# கிரானைட் முறைகேடு எதிரொலி 50 குவாரிகளின் உரிமங்கள் ரத்து

கிரானைட் முறைகேடு தொடர்பாக மதுரை மாவட்டத்தில் 50 குவாரிகளின் உரிமங்களை அரசு தற்காலிகமாக ரத்து செய்துள்ளது.

மதுரை மாவட்டம் மேலூர் பகுதியில் செயற்பட்டு வந்த கிரானைட் நிறுவனங்கள், சட்ட விரோதமாக கிரானைட் கற்களை வெட்டி எடுத்ததாக முறைப் பாடு எழுந்தது.

இதனால் அரசுக்கு பல ஆயிரம் கோடி ரூபா இழப்பு ஏற்பட்டதாக மாவட்ட நிர்வாகம் சார்பில் அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட் டதையடுத்து சம்பந்தப்பட்ட கிரானைட் நிறுவனங்கள் குறித்து விசாரணை நடத்துமாறு அரசு உத்தரவிட்டது. அதன்பேரில், முதற் கட்டமாக 58 குவாரிகளில் விதிமீறல்கள் கண்டறியப்பட்டன. இவற்றால் அரசுக்கு இழப்பு ஏற்பட்டதும் தெரியவந்தது.

எனவே மேற்படி குவாரி களின் உரிமங்களை ரத்து செய்ய மாவட்ட ஆட்சியாளர் அன்சுல் மிஸ்ரா பரிந்துரை செய்தார். அதன் பேரில், 16 கிரானைட் நிறுவனங்களின் 50 குவாரிகளுக்கு வழங்கப்பட்ட உரிமம் தற்காலிகமாக ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக கனிமவளத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (வ)

# பஸ் கவிழ்ந்து விபத்து

## 3 பேர் சாவு; 20 பேர் காயம்



ஆண்டிப்பட்டி, டிசெ.19

ஆண்டிப்பட்டி அருகே மோட்டார் சைக்கிள் மீது ஏற்படவுள்ள விபத்தைத் தவிர்க்க பஸ்ஸை திருப்பிய போது, எதிரே வந்த மற்றொரு பஸ் மீது மோதி அது கவிழ்ந்தது. இதில் மூன்று பேர் உயிரிழந்தனர்; 20பேர்காயமடைந்தனர்.

தேனியில் இருந்து மதுரை நோக்கிச் சென்ற தனியார் பஸ், திம்மரச நாயக்கனூர் அருகே மோட்டார் சைக்கிள் மீது மோதாமல் இருக்க திருப்பியபோது, எதிரே திருமங்கலத்தில் இருந்து தேனி நோக்கி வந்த மற்றொரு தனியார் பஸ் மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகியவற்றுடன் மோதிக் கவிழ்ந்தது.

இதன்போது, மோட்டார் சைக்கிளில் சென்ற மேக்கி ழார் பட்டியைச் சேர்ந்த இருவர் பலத்த காயம் அடைந்தனர். மேலும், 20 பேர் காயம் அடைந்தனர். அவர்கள் தேனி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நிலநடுக்கத்தால் அதிர்ந்தது இந்தோனேசியா

ஜகார்த்தா, டிசெ.19

இந்தோனேசியாவில் நேற்று முன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. மத்திய இந்தோனேசியாவில் காலையில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 6.1 அலகுகளாக பதிவாகியுள்ளது என்று அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கத்தின் மையம் சுலாவெசி தீவில் 18 கி.மீ. ஆழத்தில் காணப்பட்டது. அது ரிக்டர் அளவுகோலில் 6 ஆக பதிவானது என்று இந்தோனேசிய வானிலை, பருவநிலை மற்றும் புவிஇயற்பியல் ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கத்தால் கட்டடங்கள் அசைந்தன. இதையடுத்து மக்கள் அலறிக் கொண்டு வீதிகளுக்கு ஓடி வந்தனர். நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்த தகவல்கள் தெரியவரவில்லை.


# கண்ணியில் சிக்கி 10 சிறுமியர் உடல் சிதறுண்டு அநியாயச் சாவு

## ஆப்கனில் பயங்கரம்

காபூல், டிசெ.19

ஆப்கனில் கண்ணி வெடியில் சிக்கி சிறுமிகள் பத்துப் பேர் உடல் சிதறி உயிரிழந்தனர். அவர்கள் அனைவரும் 10 வயதுக்கு உட்பட்டவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவம் ஆப்கனைப் பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

ஆப்கன், நங்கர்கச் பகுதியை சேர்ந்த பள்ளிச் சிறுமிகள் விறகு சேகரிப்பதற்காக காட்டுப் பகுதிக்குச் சென்றனர். அங்கு புதைக்கப்பட்டிருந்த கண்ணி வெடியில் அவர்கள் சிக்கிக் கொண்டனர். இதில் 10 பள்ளிச் சிறுமிகளும் உடல் சிதறி உயிரிழந்தனர். இவர்கள் பாடசாலை செல்வதற்கு முன்னர் காலையில் வீட்டுத் தேவைக்காக விறகு சேகரிக்கச் சென்றனர் என்று கூறப்படுகிறது.



கடந்த 20 ஆண்டுகளாக கண்ணி வெடியில் சிக்கி பலர் உயிரிழக்கின்றனர். சராசரியாக அன்றாடம் 30 பேர் வரை இவ்வாறு உயி ரிழக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இதில் பெரும்பாலும் பெண்களும் குழந்தைகளும் அடக்கம். ஆப்கனில் இருந்து இது வரையிலும் 7 லட்சம் கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

# வன்முறைகளால் வெல்ல முடியாது

## சிரிய துணை ஜனாதிபதி



டமஸ்கஸ், டிசெ.19

''சிரிய இராணுவத்தினரோ அல்லது புரட்சியாளர்களோ வன்முறைகள் மூலம் இலக்கை எட்ட முடியாது. நாட்டை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்கு சமரசப் பேச்சுக்களே ஒரே வழி'' என்று சிரிய துணை ஜனாதிபதி பரூக் அல் ஷாரா தெரிவித்தார்.

சிரிய ஜனாதிபதி அசாத்தின் குடும்பத்துக்கு, மிக நீண்ட காலமாக உதவி வரும் இவர் சிரியாவில் நாளுக்கு நாள் மோசமாகி வரும் மோதல்கள் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

''பாதுகாப்புப் படையினரும் இராணுவமும் இணைந்து மேற்கொள்ளும் போராட்டம் ஓர் உறுதியான வெற்றிக்கு இட்டுச் செல்லப் போவதில்லை. புரட்சியாளர்களாலும் இலகுவில் இராணுவத்தைத் தோற்கடிக்க முடியாது. இரு அணிகளினதும் ஒரே இலக்காக முடிவற்ற அவலமும் எல்லை மீறிப் போகும் வன்முறையுமே தொடரப் போகிறது. இதேவேளை, சிரிய புரட்சிப் படை இராணுவத்தை முறியடித்து தலைநகர் டமஸ்கஸ்ஸைக் கைப்பற்றும் அபாயமும் உள்ளது. எனினும் இது ஒரு முடிவாக அமையாது.'' என்று தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஈரான் அதிகாரிகள் முன்மொழிந்திருந்த சமாதான அணுகுமுறைத் திட்டங்களுடன் இவரது கருத்துக்கள் ஒத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## 'உலகம் அழியப் போகிறது'

# பீதியைக் கிளப்பிய 93 பேர் சீனாவில் மடக்கிப் பிடிப்பு!

## பொலிஸார் அதிரடி நடவடிக்கை

பீஜிங், டிசெ.19

இந்த வாரம் உலகம் அழிந்து விடும் என துண்டு பிரசுரங்கள் விநியோகித்து பீதியை கிளப்பிய 93 பேர் சீனாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தென் அமெரிக்காவில் பண்டைய காலத்தில் வாழ்ந்த மாயன் இனத்தவரின் நாள் காட்டியில் 21.12.2012 உலகம் அழியும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

உலக முழுவதும் இந்த கலண்டரின் கருத்தை நம்பும் பலர், உலகம் அழிவதை தடுப்பதற்காக சிறப்பு பிரார்த்தனையில் ஈடுபட்டுள்ளனர்.

சீனாவில் 'அல்மைட்டி காட்' என்ற அமைப்பை சேர்ந்தவர்கள், இந்த வாரம் உலகம் அழிந்து விடும், எனவே இந்த அமைப்பில் உள்ள உறுப்பினர்கள் தங்கள் சொத்துக்களை எல்லாம் ஒப்படைத்து விட வேண்டும் எனக் கூறியுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் சீனாவின் புஜியான், ஹூபி, சின்ஜியாங், குங்காய் உள்ளிட்ட பல மாகாணங்களில் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்து பிரசாரம் செய்து வருகின்றனர்.

இந்தநிலையில் மக்களை பீதியடைய செய்ததற்காக இந்த அமைப்பை சேர்ந்த 93 பேரை சீனப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.



வட கொரியாவின் முன்னாள் தலைவர் கிம் ஜோங் இல்லின் முதலாவது நினைவு நிகழ்வுகளில் பெருந்திரளானோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

# வங்கிக் கொள்ளையர் மிட் ரோம்னியா?

புளோரிடா, டிசெ.19

அமெரிக்காவின் வேர்ஜினியா மாகாணத்தில் வங்கிக் கொள்ளை ஒன்று நடந்துள்ளது. இதையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் தலைமைப் பிய்த்துக் கொண்டுள்ளனர். வங்கியின் பாதுகாப்புக் கமராவில் வங்கியைக் கொள்ளையடித்தவர் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஒபாமாவுக்கு எதிராக போட்டியிட்டு தோல்வியடைந்த மிட் ரோம்னி போன்று பதிவாகியுள்ளது.

வங்கிக் கொள்ளையில் ஈடுபட்டவன் புளோரிடா மாகாண கொடியை போன்ற சட்டையும், மிட் ரோம்னி போன்று முகமூடியும் அணிந்துள்ளான். இதனால் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள முடியாது பொலிஸார் திணறி வருகின்றனர்.

# ஈக்குவடோரில் குமுறும் எரிமலை

குயிற்றோ, டிசெ.19

ஈக்குவடோர் நாட்டில் எரி மலை குமுறத் தொடங்கி உள்ளதால், அப்பகுதியில் உள்ள மக்கள் வெளியேறும்படி எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

தென் அமெரிக்க நாடான ஈக்குவடோரில், துங்குரகுவா என்ற இடத்தில் உள்ள எரிமலை தற்போது குமுறி கொண்டிருக்கிறது.

இந்த எரிமலை இரவு நேரத்தில் வழக்கத்தை விட கூடுதலாக நெருப்பைக் கக்கி வருகிறது.

காற்றில் மாசு கலந்துள்ளதால் எச்சரிக்கையுடன் இருக்குமாறு பொதுமக்களை ஈக்குவடோர் அரசு கேட்டுக் கொண்டுள்ளது. இந்த எரிமலை சுமார் 5 ஆயிரம் மீற்றர் உயரம் கொண்டது.

# பாகிஸ்தானில் கார்க்குண்டு வெடிப்பு

## 5 பெண்கள் உட்பட 19 பேர் சாவு

இஸ்லாமாபாத், டிசெ.19

பாகிஸ்தானில் அரச அலுவலகம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட கார்க் குண்டுத் தாக்குதலில் 5 பெண்கள் உட்பட 19 பேர் உயிரிழந்தனர்.

பாகிஸ்தானின் வட மேற்கே கைபர் மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதியில் ஜூமுரூட் நகரில் உள்ள அரசு அலுவலகம் ஒன்றின் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அலுவலகத்தின் பெண்கள் காத்திருக்கும் பகுதியிலேயே குண்டு வெடிப்பு நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.



இந்தத் தாக்குதலில் 5 பெண்கள் உட்பட 19 பேர் உயிரிழந்தனர். இந்த தாக்குதலில் அருகில்இருந்த வணிக வளாகமும் தீப்பிடித்து எரிந்தது. தாக்குதலை அடுத்து அங்கிருந்த வாகனங்கள் தீப் பிடித்துக் கொண்டன.

இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த இயக்கமும் பொறுப்பேற்கவில்லை.

# தீவுகளை சீனாவுக்கு விட்டுக்கொடுக்க முடியாது

## ஜப்பானின் புதிய பிரதமர் அறிவிப்பு

டோக்கியோ, டிசெ.19

''தீவுப் பிரச்சினையில் சீனாவுடன் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை. ஜப்பானுக்கே அது சொந்தமான பகுதி'' என்று ஜப்பானின் பிரதமராகப் பொறுப்பேற்க உள்ள ஷின்சோ அபே தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்துள்ள தேர்தலில் பெருவெற்றிபெற்றுள்ள அபே பத்திரிகையாளர் சந்திப்பொன்றை நடத்தினார். அந்த சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தாவது:-

''தீவுப் பிரச்சினையில் சீனாவுடன் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை. சென்காகு தீவுக் கூட்டங்கள் (டியாவூஸ் என சீனா அழைக்கிறது) ஜப்பான் நாட்டின் ஒருங்கிணைந்த பகுதி. சர்வதேச சட்டப்படி இந்தத் தீவுக் கூட்டங்களை ஜப்பான் சொந்தம் கொண்டாடுவதுடன், தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது.

எனவே இதுதொடர்பாக மற்ற நாடுகளுடன் பேச்சுக்கள் நடத்த வேண்டிய அவசியம் இல்லை. தேசிய நலனை கருத்தில் கொண்டு ஜப்பான் மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளும் நல்லுறவை வளர்த்துக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். இதுவிடயத்தில் சீனா சற்றுப் பின் தங்கி உள்ளது. இருதரப்பு உறவை மேம்படுத்துவது குறித்து சீனாதான் அதிகளவு சிந்திக்க வேண்டியுள்ளது'' என்று தெரிவித்தார்.




# விமான நிலையம் அமைப்பதை எதிர்த்து பிரான்ஸில் போராட்டம்

பாரிஸ், டிசெ.19

மேற்கு பிரான்ஸில் நாண்ட்டேஸ் அருகில் நாட்டர் டேம் டெஸ்லாண் டெஸில் புதிய விமான நிலையம் அமைக்கப்படுவதை எதிர்த்து நில உரிமையாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசினர். இதன் போது பொலிஸாருக்கும், போராட்டகாரர்களுக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டன.



இந்த விமான நிலையக் கட்டுமானத் திட்டம் ஆளுங் கட்சிக் கூட்டணியில் பிளவை ஏற்படுத்தியுள்ளது. ஆளுங் கட்சிக் கூட்டணியில் இருக்கும் பசுமைக்கட்சியினர் இந்தத் திட்டத்துக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதலியைத் திருமணம் செய்கிறார் பெர்லுஸ்கோனி



ரோம், டிசெ.19

இத்தாலியின் முன்னாள் பிரதமர் சில்வியோ பெர்லுஸ்கோனி, தன்னை விட 50 வயது குறைவான பெண் ஒருவரை மணக்க உள்ளதாக தெரிவித்துள்ளார்.

இத்தாலியின் முன்னாள் பிரதமர் சில்வியோ பெர்லுஸ்கோனி (வயது 76). இவர் பதவியில் இருந்த போது பெண்களுக்காக பல கோடி ரூபா பணத்தை வாரி இறைத்தார். பேரக் குழந்தைகள் இருந்தாலும், இன்று வரையிலும் இளம் பெண்களுடன் சுற்றுவதை அவர் விடவில்லை.

இதற்கிடையே பிரான்செஸ்கோ (வயது 26) என்ற பெண்ணுடன் பல்வேறு விருந்து நிகழ்ச்சிகளில் பங்கேற்று வருகிறார். இந்நிலையில் "தனிமையில் இருந்த எனக்கு பிரான்செஸ்கோவுடன் இருப்பது சந்தோஷமாக உள்ளது. எனவே பிரான்செஸ்கோவைத் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்துள்ளேன்" என்று தெரிவித்துள்ளார் பெர்லுஸ்கோனி.

## நைஜீரியாவில் 6 பேர் கடத்தப்பட்டனர்

நைஜீரியாவின் தென் பகுதியில் துப்பாக்கிதாரிகளால் ஆறு பேர் கடத்தப்பட்டுள்ளனர். தென் கொரிய கட்டட நிர்மாண நிறுவனமொன்றின் பணியாளர்களே இவ்வாறு கடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடத்தப்பட்டவர்களில் நான்கு வெளிநாட்டவர்களும், இரண்டு நைஜீரியப் பிரஜைகளும் அடங்குகின்றனர். இந்த கடத்தல் சம்பவத்தைத் தொடர்ந்து, நைஜீரியாவின் தென்பகுதியில் உள்ள நிறுவனங்களுக்கு பாதுகாப்பை வழங்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# ஈராக்கில் வன்முறைகள்; 25 பேர் சாவு; 37 பேர் காயம்

பக்தாக், டிசெ.19

ஈராக்கில் நேற்றுமுன்தினம் பல்வேறு இடங்களில் இடம்பெற்ற பல்வேறு வன்முறைச் சம்பவங்களில் 25 பேர் உயிரிழந்தனர். 37 பேர் காயமடைந்தனர்.

ஈராக்கிலிருந்து அமெரிக்கப் படைகள் முழுமையாக வெளியேறி ஓராண்டு நிறைவடையும் நிலையில் இந்தச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

மேற்கு திக்ரித் நகரில் பொலிஸ் சோதனை நிலையம் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இதில் பொலிஸ்காரர் ஒருவர் உயிரிழந்தார்; மூன்று பேர் காயமடைந்தனர். தாக்குதலாளிகளைத் துரத்திச் சென்ற பொலிஸார், அவர்களின் காரை நெருங்கியதும் பயங்கரவாதிகள் வெடிகுண்டை வெடிக்கச் செய்தனர்.

இதில் 4 பொலிஸார் உயிரிழந்தனர். 2 பேர் படுகாயமடைந்தனர்.

அவர்களின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு பாக்தாத்தின் அல்-பஸ்லைபி கிராமத்தில் இராணுவ வீரர்களைக் குறிவைத்து, பயங்கரவாதிகள் வீதியோரத்தில் வெடிகுண்டுத் தாக்குதலை மேற்கொண்டனர். இதில் ரோந்து சென்ற இராணுவத்தினரில் 3 பேர் அந்த வெடிகுண்டில் சிக்கி உயிரிழந்தனர். வடக்கு ஈராக்கில், சிறுபான்மையினரான ஷாபக் பிரிவு மக்கள் அதிகம் வசிக்கும் காஸ்னா என்ற கிராமத்தில் நிகழ்ந்த கார் குண்டு வெடிப்பில் 7 பேர் உயிரிழந்தனர்; 12 பேர் காயமடைந்தனர்.

துஸ் குர்மாட்டு நகரில், ஷியா பிரிவு முஸ்லிம்களின் வழிபாட்டுத்தலம் அருகே இரண்டு கார்களில் வைக்கப்பட்டிருந்த குண்டுகள் வெடித்ததில் 5 பேர் உயிரிழந்தனர். 20 பேர் காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் மட்டும் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களில் மொத்தம் 25 பேர் உயிரிழந்துள்ளனர். 37 பேர் காயமடைந்துள்ளனர்.

# எகிப்தின் அரச குற்றவியல் வழக்கறிஞர் பதவி விலகினார்

கெய்ரோ, டிசெ.19

வலுப்பெற்றுவரும் ஆர்ப்பாட்டங்களையடுத்து எகிப்தின் புதிய அரச குற்றவியல் வழக்கறிஞர் தமது பதவி விலகல் கடிதத்தை கையளித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக்கின் ஆட்சியின்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் கொல்லப்பட்டமை தொடர்பான மீள் விசாரணைக்காக அரச குற்றவியல் வழக்கறிஞராக தலாட் இப் ராஹிம் நியமிக்கப்பட்டிருந்தார்.

ஏற்கனவே இந்தப் பதவியில் இருந்த அப்துல் மஜிட் மொஹமட் என்பவரை பதவி நீக்கம் செய்த ஜனாதிபதி முர்சி, கடந்த மாதம் இந்த நியமனத்தை மேற்கொண்டிருந்தார்.



ஜனாதிபதி முர்சியின் இந்த நடவடிக்கை நீதிமன்ற சுயாதீனத்திற்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளதெனக் கூறி நீதிபதிகளும், நீதித்துறை ஊழியர்களும் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துவந்தமை குறிப்பிடத்தக்கது.

## பிரேஸிலின் பெரும் ஊழல் வழக்கு
### அரசியல் பிரமுகர்கள் 25 பேருக்கு தண்டனை

பிரேஸிலில் அண்மைக் கால வரலாற்றில் இடம்பெற்ற மிகப்பெரிய அரசியல் ஊழல் தொடர்பான வழக்கின் தீர்ப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லூலா ட சில்வாவின் அரசுக்கு ஆதரவை பெற்றுக்கொள்வதற்காக கூட்டணிக் கட்சிகளுக்கு பொது நிதி லஞ்சமாக வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

நான்கு மாதங்களாக முன்னெடுக்கப்பட்டுவந்த விசாரணையை நிறைவு செய்த பிரேஸில் உயர் நீதிமன்றம் இந்த வழக்கில் முக்கிய அரசியல் பிரமுகர்கள் உள்ளிட்ட 25 பேருக்கு தண்டனை விதித்துள்ளது.

தண்டனை விதிக்கப்பட்டுள்ளவர்களில் ஆளும் தொழில் கட்சியின் முக்கிய அரசியல் பிரமுகர்களும் அடங்கியுள்ளனர்.

லூலா ட சில்வாவின் நிர்வாகம் பெரும் நெருக்கடிகளை சந்தித்திருந்த 2005 ஆம் ஆண்டிலேயே இந்த ஊழல் சம்பவம் இடம்பெற்றிருந்தது. எனினும் அதே ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வெற்றியீட்டிய அவர் மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பதினாறாம் ஆண்டு நினைவில்....



அமரர்

**வி.எஸ். குணசிங்கம்**

(ஓய்வுபெற்ற எழுதுநர் - வைபரிபாலன திணைக்களம்)

திதி: 19.12.2012

மண்ணில் 05.02.1931

விண்ணில் 01.12.1995

உங்கள் விழி பேசும் மொழியும்
என்றும் கருத்தூன்றிய உங்கள் மௌனமும்
தங்கள் வழிபுரிந்து வளர்த்து விட்ட விருட்சம்
எங்கள் விழுதுகளோடு என்றும் உங்கள் ஆசிகளுடன்....

யாழகம்,
03, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(2691) (45.6.7)

**வீடு விற்பனைக்கு**

மானிப்பாய் வீதி, ஓட்டுமடம் சந்தியில் இருந்து யாழ். நோக்கி 50 மீற்றர் தொலைவில் 3பரப்புக் காணியில் 6 அறைகள் கொண்ட சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. விலை. 130, இலட்சம் தரகர் தேவையில்லை தொடர்பு: 077 312 7083

(24809) (45.6.7)

## மரண அறிவித்தல்



திருமதி **இராசம் இரத்தினம்** (பெரியபிள்ளை)

பருத்தித்துறை, பூதராயர் ஒழுங்கையை பிறப்பிடமாகவும், காங்கேசன்துறை சந்தை வீதியில் வசித்தவரும் தற்போது வத்தளையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராசம் இரத்தினம் (பெரியபிள்ளை) 10.12.2012 திங்கட்கிழமை வத்தளையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை- சின்னமணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சூசைமுத்து இரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், சாவித்திரி (சரசு), காலஞ்சென்றவர்களான சிங்காரவேலு, வள்ளியம்பாள், திருநாவுக்கரசு மற்றும் சிவராஜா, துளசி, சேதுலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் சக்திவேல், இந்திரலிங்கம்,பாலேந்திரன், புவனேந்திரன், சாந்தனிதேவி ஆகியோரின் அன்புத் தாயும் குலதிலகமணி( திருப்பதி), இந்திராணி, பத்மாவதி, சிவலட்சுமி(கெங்கா), செல்வ நாயகி, கிருஸ்ணமூர்த்தி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12.12.2012 அன்று வத்தளை கெரவலப்பிட்டிய பொது மயானத்தில் இடம்பெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாவல்: பிள்ளைகள்

(25588) (8.7.4)

இந்திரன் - 0770203631, புவா - 0718077299, சாந்தினி - 0112938643.

## இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்
### காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை
### காங்கேசன்துறை

## வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2013
## REGISTRATION OF SUPPLIERS - 2013

இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை, காங்கேசன்துறையில் உள்ள கொங்றீற் உற்பத்திப் பகுதிக்கும் அலுவலகப் பகுதிக்கும் 2013 ஆம் ஆண்டுக்குத் தேவையான பின்வரும் பொருள்களையும் சேவையினையும் வழங்கக் கூடிய வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

**பொருள்கள்**

01. உடைந்த சல்லிக் கல் (Crushed Metal) ½", ¾"
02. சிமெந்து (Cement)
03. முறுக்குக் கம்பிகள் (Tore Steel)
04. மென் உருக்குக் கம்பிகள் (M.S.Bars)
05. கட்டுக் கம்பிகள் (Binding Wire)
06. கட்டட வேலைக்கான உபகரணங்கள்
07. மின்சாரப் பொருள்களும் மின்சார உபகரணங்களும்
08. வாகன உதிரிப்பாகங்கள்(Mitsubishi Double Cab & Tipper) வாகனத்துக்குரியவை
09. ரயர்களும், ரியூப்களும் (Tyer & Tubes)
10. மோட்டார் வாகன பற்றறிகள்
11. துவிச்சக்கர வண்டி உதிரிப்பாகங்கள்
12. காகிதாதிகளும் அலுவலகப் பாவனைப் பொருள்களும் (Stationary & Office Requisites)
13. அலுவலகத் தளபாடங்கள்
14. கணினிப் பொருள்களும் உதிரிப்பாகங்களும் (Computer Spares)

**சேவைகள்**

01. வாகனம் பழுது பார்த்தலும் துப்புரவு செய்தலும் (Repairs & Servicing)
02. கணினி பழுது பார்த்தலும் துப்புரவு செய்தலும் (Repairs & Servicing)

மேற் கூறப்பட்ட பொருள்களையும் சேவைகளையும் வழங்குவதற்காக கூட்டுத்தாபனத்தில் பதிவு செய்துகொள்ள விரும்புபவர்கள் 15.01.2013 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கத்தக்க வகையில் தங்களின் பெயர், முழுவிலாசம் வழங்கப்படக்கூடிய பொருள்கள், சேவைகள் விவரம் கொண்ட விண்ணப்பத்தினை தங்களுடைய கடிதத் தலைப்பில் (Letter Head) அல்லது கடிதத்தில் தங்களது றபர் முத்திரையிட்டு (Rubber Stamp)பின்வரும் விலாசத்துக்கு தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

விநியோக உத்தியோகத்தர்
இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்,
காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை, காங்கேசன்துறை.

(சி/2645) (45.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலகீனம், பலகீனம் அல்ல!

(2)

ஒரு புகழ்பெற்ற மனிதருடைய வாழ்க்கையைப் பற்றி எழுதுகின்றவர்கள் அவருடைய சாதனைகளையும் சிறப்புகளையும் மட்டும் சொல்லி அவருடைய வரலாற்றை முடித்து விடுகிறார்களே தவிர, குறைபாடுகளைச் சொல்வதில்லை. அப்படிப் பட்ட வரலாறுகளை படிக்கின்ற நாம் அவர்களை தெய்வங்களாகவும், தேவதைகளாகவும் எண்ணிப் போற்றத் தொடங்கி விடுகின்றோம்.

அதே சமயம் நம்முடைய மனதில் ஓர் ஆழமான எண்ணம் பதிந்து விடுகின்றது. இந்தச் சாதனையாளர்கள் எல்லாம் பெரிய மகான்கள், குறைபாடுகளே இல்லாதவர்கள், குறைபாடு உள்ள நம்மால் இவர்களைப் போல சாதனைகள் புரிய முடியாது என்கிற எண்ணத்திற்கு ஆளாகி விடுகிறோம். இது உண்மையே அல்ல.

காந்தியடிகள் சுய சரிதையில் தன்னுடைய குறைபாடுகள், பலகீனங்களை நிறையவே சொல்லி இருக்கிறார். அவற்றை வென்று தன்னால் எவ்வாறு சாதனைகள் நிகழ்த்த முடிந்தது என்பதையும் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

'ஒவ்வொரு மகானுக்கும் கடந்த கால வாழ்க்கை ஒன்று உண்டு, ஒவ்வொரு பாவிக்கும் பிரகாசமான எதிர்காலமும் உண்டு' என்பது ஓர் ஆங்கில வாசகம்.

வாழ்க்கையின் யதார்த்தம் இதுதான். எல்லா மனிதர்களுமே குறைபாடுகள் உடையவர்களாக இருக்கிறார்கள். பிறக்கும்போதே எவரும் மகானாகப் பிறப்பதில்லை. அதுபோல் பாவியாகவும் பிறப்பதில் குறைகளுக்கு மத்தியிலேதான் மனிதன் சாதனைகள் புரிகிறான். இந்த உண்மையினை நாம் புரிந்து கொண்டால், நம்மிடம் உள்ள குறைபாடுகளை சாதனைகளுக்குத் தடையாகக் கருத வேண்டிய அவசியம் இருக்காது.

குறைபாடுகளை நாம் பெரிதுபடுத்திப் பார்ப்பதற்கு ஒரு முக்கிய காரணம் இருக்கிறது. நம்முடைய சிறப்புகளை எண்ணிப் பார்ப்பதை விட, குறைபாடுகளை எண்ணிப் பார்ப்பதிலேயே நாம் அதிக நேரத்தைச் செலவிடுகிறோம். இதன் விளைவாக நம்முடைய சிறப்புத் தன்மைகள் பின்னுக்குத் தள்ளப்பட்டு, குறைபாடுகள் நம்மீது ஆதிக்கம் செலுத்தத் தொடங்கி விடுகின்றன.

சில சாதனையாளர்களின் வாழ்க்கைச் சம்பவங்களைப் படிக்கின்றபோது நமக்கு வியப்பாக இருக்கிறது. கிராமஃபோன் பெட்டியைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஒரு காலத்தில் இசைத் தட்டுகளை இந்தப் பெட்டியில் வைத்துத்தான் பாட விட்டார்கள்.

இப்போது நவீன கண்டுபிடிப்புகளில் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டு ஒலி நாடாக்கள் நடைமுறைக்கு வந்து விட்டன. இவை எல்லம் கிராமஃபோனின் வளர்ச்சி பெற்ற வடிவங்களே.

இந்தக் கிராமஃபோனைக் கண்டுபிடித்தத் தாமஸ் அல்வா எடிசனுக்குக் காது கேட்காது. காது கேட்காத ஒருவர் தான் கேட்டு மகிழும் கருவியைக் கண்டுபிடித்தார் என்பது வியப்பாக இல்லையா?

அவரிடமிருந்த குறைபாடு அவர் செய்த சாதனைக்குத் தடையாக இருக்கவில்லை. தனக்குக் காது கேட்காது என்பதற்காக, மற்றவர்கள் கேட்டு அனுபவிக்கக் கூடிய ஒரு சாதனத்தை அவர் கண்டு பிடிக்காமலும் இருந்து விடவில்லை.

ஆங்கில இலக்கியத்தில் மூன்று விஷயங்களை சிறப்பானதாகச் சொல்லுவார்கள். ஒன்று பைபிள். மற்றொன்று ஷேக்ஸ்பியரின் நாடகங்கள். மூன்றாவது மில்டனின் காவியங்கள். 'சொர்க்கம் இழக்கப்படல்' என்கிற ஒப்பற்ற காவியத்தை எழுதிய மில்டனுக்கு கண் குருடு. அவர் சொல்லச் சொல்ல அவருடைய மகள் தான் அந்தக் காவியத்தினை எழுதி முடித்தாள்.

இப்படி எத்தனையோ சம்பவங்களை சொல்லிக் கொண்டே வரலாம். சாதனைகளுக்கும், மனித குறைபாடுளுக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை என்பதை முதலில் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அப்படியானால் சாதனை நிகழ்த்துவது இவர்களுக்கெல்லாம் எப்படிச் சாத்தியமாயிற்று?

இதற்கு ஒரே பதில், தங்களுடைய குறைபாடுகளை இவர்கள் பொருட்படுத்தியதே இல்லை என்பது தான்.

நம்முடைய காலத்தில் எழுத்துத் துறையிலும், பத்திரிகைத் துறையிலும் மிகப்பெரிய சாதனைகள் புரிந்த கல்கி என்று அழைக்கப்படும் ரா.கிருஷ்ண மூர்த்தியை அறியாதவர்கள் இருக்க முடியாது. ஆஸ்த்மா நோயினால் அவதிப்பட்டவர் அவர். ஆனாலும் பல்லாயிரம் பக்கங்கள் கொண்ட நாவல்களை, நோயின் உபாதைகளைப் பொருட்படுத்தாமல், படுக்கையில் குப்புறப்படுத்துக் கொண்டே எழுதுவாராம்!

சாதனைக்கு நோய் தடையாக அவருக்கு இருக்கவில்லை.

இன்னும் சிலருடைய வாழ்க்கையில் நோயே கூட சாதனைக்குக் காரணமாக இருந்திருக்கிறது. ஒருவர் நோய்வாய்ப்பட்டு பல மாதங்கள் படுத்த படுக்கையிலேயே இருக்கின்ற நிலைமை ஏற்பட்டது. படுத்துக் கொண்டிருந்தவருக்கு பொழுது போகவில்லை. இரவு நேரங்களில் வானத்தைப் பார்ப்பதையே பொழுது போக்காக வைத்துக் கொண்டார்.

வானத்தில் உள்ள நட்சத்திரங்கள் இடம் மாறிக் கொண்டே இருப்பதை உற்சாகத்துடன் கவனிக்கலானார். அதன் விளைவாக வான சாஸ்திரம் பற்றி அவருக்கு ஆர்வம் ஏற்பட்டு அது தொடர்பான நூல்களை நிறையப் படித்தார். காலப்போக்கில் உலகப் புகழ்பெற்ற வான் ஆராய்ச்சி நிபுணருமானார்.

ஆக, சாதனை என்பது நம்முடைய மனதில் தான் ஆரம்பமாகிறது. ஒரு காரியத்தில் முழு மூச்சுடன் நாம் ஈடுபடுகின்றபோது நம்மிடம் உள்ள குறைபாடுகள் எதுவாக இருந்தாலும், அவை பலமிழந்து போகின்றன.

குறைபாடுகளைப் பற்றி நான் அதிகமாகச் சொல்வதற்குக் காரணம் இருக்கிறது.

பி.சி.கணேசன் (தொடரும்)

# சுகாதார நடவடிக்கையை மேற்கொள்வதன் மூலம் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க முடியும்

## யாழ்.மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

**தொற்றுநோய்கள், தொற்றா நோய்கள் மூலம் உண்டாகக் கூடிய உயிரிழப்புகள் ஏனைய பாதிப்புக்களையும் தவிர்க்க முடியும்.**

யாழ்ப்பாணம்,டிசெ.19

கிராமிய மட்டத்தில் குழுக்களை அமைத்து அதனூடாக சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் ஆரோக்கியமான சமூகத்தையும், சுகாதாரமான சுற்றாடலையும் உருவாக்க முடியும். சுகாதாரம் எமது உடல் உள ஆரோக்கியத்தைச் சிறந்த முறையில் பேணுவதற்கு கைகொடுப்பதால் அதனை உரிய முறையில் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் தேசிய சுகாதார வாரத்தின் ஆரம்ப நிகழ்வு கடந்த 10 ஆம் திகதி யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அருமைநாயகம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்டத்தில் சுகாதாரம் சார்ந்த செயற்பாடுகள் பரவலாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் மட்டுமல்லாது வீடுகளிலும் சுகாதாரம் சரியாகப் பேணப்பட வேண்டும். இதுவரை 350 இற்கும் மேற்பட்ட பொது இடங்களில் டெங்கு நோயை இல்லாதொழிப்பதற்காக சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகளைத் தனியாக சுகாதாரத் துறையினர் மட்டும் மேற்கொள்ள வேண்டியதில்லை. பாடசாலை மற்றும் கிராமிய அடிப்படையில் குழுக்களை அமைத்து விழிப்புணர்வு நடவடிக்கைகளை மக்கள் மத்தியில் மேற்கொள்ளலாம்.

குறிப்பாக அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் சிரமதானத்துக்கென ஒரு குறித்த நேரத்தை ஒதுக்கி ஆரோக்கியமான சூழலைப் பேணலாம். எமது சூழல் எமது ஆரோக்கியம் எனும் நிலை அனைவரிடமும் இருக்க வேண்டும்.

''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' என்பார்கள். எனவே இந்த நோயை இல்லாது ஒழிக்க சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டியது அவசியமாகும். தொற்றுநோய்கள், தொற்றா நோய்கள் மூலம் உண்டாகக் கூடிய உயிரிழப்புகள் ஏனைய பாதிப்புக்களையும் தவிர்க்க முடியும் - என்றார். (எ-14)

## அரச ஊழியருக்கான ஆக்கத்திறன் போட்டி முடிவு

அரச ஊழியர்களுக்கு இடையிலான ஆக்கத்திறன் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு அண்மையில் கொழும்பு மியூசியம் கேட்போர் கூடத்தில் பரிசுகள் வழங்கப்பட்டன.

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சினால் அரச ஊழியர்களுக்கு இடையிலான ஆக்கத்திறன் போட்டி வருடாந்தம் நடைபெற்று வருகின்றது.

இந்த வருடம் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:-

**பாடலாக்கம்**

1 ஆம் இடம்-சி.அஜந்தன் (நவாலி), 2 ஆம் இடம்-திருமதி கலைவாணி சதாசிவம் (பாலமுனை), 3 ஆம் இடம்-பெரியசாமிப்பிள்ளை லோகேஸ்வரன்.

**கவிதையாக்கம்**

1 ஆம் இடம்-உ.சுகாஜனன் (ஊர்காவற்றுறை, உதவி அரச அதிபர் பணிமனை), 2 ஆம் இடம்-மு.கார்த்திகா (ஸ்ரீலங்கா ரயில்வே திணைக்களம்), 3 ஆம் இடம்- வ.வடிவழகையன் (ஊர்காவற்றுறை அரச அதிபர் பணிமனை).

**சிறுகதையாக்கம்**

1 ஆம் இடம்-திருமதி சு.மதியழகன் (நல்லூர் பிரதேச செயலகம்), 2 ஆம் இடம்-வே.சிவராஜா (வடக்கு மாகாண சமூக சேவை திணைக்களம்), 3 ஆம் இடம்-திருமதி ஆ.நாகேந்திரன்.

**சிறுவர் கதையாக்கம்**

1 ஆம் இடம்-பி.லோகேஸ்வரன் (நாவலப்பிட்டி கதிரேசன் மகளிர் கல்லூரி), 2 ஆம் இடம்-திருமதி ஸ்ரீ பேரின்பகுமார் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), 3 ஆம் இடம்-ஆ.தீபன்திலீசன் (பூநகரி மகா வித்தியாலயம்).

**சித்திரம்**

1 ஆம் இடம்-எஸ்.ஜெகன் (மாங்குளம்), 2 ஆம் இடம்-சி.பெரியாம்பிள்ளைமுரளி (புசல்லாவ சரஸ்வதி மத்திய கல்லூரி), 3 ஆம் இடம்-திருமதி த.விமலன் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

**மேடை நாடகம்**

1 ஆம் இடம்-''தொடர்பாடல் நாடகம்''- கே.திலகநாதன்- எழுத்துரு, இயக்கம், 2 ஆம் இடம்-''கோலம்'' நாடகம்-திருமதி ஈஸ்வரி ஜெயராசா-எழுத்துரு, இயக்கம், 3 ஆம் இடம்- வீட்டுவீடு நாடகம்-[illegible] எழுத்துரு, இயக்கம். (வ-402)



துணுக்காய் ஆரோக்கியபுரம் தமிழ் வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த ஒரே மாணவனான கோ.பவித்திரனுக்கு துணுக்காய் பிரதேச செயலர் சி.குணபாலன் பரிசில் வழங்குகிறார். (ம-18)

## நிர்வாகிகள் தெரிவு

அளவெட்டி,டிசெ.19

உரும்பிராய் வடக்கு இலக்குமி சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தின் 2013 ஆம் ஆண்டுக்கான நிர்வாக சபைத் தெரிவும் பொதுக் கூட்டமும் அண்மையில் நடைபெற்றன.

இதில் த.ஜெயச்சந்திரா தலைவராகவும், க.கௌரி செயலாளராகவும், க.மதிவதனி பொருளாளராகவும், உபதலைவராக பொ.வசந்தியும் உப செயலாளராக சி.மயூரியும் நிர்வாக சபை உறுப்பினர்களாக வி.மகேஸ்வரியும் க.விஜிதாவும், கணக்காய்வாளர்களாக ந.தர்மினி, கு.கவிதா ஆகியோரும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். (ம-36)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வீதி, முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066

**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395

**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா போன்ஸ்' –மாலுசந்தி, அல்வாய் : 021226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்புமகன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

# அதிகாரத்தின் பணி

**''காணி நிலம் வேண்டும் பராசக்தி காணி நிலம் வேண்டும்**
**அங்குத் தூணில் அழகியதாய் நன்மாடங்கள் துய்ய நிறத்தினவாய்**
**அந்தக் காணி நிலத்திடையே ஓர் மாளிகை கட்டித் தரவேண்டும்...''**

பாரதி ஒரு மனிதனின் தேவைகளில் இன்றியமையாத தாய்க் குறிப்பிடும் காணி, வீடு தமிழ் மக்களுக்கு கனவாக மட்டுமே இருக்கிறது. இருக்கக்கூடியதை இன்னும் இன்னும் இழந்துகொண்டே இருக்கிது.

தமிழ் மக்கள் தமது காணிகளில் மாளிகை கேட்கவில்லை. இருக்கும் காணிகளை எங்களிடம் விட்டுவிடுங்கள், மேலதிகமானவற்றை இல்லாதவர்களுக்கு பிரித்துத் தாருங்கள் என்று தான் அரசைக் கேட்கின்றனர். ஆனால், இந்தக் குறைகள் அப்படியே இருக்க மேலதிகமாக அவர்களின் இல்லிடங்களுக்கு நெருக்கடி கொடுப்பதிலேயே குறியாக இருக்கிறது அரசு.

வன்னியில் காணிப் பங்கீடுகள் தொடர்பாகவும் காணி அபிவிருத்தி தொடர்பாகவும் தற்போது பல்வேறு சர்ச்சைகள் எழுந்துள்ளன. புதிதாக தமிழ் பேசும் மக்களுக்குள்ளேயே பிரச்சினையைக் கிளறிவிடவும் அரசு திட்டம் தீட்டியுள்ளது. குறிப்பாக முஸ்லிம் மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் வவுனியா, மன்னார் மாவட்டங்களில் திட்டமிட்டு இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இனத்தையும் மதத்தையும் பயன்படுத்தி நில ஆக்கிரமிப்பை மேற்கொள்ளும் முயற்சியாகவே இந்தக் காரியம் பார்க்கப்படுகிறது. இதற்கு அது சார்ந்த அமைச்சர்களும் நன்றாகப் பயன்படுத்தப்படுகிறார்கள். இதனால் தமிழ், முஸ்லிம் உறவுகளே பலவீனம் ஆகும் என ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர். தமிழ் முஸ்லிம் மக்களிடையே விரும்பத்தகாத பிரச்சினைகளை உருவாக்கி அதன்மூலம் யாரோ குளிர்காய்கிறார்கள் என்பதை இத்திட்டங்களுக்கு காரணமாக இருப்பவர்கள் புரிந்துகொள்வதாக இல்லை.

இவ்வாறு ஒருபுறம் இருக்க படையினருக்கும் பொலிஸாருக்கும் வடக்குக் கிழக்கில் காணி நிலம் வழங்குவதற்கு பெரு வள்ளல்கள் தாராளமாக உள்ளனர். இதனாலோ என்னவோ படை முகாம்களும் பொலிஸ் நிலையங்களும் முழத்துக்கு முழம் எழுந்து நிற்கின்றன.

வவுனியா மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் பொது மக்கள் தேவைக்கு பயன்படுத்தப்படும் காணிகளுக்கு மேலதிகமாக சில முக்கியமான இடங்களில் படையினருக்கு காணி ஒதுக்கப்பட்டுள்ளது. புளியங்குளம், கனகராயன்குளம் ஆகிய இடங்களில் இராணுவத்தினருக்கும் பொலிஸாருக்குமென 19 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது இவர்களுக்கு நிரந்தர முகாம் அமைப்பதற்கு வழங்கப்பட்டுள்ளது.

கனகராயன்குளத்தில் பௌத்தவிகாரை ஒன்று தனியாரின் காணியில் அமைக்கப்பட்டு வருவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இவைதவிர இராணுவத்தினர் தமது முகாம்களில் புத்தர் சிலைகளை நிறுவி அந்தப் பிரதேசங்களை ஆக்கிரமித்து வருகின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் மூலம் நாளடைவில் அங்கு பௌத்த சங்கங்கள் உருவாக்கப்பட்டு விகாரைகளும் எழுச்சிபெற்று சிங்களமயமாகும் சாத்தியங்களே அதிகம் காணப்படுகின்றன.

காணி வேண்டுமென அரச செயலகங்களுக்கு அலையும் மக்கள் தொகை இன்றும் வெளியில் காத்திருக்கின்றன. அவர்களுக்கு சரியான பதில் வழங்கப்படாது அவர்கள் அலைக்கழிக்கப்படுகின்றனர். அமைச்சரதும் ஆளும் அரசியல் வாதிகளதும் செல்வாக்குக்கு உட்பட்டவர்களுக்கு வழங்கப்படும் கவனிப்புகளும் பின்புலமற்ற ஏழை மக்களுக்கு வழங்கப்படுவதில்லை. செயலகங்களில் அவர்கள் தமது பிரச்சினையை சொன்னால் கேட்பதற்குக்கூட ஒருவர் இருப்பதாகத் தெரியவில்லை. சாட்டுப் போக்குக்கு கதை சொல்லி அனுப்பவே சிலர் முனைகின்றனர். ஆனால் ஐயா அனுப்பிய ஆள் என்று ஒரு கதை கேட்டாலே வந்தவரை இருத்தி வைத்து அடியில் இருந்து நுனி வரை விசாரிக்கும் பழக்கம் இன்னும் இருக்கவே செய்கிறது.

பாவம் வெளியில் வரிசையில் பலர் காத்திருக்கின்றனர் என்பது பற்றியோ அந்த மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பது பற்றியோ எத்தனை அதிகாரிகள் சிந்திக்கிறார்கள்? பதவி, அதிகாரம் என்பவற்றுக்காக ஏழை மக்கள் இன்றும் இல்லாதவர்களாகவே மாற்றப்படுகின்றார்கள். மீண்டும் பதவி அதிகாரங்களுக்காக எமது இருப்பு இல்லாமல் போகிறது. அதற்கு நாமே காரணமாக இருக்கிறோம். பதவிகள் மக்களுக்கானவை என்பது உணரப்படும் வரை அதிகாரத்தின் கைப்பொம்மைகளாகவே மக்கள் சேவையாளர்கள் இருப்பார்கள். அந்தக் காலம் எப்போது வருமோ. வரும் என்பதில் மக்கள் நம்பிக்கை அற்றிருக்கிறார்கள்.

# தன்னிச்சைப் போக்கு அரசியலிலும் தவறானதென்பதே யதார்த்தம்

மூலம்:லங்காதீப
சீ.ஜே.அமரதுங்க
தமிழில்:வி.எஸ்.ரி.

கிழக்கு மாகாணம் சம்பூரில் உத்தேச அனல்மின்நிலையம் அமைக்கும்திட்டம்தொடர்பாக இந்திய மின்சக்தி கூட்டுத்தாபனத்துக்கும், இலங்கை மின்சார சபைக்குமிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக அத்திட்டம் கைவிடப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. குறிப்பிட்ட திட்டத்துக்கான செலவினமாக இந்தியா மிகப்பெரும் தொகையைக் கோரியுள்ளதாக இலங்கைத்தரப்பு கருதுவதே அதற்கான காரணமெனத் தெரிய வருகின்றது.

அதே வேளை இந்தியத் தயாரிப்பு மோட்டார் வாகனங்களுக்கான இறக்குமதி வரியை இலங்கை அதிகரித்துள்ளமை தொடர்பாக ராஜீக மட்டத்தில் இந்தியா இலங்கை அரசுடன் பேச்சு நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஜப்பான் தயாரிப்பு மோட்டார் வாகனங்களுக்கு இலங்கை அரசு இறக்குமதி வரி சலுகை வழங்கியிருப்பது இந்தியாவுக்கு எதிராக வேண்டுமென்றே மேற்கொள்ளப்படும் நடவடிக்கையென இந்தியா கருதுவதாகவும் கூறப்படுகிறது.

2006 ஆம் ஆண்டில் நாட்டில் போர்ச் சூழல் நிலவிய பின்னணியிலேயே சம்பூர் அனல் மின் நிலையத்தை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இலங்கை அரசு இந்தியாவுடன் ஏற்படுத்திக் கொண்டது. போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு இந்தியாவின் உதவியைப் பெறுவது இந்த நடவடிக்கைக்கான நோக்கமாக இருந்திருக்கக் கூடும். ஆயினும் அத்திட்டம் இற்றைவரை ஆரம்பிக்கப்படாது இழுபறிப்பட்டுச் செல்லும் நிலையே தொடர்கிறது.

குறிப்பிட்ட திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் இந்தியா பெரும் இலாபம் ஈட்ட முயல்வதாக இலங்கை மின்சாரசபைத் தரப்பின் குற்றச்சாட்டிலும் ஓரளவு உண்மை இருக்கக் கூடுமாகிலும், இது தீர்க்கப்பட இயலாததொரு விடயமாக உள்ளமையே பிரச்சினைக்கு உரியதாகியுள்ளது.

இலங்கை நிர்வாகத் தரப்பின் செயற்திற நலிவு நிலை, நாட்டின் வர்த்தகத்துறைப் போட்டி காரணமாக அதிகூடிய செலவீனம் என்பவற்றைச் சீர்தூக்கிப் பார்த்தே, இத்திட்டத்தை நிறைவேற்றித் தரமுன்வந்த இந்திய அரச கூட்டுத்தாபனம் செலவினத் தொகையை நிர்ணயித்திருக்கலாம். அதுவுமன்றி, இந்திய அரச கூட்டுத்தாபனம் கூட இலாபமீட்டும் நோக்கிலேயே இத்தகைய திட்டங்களைக் கையேற்கிறது என்பதும் யதார்த்தமே. அதே வேளை இவ்விரு தரப்புகளிடையே உருவாகியுள்ள சிக்கல் அரசியல் ரீதியிலானதல்ல எனவும், தொழில் நுட்ப ரீதியிலான தொன்றேயெனவும் அமைச்சர் சம்பிக ரணவக்க தெரிவித்திருந்தார்.

ஆயினும் அது நுரைச் சோலை அனல்மின்நிலைய நிர்மாணப் பணியை சீனாவுக்கு வழங்கியதன் மூலம் இந்தியாவுக்கு ஏற்பட்ட அதிருப்தியைப் போக்க அரசியல் ரீதியில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமாகவும் இருக்கக் கூடும். மறுபுறம் இலங்கையில் இத்தகைய நிர்மாணப் பணியூடாக வர்த்தக நடவடிக்கையை மேற்கொள்ள இந்தியாவுக்கு வாய்ப்பளிப்பதன் மூலம் போரில் வெற்றியடைய இந்தியாவின் உதவி ஒத்தாசையை ஈட்டும் நோக்கம் கொண்ட அவ்வேளைய அரசியல் ரீதி யிலான தீர்மானமாகவும் இருக்கக்கூடும்.

திறந்த கேள்விப் பத்திர கோரல் நடைமுறை மூலம் இப்பணி வெளிநாட்டு நிறுவனமொன்றிடம் கையளிக்கப்பட்டிருப்பின், பணிக்கான செலவின மதிப்பீடு வெகுவாக குறைய வேண்டியிருந்தும் அரசியல் நோக்கில் அப்பணிக்கான ஒப்பந்தம் இந்திய நிறுவனத்துக்கு வழங்கப்பட்டதால் ஏற்பட்டுள்ள சிக்கலுக்கு அரசியல் ரீதியிலே தீர்வு காணப்பட்டாக வேண்டும். மாறாக அத்திட்டத்தையே கைவிட முனைவது தவறாகும். ஆயினும் இந்தியாவுடனான ஒப்பந்தம் கைவிடப்பட்டாலும், தாம் வேறொரு நாட்டுடனான ஒப்பந்தம் மூலம் இப்பணியை முன்னெடுக்கப்போவதாக அமைச்சர் சம்பிக ரணவக்க தெரிவித்திருப்பது இதுவோர் அரசியல் ரீதியிலான செயற்பாடே என்பதை நிரூபிக்கிறது.

இப்பணிக்கான ஒப்பந்தத்தை நாட்டுக்கு இலாபகரமானதாக மேற்கொள்ள எண்ணியிருப்பின், இந்தியாவுடன் அதற்கான ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு முன்னதாகவே அவ்விதம் செயற்பட்டிருக்க வேண்டும். அரசியல் ரீதியிலான இணக்கப்பாடொன்றை இந்தியாவுடன் இது விடயத்தில் எட்டுவதற்குப் பின்னடிப்பது, இலங்கை அரசு தனது அரசியல் ரீதியிலான நோக்கத்தைத் தற்போது மாற்றிக் கொண்டுள்ளது என்பதையே தெளிவுபடுத்துகிறது.

போர் இடம்பெற்றவேளையில் , அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்துக்கும் அப்பால் சென்று இனப்பிரச்சினைக்கான தீர்வு காணுதல், சம்பூர் அனல் மின் நிலைய நிர்மாணத்துக்கான ஒப்பந்தம், மன்னார் வளைகுடாவில் பெற்றோலிய எண்ணெய் வள ஆய்வின் ஒரு பகுதியை வழங்கல் போன்றவை தொடர்பாக இந்தியாவுக்கு வாக்குறுதிகளை வழங்கியபோதிலும், போர் முடிவடைந்த பின்னர் இலங்கை அரசு இந்தியாவுக்கு பொருளாதார அரசியல் ரீதியில் இலாபமளிக்க வல்ல அத்தகைய வாக்குறுதிகளை நிறைவேற்றப் பின்னடித்து வருகிறது.

**இந்தியாவுக்கு சவால் விடும் வகையில் சீனாவுடன் நெருங்கிச் செயற்படும் போக்கு**

கடந்த மார்ச் மாதத்தில் ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவால் முன்வைக்கப்பட்ட பிரேரணையை இந்தியா ஆதரித்ததையடுத்து இந்தியா தொடர்பான இலங்கையின் நிலைப்பாட்டில் பெரும் மாற்றத்தை அவதானிக்க முடிகிறது. இந்தியத் தயாரிப்பு மோட்டார் வாகனங்களுக்கான தீர்வை வரியை இலங்கை அரசு பெரிய அளவில் அதிகரித்தமை, இந்தியாவுக்குத் தனது அதிருப்தியை வெளிக்காட்டும் ஒன்றாகக் கருதப்படுகிறது.

இந்தியாவுக்கு சவால் விடும் நோக்கில் இலங்கை, சீனாவுடன் நெருங்கிச் செயற்பட முனைவதாகத் தோன்றுகிறது. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையேயான பிராந்திய அதிகாரப்போட்டியில் இந்தியாவுடன் தாம் முரண்பட்டுக் கொள்வதன் மூலம் சீனாவிடமிருந்து பலதரப்பட்ட உதவிகளை ஈட்ட இயலுமென இலங்கையரசு நம்புவதாக தோன்றுகிறது.

ஜே.ஆர் ஜெயவர்த்தனா தலைமையிலான ஐ.தே கட்சி அரசு, இந்தியாவுக்கு எதிராக அமெரிக்க ஆதரவுப் போக்கைக் கடைப்பிடித்தால் அமெரிக்கா இலங்கைக்குப் பல வகைகளிலும் உதவிகளை வழங்குமென நம்பியது. ஆனால் வடக்கில் போர் தீவிரமடைந்திருந்த வேளையில் அமெரிக்கா சிறு அளவில் தானும் இலங்கைக்கு உதவ முன்வரவில்லை.

அமெரிக்காவின் இத்தகைய போக்கு குறித்து இந்தியாவும் அறிந்திருந்தது; அத்துடன் அனுபவப்பட்டுமிருந்தது. இந்தியாவை உடைத்து விடும் அமெரிக்காவின் திட்டம் குறித்தும் அவ்வேளையில் பேச்சடிபட்டது. தமிழீழப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னணியிலும் அமெரிக்காவின் அந்நோக்கம் பொதிந்திருந்ததாகவும் விமர்சிக்கப்பட்டதுண்டு. தென்னாசிய வட்டகையின் பலவானாக இந்தியாவை ஏற்று இந்தியாவுடன் நெருங்கிய தொடர்பைப் பேணுவதென்பதே அன்றும் இன்றும் அமெரிக்காவின் கொள்கை நிலைப்பாடு.

ஆசிய வட்டகை நாடுகளில் பலமிக்க நாடுகளான இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் அதிகாரப் போட்டி நிலவுவது உண்மையே. அது பெரும் சிக்கல் நிறைந்ததொன்று. அந்தச் சிக்கலை மனம் போன போக்கில் கணக்கிட்டு விமர்சித்து அதனடிப்படையில் நாம் செயற்பட விழைவது நாசத்துக்கே வழி வகுக்கும்.

1962 ஆம் ஆண்டில் இந்தியாவுடன் போரில் ஈடுபட்ட சீனா, இந்திய நிலப் பகுதியொன்றைக் கைப்பற்றிக் கொண்டது. பின்னர் ஒரு தலைப்பட்சமாக யுத்த நிறுத்தத்தைப் பிரகடனப்படுத்தி தான் கைப்பற்றிய பிரதேசத்தைக் கைவிட்டுப் பின்வாங்கிக் கொண்டது.

இந்தியாவுடனான பலப்பரீட்சையில், பல விடயங்களைக் கணக்கிலெடுத்து சீனா செயற்பட வேண்டி நேரும். சீனாவின் சட்டப்படியான அரசாக தாய்வானின் தேசிய சீன அரசை மேற்குலக நாடுகள் ஏற்றுக் கொள்ளத் தயாரானபோது, சீன மக்கள் கூட்டரசை சட்டப்படியான அரசாக பிரகடனப்படுத்த முன்னின்று செயற்பட்டது இந்தியாவே. அதே போன்று சீனாவுக்கு ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் பெற்றுக்கொள்ள உதவியதும் இந்தியாவே. இவ்விருநாடுகளுக்குமிடையில் கருத்து வேறுபாடு, மோதல்கள் இருந்த போதிலும், மேற்குறித்த வரலாற்றுத் தொடர்புகளை மறந்துவிட முடியுமா?

இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையில் தற்போது போர்ச்சூழல் நிலவுவதாக அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டு வருகின்றனர். இவ்விருநாடுகளும் தற்போது அணுவாயுத பலம் கொண்டுள்ளன. அதே போன்று அண்மைக்காலமாக இவ்விரு நாடுகள் மத்தியிலும் நல்லெண்ண உறவுநிலையும் உயர்வு கண்டு வருகிறது. காஷ்மீர் மற்றும் அசாம் பிரச்சினைகளில் சீனா விட்டுக்கொடுக்கும் போக்கிலும், தீபெத் பிரச்சினையில் இந்தியா விட்டுக் கொடுக்கும் போக்கிலும் செயற்பட முனைவதாக விமர்சிக்கப்படுகிறது.

அதே வேளை பொருளாதாரத் துறையில் இவ்விரு நாடுகளும் துரித அபிவிருத்தி கண்டு வருவதை நாம் கணக்கில் எடுத்தாக வேண்டும். இவ்விடயத்தில் இவ்விரு நாடுகள் மத்தியிலுமான ஒத்துழைப்பு அதிகரித்து வருகிறது. பிறிக் (BRIC) என்ற பொருளாதார ஒத்துழைப்பு மாநாட்டின் உறுப்பினர்களில் இந்தியாவும் சீனாவும் முக்கிய பாத்திரமேற்றுச் செயற்படுகின்றன.

இலங்கை அரசு இந்தியாவுடனான உறவைத் தூரவைத்து சீனாவுடன் நெருங்கிச் செயற்படமுனையும் அதே வேளை, இந்தியாவும் சீனாவும் தம்மிடையேயான வர்த்தக உறவுகளை அபிவிருத்தி செய்து வருகின்றன. தற்போது இந்தியாவின் முக்கிய வர்த்தகக் கூட்டாளி சீனாவே எனக் கூறப்படுகிறது. அதே சமயம் சீனாவும் இந்தியாவில் பெரிய அளவில் வர்த்தக முதலீடுகளை மேற்கொண்டு வருகின்றது.

இவற்றைக் கணக்கில் எடுக்காது, நாம் தான்தோன்றித்தனமாக உலக அரசியல் குறித்து முடிவு மேற்கொள்வது நட்டத்துக்கே வழிவகுக்கும்.

எதிர்வரும் மார்ச் மாதத்தில் கூடவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இலங்கை தொடர்பாக மற்றொரு தீர்மானம் சமர்ப்பிக்கப்படலாம். ஐ.நா சபையும் இலங்கை விவகாரம் குறித்து ஆராய்ந்தறிய மற்றுமொரு விசாரணைக் குழுவை நியமித்துள்ளது. இவை தொடர்பாக இலங்கைக்கு சீனாவால் எவ்வகையிலும் உதவ இயலாது. இந்தியாவால் மட்டுமே அது இயலும்.

புலம்பெயர் தமிழர் அமைப்புக்களும், விடுதலைப்புலிகள் ஆதரவாளர்களும் தற்போதும் மும்முரமாகச் செயற்பட்டு வருகின்றனர். தமிழ் நாட்டின் முக்கிய இரு கட்சிகளும் இலங்கை அரசின் செயற்பாடுகள் தொடர்பாக கடும் குற்றம்சாட்டி வருகின்றன. இந்த நிலையில், இந்தியாவைப் பகைத்துக் கொள்வது புத்திசாலித்தனமானதொன்றல்ல என்பதை இலங்கை அரசு உணர்ந்து செயற்பட வேண்டும். எமது எண்ணப்படி எதுவும் நடப்பதில்லை என்ற தத்துவத்தை அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவடி தரிசனம்

பொ.சிவப்பிரகாசம்,
கொழும்புத்துறை



## இன்று

திருவெம்பாவை ஆரம்பம்

சைவத் திருமுறைகள் பன்னிரண்டில் எட்டாந் திருமுறையாக வகுக்கப்பெற்றது மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய தித்திக்கும் திருவாசகம் ஆகும். மாணிக்கவாசகர் பாண்டியனுக்கு நல்லமைச்சராக இருந்தபோது அரசியல் நிமித்தம், திருப்பெருந்துறை செல்ல நேர்ந்தது. அந்தப்பெருந்துறையில் அவனருளால் பாச ஒழிவும், சிவத்துவப் பேறும் பெறும் பருவம், கனிந்து வந்தது. இந்த நிலையில் திருவாதவூரடிகளது, பந்தமறும் எல்லையை எதிர்பார்த்தினிது இருந்த இறைவன், ஞானதேசிக திருமேனி கொண்டு கைலையங்கிரியை நீங்கி, பூதகணங்கள் சூழ எழுந்தருளினார்.

சிவஞானபோதம் என்னும் அரிய நூல் செந்தமிழில் உருவாகவும், நித்தியாக்கினி வளர்ப்பவர்கள் ஆகிய சிவப்பிராமணர்கள் சூழ இருக்கும் திருப்பெருந்துறையானது கோங்கு, சந்தன மரங்கள் நிறைந்த பதியாகும். வேதங்களாகிய சிலம்புகள் தரித்த, உபய திருவடிகளை உடைய சிவபெருமான் திருப்பெருந்துறை என்னும் பெரும்பதியை அடைந்தார். மானிட வடிவங்கொண்டு வந்த பரம்பொருள், பெருந்துறையில் உள்ள அழகிய பூஞ்சோலையின் கண்ணே, ஒரு குருந்தமர நிழலில் சிவகணங்களாகிய மாணவர் சூழ யோகாசன நிலையில் வீற்றிருந்தருளினார்.

### வாதவூரர் வருகை

திருவாதவூரர் திருப்பெருந்துறையை அண்மித்ததும் அங்கே சிவகணங்கள் சிவாகமம் ஓதும் ஒலியை செவியுற்றார். சிவாகம ஒலி கேட்ட அந்தப் பூஞ்சோலையை நண்ணினார். திருவாதவூரர் தாழு முத்துச் சிவிகையினின்றும் நீங்கி, அந்தக் குருந்தமர நிழலில் கொன்றை மாலை அணிந்த சிவபெருமான், குரு இலட்சணம் பொருந்த, ஞானாசிரியனாக சிவகணங்கள் சூழ பொங்கொழுந்திருமேனி, பேரொளி வீச வீற்றிருக்கும் அரிய காட்சியைக் கண்ணாரக் கண்டார். இத னால்வாதவூரர் உள்ளம் நெக்குருக தம் வசமிழந்து, சிரசில் இரு கரமும் குவித்து வணங்கி நின்றார். அந்தக் குழு சந்நிதியில் ஓதுபவர் ஒரு சிலரும் சிந்திப்பவர் சிலருமாக மற்றும் தெளிந்து தம்வயமிழப்போருமாக, அத்தெய்வ சபை இருந்தது.

### சிவஞானபோதம்

சிவபெருமானது பொன் போன்ற திருமேனியைத் தரிசித்த வாதவூரர், ஐயா உமது செங்கை மீது, பொருந்தி இருக்கும் திருமுறை யாது? என வினவ, அதற்குச் சிவபெருமானானவர் இது மெய்மையாகிய சிவஞான போதம் என்று கூறியருளினார். அதுகேட்ட திருவாதவூரடிகள், சுவாமி சிவமாவது யாது? ஞானமாவது யாது? போதம் என்றால் என்ன என்ற மூன்று வினாக்களுக்கும் விடை தந்து அருளுக. அன்று வடநிழலில் வந்து இருந்த சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் முதலிய முனீந்திரர் நால்வருக்கும் வேதாந்தங்களின் சமுசயம் பிறந்தபோது சிவமாவது, நித்தமுத்த சுத்த சித்தாகிய ஒரு வஸ்த்து, அதனைத் தேர்தல் ஞானமாகும். போதமாவது தேர்ந்ததனைத் தெளிதலாம். இவ்வாறு அனுபூதி நிலையில் வைத்து நிச்சயம் செய்தலே யாம். இவ்வண்ணம் சிந்தை உருகும் வரை உரை செய்தார் பரமாசாரியார்.

### ஆட்கொள்ளல்

இது கேட்டு மனம் மகிழ்ந்த மாணிக்கவாசகப் பெருமான் நாலாஞ்சத்திநிபாதம் நான்கினுள், இறுதியாக அதிதீவிரபக்குவம் பொருந்திய, திரிகரண சுத்தியை உடையவராதலின் அக்கனக சபையின் கண்ணே, பஞ்சகிருத்திய நிருத்தஞ் செய்தருளும் சபாநாயகரே என்னை ஆள இந்தத் திருமேனி கொண்டார் என மனதிலெண்ணி, எம்முயிர்க்கிறைவா, பிரபஞ்சப் பொருள்கள் எவையும் வேண்டேன், தேவரீருடைய திருவடிகளை அடைய இப்போதே என்னை ஆட்கொள்ள வேண்டும் எனக் கண்ணீர் வார வணங்கி நின்றார். திருவாதவூரடிகளைப் பரமாசாரியார் நோக்கி, நீ முன் இயற்றிய தவத்தினாலே இன்று உன்னை ஆட்கொள்ள இந்தப் பெருந்துறைக்கு வந்தோம். ஆதலால் நீ வருந்த வேண்டாம் எனத் திருவாய் மலர்ந்தருளினார் சிவபெருமான்.

### திருவடி தீட்சை

திருப்பெருந்துறையில் உள்ள பூஞ்சோலையின் கண்ணே திருவடி தீட்சைக்கு உகந்த பூங்கோயில் அமைத்து, திவ்வியமான ஆசனம் இட்டு, பூமியில் இருள் பரந்த பின்னர் உயிர்கள் எல்லாம் துயிலும்போது இறைவன் கங்கை நீராடி செம்பட்டாடை அணிந்து, வாசனை மிக்க சந்தனம் திருமேனி எங்கும் பூசி, அவ்வாசனத்தில் தென்திசை நோக்கி யோகாசனமாக வீற்றிருக்க, திருவாதவூரரும் அவ்வாறே தீர்த்தமாடி, திருநீறணிந்து சிவபெருமான் திருமுன் குறுகி நின்று, சர்க்கரை கலந்த பால் கொண்டு சமைத்த நல்ல திருவமுதை, பொன் கலத்தில் விருப்பொடு படைத்து, நெய்யும், முக்கனியும் பெய்து பெரு விருப்பொடு தொழுது நிற்க தவப்பெருவடிவங் கொண்ட சிவபெருமான், திருவாசகம் என்னும் தேனை, இந்த உலகுக்கு அருளிய திருவாதவூரருக்கு, திருவைந்தெழுத்தை உபதேசித்து மாணிவாசகப் பெருந்தகையின் சிரசிலே ஞானாசக்தி, கிரியாசக்தி ஆகிய இரு திருவடிகளையும் வாதவூரர் மனம் மகிழுமாறு திருவடி தீட்சை செய்தருளி, மாணிவாசகரைத் தனது ஞானப் புதல்வராக ஏற்றுக் கொண்டார் சிவபரம்பொருள்

அற்புத விருந்தருள் பெருந்துறை யடைந்தே
சிற்பர முணர்ந்துதிரு வாசக முரைப்பார்
முற்பக லருந்தவ முயன்றுபெறு மன்பா
லுற்பல மொழிந்தமை மொழிந்திட றொழிப்பாம்

வாதவூரர் புராணம்.

# பூமி போன்ற கிரகம் இதுவரை இல்லை....

என்.இராமதுரை

பூமி போன்று எங்கேனும் கிரகம் உள்ளதா என்று கண்டு பிடிப்பதற்காகத் தான் கெப்ளர் என்ற விண்கலம் 2009 ஆம் ஆண்டில் வானில் செலுத்தப்பட்டது. இதைப் பறக்கும் டெலஸ்கோப் என்றும் கூறலாம். சூரியனைச் சுற்றி வருகின்ற அந்த விண்கலம் வானை ஆராய்ந்து இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட கிரகங்களைக் கண்டுபிடித்துள்ளது. ஆனால் பூமி மாதிரியிலான கிரகம் அதன் ''கண்ணில்' இன்னும் தட்டுப்படவில்லை.

குறிப்பாக பூமி மாதிரியிலான கிரகத்தைத் தேடுவானேன்? பூமி மாதிரியிலான கிரகத்தில் தான் மனிதர் மாதிரியில் வேற்றுக் கிரகவாசிகள் இருக்க முடியும்.

சூரிய மண்டலத்தில் ஒன்பது கிரகங்கள் இருந்தாலும் வேறு எந்தக் கிரகமும் பூமி மாதிரியில் இல்லை. சூரிய மண்டலத்தில் பூமியில் மட்டுமே எண்ணற்ற வகை வகையான உயிரினங்கள் இருக்கின்றன. சரி, பூமி மாதிரி என்றால் என்ன என்பதை விளக்கியாக வேண்டும். அளவில் பூமி மாதிரியாக மட்டும் இருந்தால் போதாது.

பூமியானது சூரியனிலிருந்து தகுந்த தூரத்தில் உள்ளது. ஆகவே தான் பூமியில் புதனில் உள்ளது போல விபரீத வெப்பமும் விபரீதக் குளிரும் இல்லை. செவ்வாயில் உள்ளது போல கடும் குளிர் இல்லை. சூரி யனிலிருந்து மிகத் தொலைவில் உள்ளதால் தான் வியாழன், சனி போன்ற கிரகங்கள் பனிக்கட்டி உருண்டைகளாக உள்ளன.

பூமியில் காற்று மண்டலம் உள்ளது.



பூமியின் காற்று மண்டலமே சூரியனிலிருந்தும் நட்சத்திரங்களிலிருந்தும் வருகின்ற ஆபத்தான புற ஊதாக் கதிர்கள், எக்ஸ் கதிர்கள் ஆகியவற்றைத் தடுத்து நிறுத்துகிறது. இதன் பயனாகவே பூமியில் உயிரினம் தோன்ற வாய்ப்பு ஏற்பட்டது.

பூமியைப் போல சந்திரனும் சூரியனிலிருந்து தகுந்த தூரத்தில் உள்ளது தான். ஆனால் சந்திரனை ஆபத்தான கதிர்கள் தாக்குகின்றன. தகுந்த காப்பு உள இல்லாமல் சந்திரனில் இருக்க முடியாது.

தகுந்த தூரத்தில் இருந்தால் போதாது. தகுந்த காற்று மண்டலம் இருந்தாலும் போதாது. பூமி தனது அச்சில் தகுந்த வேகத்தில் சுழல்கிறது. ஒரு நாள் என்பது 24 மணி நேரமாக உள்ளது. இல்லத்தரசிகள் வீடுகளில் நெருப்பில் அப்பளம் சுடும் போது ஒரே பக்கத்தில் அதிகம் வெப்பம் தாக்கினால் அப்பளம் கருகி விடும் என்பதை அறிந்து தக்கபடி திருப்பித் திருப்பிப் போடுவர். பூமியின் சுழற்சி வேகமும் தகுந்த அளவில் உள்ளதால் தான் எம்மால் வாழமுடிகிறது.

சந்திரனைப் பாருங்கள். சந்திரனில் தொடர்ந்து 14 நாள் வெயில். தொடர்ந்து 14 நாள் இரவு. சந்திரனில் ஒருவர் பகலாக உள்ள புறத்தில் 14 நாள் இருந்தால் பொசுங்கிப் போய்விடுவார். இரவாக உள்ள புறத்தில் 14 நாள் இருந்தால் குளிரில் விறைத்து செத்துப் போய்விடுவார்.

கெப்ளர் விண்கலம் ஆரம்பத்தில் வியாழன் மாதிரி பனிக்கட்டி உருண்டையாக உள்ள கிரகங்கள் பலவற்றைக் கண்டுபிடித்தது. ஒரு நட்சத்திரத்திலிருந்து தகுந்த தூரத்தில் உள்ள ஓரிரு கிரகங்களையும் கண்டுபிடித் துள்ளது. எனினும் கெப்ளர் கண்டுபிடித் துள்ள பல கிரகங்கள் பற்றிய தகவல்கள் இன்னும் பகுத்து ஆராயப்படவில்லை. அவற்றில் ஒரு வேளை பூமி போன்ற கிரகம் இருக்கலாம்.

கெப்ளர் விண்கலம் எப்படி கிரகங்களைக் கண்டுபிடிக்கிறது?. இரவு வானில் ஒரு நட்சத்திரத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். வானில் மிக உயரத்தில் விமானம் போகிற சத்தமே கேட்காமல் இருக்க, அந்த விமானம் ஒரு கணம் அந்த நட்சத்திரத்தை மறைக்கிறது. அந்த நட்சத் திரத்தை மறைத்தது விமானமாக இருக்க வேண்டும் என்று நீங்கள் ஊகிக்கிறீர்கள். அது மாதிரியில் தான் நட்சத்திரங்களின் கிரகங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன.

இதை வேறு விதமாகவும் வருணிக்கலாம். அமாவாசை இரவில் ஏதோ ஒரு நெடுஞ்சாலையில் நிற்கிறீர்கள். சுற்றிலும் எங்குமே வெளிச்சம் இல்லை. தொலைவில் ஒரு கட்டிடத்தின் அடிவாரத்தில் மினுக் மினுக் என விளக்கு வெளிச்சம் தெரிகிறது. அந்த விளக்குக்கு அருகே யாராவது நிற்கிறார்களா என்பது நம் கண்ணுக்குப் புலப்படாது. திடீரென ஒரு கணம் விளக்கு மறைக் கப்படுகிறது. யாரோ குறுக்காக நடந்து சென்றிருக்க வேண்டும் என ஊகிக்கிறீர்கள். இன்னொரு தடவையும் இப்படி விளக்கு மறைக்கப்படுகிறது. இதிலிருந்து அங்கே யாரோ குறுக்காக நடந்து செல்கிறார் என உறுதிப்படுத்திக் கொள்கிறீர்கள்.

இதே விதமாக கெப்ளர் விண்கலம் வானில் தெரிகின்ற எண்ணற்ற நட்சத்திரங்களை ஆராயும் போது எந்த நட்சத்திரத்தின் ஒளி எந்த அளவுக்கு எவ்வளவு நேரம் மங்குகிறது அல்லது மறைக்கப் படுகிறது என்பதை மிகத் துல்லியமாகப் படம் பிடித்து அனுப்புகிறது. கெப்ளர் இப்படியாக அனுப்புகின்ற படங்கள், தகவல்கள் ஆகியவற்றை நிபுணர்கள் விரிவாக ஆராய்ந்து அந்த குறிப்பிட்ட நட்சத்திரத்தைச் சுற்று கின்ற கிரகங்கள் பற்றிக் கண்டறிகின்றனர்.

கெப்ளர் விண்கலத்தின் பிரதான பணி முடிவடைந்து விட்ட போதிலும், அது மேலும் தொடர்ந்து நான்கு ஆண்டுகள் ஆராய்ந்து வரும் என்று இப்போது தெரிவிக்கப்பட் டுள்ளது. இதுவரை ஒன்றரை லட்சம் நட்சத்திரங்கள் ஆராயப் பட்டுள்ளன.

ஆகவே இந்த பிரமாண்டமான பிரபஞ்சத்தில் பூமி மாதிரி எங்குமே இருக்க வாய்ப்பில்லை என்று கருதக்கூடாது என்று ஒரு நிபுணர் கூறினார். தவிர இந்தப் பிரஞ்சத்தில் பூமி தான் நடுநாயகமாக இருப்பதாகவும் கருதலாகாது என்பதே இப்போதைய கருத்து. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனக்குரங்கு

ஓர் ஊரிலே ஒரு ராஜா இருந்தார்.

அவர் ஒருநாள் காலையிலே அரண்மனையின் மேல் மாடியிலே நின்றுகொண்டிருந்தார்.

அப்பொழுது ஒருவர் வீதியிலே வேகமாக ஓடிக் கொண்டிருந்தான்.

அதை ராஜா கவனித்தார்.

அவன் மனதிலே ஏதோ ஒரு தவிப்பு இருப்பதைப் புரிந்து கொண்டார்.

உடனே அரண்மனை சேவகர்களைக் கூப்பிட்டார்.

''அவரை இங்கே அழைத்து வாருங்கள்!'' என்றார்.

அவர்கள் ஓடிச் சென்று அந்த நபரை அழைத்துக் கொண்டு வந்தார்கள். மன்னர் முன் நிறுத்தினார்கள்.

மன்னர் அவனை நிமிர்ந்து பார்த்தார்.

''எதுக்காக இவ்வளவு வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டார்.

இதற்கு அவன் கூறினான்.

''மன்னா! எங்கள் கோட்டையின் வடக்கு வாசல் ஓரமாக ஒரு பெரிய பாறாங்கல்லின் அடியிலே நான் ஒரு வெள்ளி நாணயத்தைப் புதைத்து வைத்திருக் கிறேன். அது இப்பொழுது எனக்குத் தேவைப்படு கின்றது.

என் மனைவிக்கு ஒரு பரிசு வாங்கிக் கொடுக்க வேண்டியுள்ளது. அதற்காகத்தான் அவசரமாக ஓடிக்கொண்டிருக்கின்றேன்! என்றார்.

மன்னர் யோசனை செய்தார். பிறகு கூறினார்.

''அதுக்காகவா இப்படி ஓடுகிறாய்? பரவாயில்லை. அதைப் பற்றிக் கவலைப்படாதே.. நான் உனக்கு பத்து வெள்ளிக் காசுகள் தருகின்றேன். வாங்கிக்கொண்டு திரும்பிப் போ! என்றார்.

இவன் தலையைச் சொறிந்தான்.

''மன்னா... நீங்கள் கொடுப்பதை மிகவும் மகிழ்ச்சியோடு வாங்குகின்றேன். இருந்தாலும் அதன் பின்னர் வடக்கு வாசலுக்குச் சென்று அங்கே இருக்கின்ற ஒரு நாணயத்தையும் எடுத்துக் கொண்டு சென்று விடுகின்றேன்'' என்றான்.

''இதோ பார்! அந்த ஒரு நாணயத்தை மறந்துவிடு. உனக்கு நூறு வெள்ளி நாணயங்கள் தருகின்றேன்-'' என்றார்.

''மன்னா... மிகவும் மகிழ்ச்சி.. உங்களை போல் தாராள குணம் வேறு யாருக்கும் வராது! நீங்கள் கொடுக்கின்ற நூறு நாணயங்களையும் வாங்கிக் கொள்கின்றேன். இருந்தாலும் வடக்கு வாசலுக்குப் போய் அதையும் எடுத்துக் கொண்டால் நூற்று ஒன்றாக ஆகிவிடும்.-என்றான்.

''இதோ பார்! அந்த ஒரு நாணயத்தை மறந்து விடு.. அது எக்கேடாவது கெட்டுப் போகட்டும். நான் உனக்கு நூறு பொற்காசுகளைத் தருகின்றேன். அவற்றை வாங்கிக் கொண்டு வந்த வழியாகவே திரும்பச் சென்று விடு-என்றார்.

''தங்க நாணயங்களையே தருகின்றேன் என்று சொல்கிறீர்கள்.. தாராளமாக வாங்கிக் கொள்கின்றேன். ஆனாலும் வடக்கு வாசலுக்குச் சென்று....-என்று ஆரம்பித்தான்.

அரசர் பொறுமை இழந்து விட்டார். கடைசியாக ஒரு முடிவுக்கு வந்து விட்டார்.

இதோ பார்! உனக்கு என்னுடைய இராச்சியத்திலே பாதியைக் கொடுக்கின்றேன்.. அப்போது என்றாலும் திருப்தியாகச் செல்..'' என்றார்.

''மன்னா.. உங்களுடைய பெருந்தன்மைக்கு ஈடு இணையே கிடையாது. தேசத்திலேயே பாதியைப் பிரித்துக் கொடுக்கின்றேன் என்று சொல்கிறீர்கள். அதனாலே உங்களிடம் ஒரு சின்ன வேண்டுகோள்!'' -என்றான்.

''கூறு! கூறு!-என்றார் ஆர்வமாக மன்னர்.

அவன் மெதுவாக ஆரம்பித்தான்.

''அப்படி இந்த இராஜ்யத்தை இரண்டாகப் பிரித்தால் அந்த வடக்கு வாசல் இருக்கிற பக்கத்தை என்னிடம் கொடுத்து விடுங்கள்!'' என்றான்.

''மன்னர் திகைத்துப் போய் விட்டார்.


இந்தக் கதை எதற்கு என்றால்..

மனம் என்பது ஒரு குரங்கு என்பதைப் புரிந்து கொள்வதற்காகத்தான்.

ஒன்றைப் பிடித்துக் கொண்டால்.. இலகுவில் விடமாட்டாது!

அப்படிப்பட்ட மனதை அறிவு தான் வழி நடத்திச் செல்ல வேண்டும்.

அதில் தான் வாழ்க்கையின் வெற்றியே தான் அடங்கி இருக்கின்றது.



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# பொன்விழாவைக் கடந்த நிலையில் புற்றளை சனசமூக நிலையம்

*(கடந்தவாரத் தொடர்ச்சி....)*



## கர்ணன்

புலோலி தமிழ் இளைஞர் கழகத்தால் இளைஞர்கள் மத்தியில் பொதிந்து மறைந்திருக்கும் திறமைகளை வெளிக் கொணர நிறுவன ரீதியாக வழங்கப்படும் ஒத்தாசைகள் எதிர்காலத்தில் சமுதாயத்தில் குறிக்கப்பட்ட துறையில் வல்லுநர்களாக உருவாக உதவுவன. இதற்கு எடுத்துக் காட்டாக கையெழுத்துச் சஞ்சிகையான ''புத்தொளி'' மூலம் அறிமுகமாகி இன்று பிரபல்யம் பெற்ற எழுத்தாளராகவும், கலை இலக்கிய விமர்சகராகவும், மரபு வழி எழுத்தாளர் வரிசைக்கு எழுத்தாளர் புலோலியூர் ஆ. இரத்தினவேலோன் உயர்ந்து நிற்கின்றார். இவர் பல சிறுகதைகளை எழுதியுள்ளதுடன் சிறுகதைத் தொகுப்புக்களையும் வெளியிட்டுள்ளார். புலோலியூர் இலக்கியப் புனை கதை எழுத்தாளர் வரிசையில் பின்னாளில் தோன்றிய புலோலியூர் எழுத்தாளர் வரிசையில் தற்போது ஆரம்பித்து நிற்கின்றார். இவரது கலை, இலக்கிய வளர்ச்சிக்கு புற்றளை சனசமூக நிலையத்தில் புத்தொளி கையெழுத்துச் சஞ்சிகை அத்திபாரமாக அமைந்துள்ளது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியுள்ளது.

சன சமூக நிலையத்தினால் புத்தொளி கையெழுத்துச் சஞ்சிகை வெளியிடப்பட்ட கால கட்டத்தில் தான் சனசமூக நிலையத்தில் வாணி விழா கொண்டாட ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படுகின்றது.

தெரிவு செய்யப்பட்ட நிர்வாக சபையினர் பதவிகளைத் தக்க வைப்பதற்காகவே செயற்படாமல் புலோலி தமிழ் இளைஞர் கழகத்தினதும், நூல் நிலையத்துடன் கூடிய சனசமூக நிலையத்தினதும் செயற்பாட்டில் பங்காளிகளாக இயங்கி வந்தமை சிறப்பான அம்சமாகும். பொதுச் சபை அங்கத்தவரிடையே காணப்பட்ட ஒத்தாசையும் ஆதரவும் நூல் நிலையத்துக்கான மின்சாரக் கட்டணத்தை ஒவ்வொரு மாதமும் ஒருவராக பன்னிருவர் செலுத்த முன் வந்த முறையும், பத்திரிகைகள் ஒவ்வொன்றும் தமது செலவில் தாமே எடுத்துப் போடுவதற்கு சம்மதித்த தன்மையும் வெளிப்பட்டதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

> புதிய நிர்வாக சபை ஒன்று 2004 ஆம் ஆண்டு பதவி ஏற்றதும் சன சமூக நிலையத்திற்கான கட்டடம் திருத்தி அமைக்க வேண்டிய அவசியத்தையும், அவசரத்தினையும் உணர்ந்து கட்டடத்தை மீள அமைக்கும் முயற்சியில் இறங்கியது.

பாடசாலைகளில் பிள்ளைகளை அனுமதிப்பதற்கான வயதெல்லை ஐந்தாக (5) உயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து பிள்ளைகளின் பாலர் கல்வி பாதிக்கப்பட்ட நிலை தொடர்வதனைக் கருத்தில் கொண்ட நிர்வாக சபையினர் 1983 இல் பாலர் வகுப்பை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தனர். சனசமூக நிலையத்தின் யாப்பினைத் திருத்தியமைக்க அப்போதைய தலைவர் அ. இராசரத்தினம் தலைமையில் 9 பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு யாப்பு திருத்தியமைக்கப்பட்டது.

புலோலி இளைஞர் கழக நிர்வாக சபையினர் பழைமை பேணப்பட வேண்டும் என்பதிலும், அரச நிர்வாகத்திற்கு விதந்துரைகள். செய்வதிலும், தீர்மானம் எடுப்பதற்கான அறிவுரைகள் தொடர்பான யோசனைகளைச் சமர்பிக்க பங்களிப்பை வழங்கி வந்தனர். வி.நடராசா தலைவராகவும் வீ.க.சண்முகநாதன் செயலாளராகவும் பதவி வகித்த காலத்தில் வே.ஆறுமுகத்தினால் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்ட பல தீர்மானங்கள் தற்போது நடைமுறையில் உள்ளதைப் பார்க்கும் போது, கழகத்தினர் சில தீர்க்க தரிசனமான யோசனைகளை முன் வைத்திருந்தார்கள் என்பதை வலுப்படுத்துவதாக அமைந்துள்ளது.

புதிதாக அமைக்கப்பட்ட கிராம சேவையாளர்கள் பிரிவுகளுக்கு புலோலிக் கிராமத்தின் முழுமையையும், தொன்மையையும், கட்டுக்கோப்பையும் கருத்தில் கொண்டு, இக் காரணிகளுக்கு பங்கம் விளைவிக்காது புலோலி என்ற பெயரை இடுமாறு ஒரு தீர்மானமும், பிரதேச செயலகம் பிரதேச சபை என்பனவற்றிற்கு வடமராட்சி வடக்கு பிரதேச செயலகம், வடமராட்சி வடக்கு பிரதேச சபை எனப் பெயரிடப்பட வேண்டும் என மற்றொரு தீர்மானமும் நிறைவேற்றியிருந்தார்கள். தற்பொழுது புலோலியில் உள்ள கிராம சேவையாளர் பிரிவுகளில் மந்திகை கிராம சேவையாளர் பிரிவைத் தவிர ஏனைய கிராம சேவையாளர் பிரிவுகள் அனைத்தும் திசைகளுடன் கூடிய புலோலி என்ற பெயரிலேயே அமைந்துள்ளன. இதே போல் பிரதேச செயலகமும் வடமராட்சி வடக்கு பிரதேச செயலகம் என்றே அமைந்துள்ளது. இருப்பினும் பிரதேச சபை பருத்தித்துறை பிரதேச சபை என்றே பெயரிடப்பட்டு அழைக்கப்படுகின்றது.

இதேபோல் மந்திகை என்ற கிராம சேவையாளர் பிரிவின் பெயர் புலோலி என்ற பெயருடனும் பருத்தித்துறை பிரதேச சபையின் பெயர் வடமராட்சி வடக்கு என்ற பெயருடனும் மாற்றியமைக்கும் நடவடிக்கைகளைப் புலோலி தமிழ் இளைஞர் கழக புற்றளை சனசமூக நிலையம் மேற்கொள்ள வேண்டும். அதே நேரம் பருத்தித்துறை பிரதேச சபையுடன் இணைந்துள்ள வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திற்கு தனியான பிரதேச சபை ஒன்றை அமைப்பது பருத்தித்துறைப் பிரதேச சபையின் பெயரை வடமராட்சி வடக்கு பிரதேச சபை எனப் பெயர் மாற்றம் செய்வதற்குரிய எல்லைகளைக் கொண்டதாக அமையும். இவ்வாறான ஓர் அமைவிடத்துக்கும், புற்றளை சனசமூக நிலையம் ஏனைய பொது நிறுவனங்களுடன் இணைந்து குரல் கொடுக்க முன் வர வேண்டும்.

புலோலி தமிழ் இளைஞர் கழகத்தினதும் புற்றளை சனசமூக நிலையத்தினதும் 50 ஆம் ஆண்டு நிறைவுப் பொன் விழா 1995 ஆம் ஆண்டு பல்வேறு நிகழ்ச்சிகளுடன் வெகு விமரிசையாக நடத்தப்பட்டது.

சைவ சமய,தமிழ்மொழித் திறன் போட்டிகளை நடத்திய பரிசளிப்பு விழாவில் யாழ். மாவட்டச் செயலக தலைமைப் பீட உதவி அரச அதிபராக இருந்த வே. வீரபத்திரபிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்து பரிசில்களை வழங்கியிருந்தார். புலோலி தமிழ் இளைஞர் கழகத்தினர் நடைமுறைப்படுத்திய நன்கு திட்டமிடப்பட்டு சிறந்த முறையில் நடத்தி முடிக்கப்பட்ட சைவ சமய, தமிழ் மொழித் திறன் போட்டி பிள்ளைகளின் சமய அறிவையும், தமிழ்மொழி ஆற்றலையும் மேம்படுத்த பெரிதும் உதவியது. இந் நிகழ்ச்சிகளைக் கனகச்சிதமாக நிறைவேற்றி முடித்த கழகத்தின் தலைவர் ச.கணேசலிங்கமும், செயலாளர் கி.குகநாதனும் பலரினதும் பாராட்டுக்குரியவர்களாயிருந்தார்கள்.

தொடர்ந்தும் பதவி வகித்த நிர்வாக சபையினர் பல பயனுள்ள செயற்பாடுகளை ஆற்றி வந்ததுடன் மாணவர் வட்டம் என்ற அமைப்பு ஒன்றை உருவாக்கி அந்த அமைப்பின் ஊடாக பாடசாலை மாணவர்களுக்கு புத்தகங்களை இரவல் வழங்கும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தனர். இந் நடவடிக்கை புற்றளையைச் சூழ இருந்த மாணவர்களுக்கு கல்வியில் மேம்பாடு அடைய பெரிதும் உதவியாக இருந்தது. இந்தக் கால கட்டத்தில் நாட்டில் தொடர்ந்து கொண்டிருந்த அசம்பாவித சூழ்நிலையினாலும், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்ததனாலும் புலோலி தமிழ் இளைஞர் கழகத்தின் நடவடிக்கைகள் சற்றுத் தளர்வடைந்து காணப்பட்டன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஹப்புத்தளையில் மண்சரிவு...



கொழும்பு - பதுளை பிரதான வீதியில் ஹப்புத்தளையில் நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக குறித்த வீதியினூடான போக்குவரத்து முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் இந்த வீதியினூடாகப் பயணத்தை மேற்கொள்ள உள்ளவர்கள் மாற்று வீதிகளைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ச)

## முஸ்லிம் அதிபர், ஆசிரியர் மீது கடினப் போக்கு வேண்டாம்

### அமீர்அலி வேண்டுகோள்



மட்டக்களப்பு,டிசெ.19

புனித ஹஜ் மற்றும் உம்றாக் கடமைகளுக்காகச் செல்லும் கிழக்கு முஸ்லிம் அதிபர், ஆசிரியர்களின் விடயத்தில் கடைப்பிடிக்கப்படும் கடினப் போக்கை கைவிடுமாறு கிழக்கு மாகாணசபை உறுப்பினர் எம். எஸ். எஸ்.அமீர்அலி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிழக்கு மாகாணசபையின் வரவு- செலவுத்திட்டத்தில் கல்வி அமைச்சு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முஸ்லிம்கள் தமது வாழ்நாளில் ஒரே ஒரு முறை மேற்கொள்ளும் இந்தப் புனிதக் கடமைகளை நிறைவேற்றச் செல்வதில் கிழக்கு முஸ்லிம் அதிபர், ஆசிரியர்கள் பெரும் அசௌகரியங்களையும், இழப்புக்களையும் எதிர்நோக்குகின்றனர்.

கிழக்கு கல்வி அமைச்சு கடும் கடினப் போக்கைக் கடைப்பிடிக்கின்றது.

தற்காலிக பதவி நீக்கம், நிரந்தரமாக பதவியிலிருந்து நீக்கம், வருடாந்த சம்பள ஊக்குவிப்பு நிறுத்தம், இடமாற்றம் என இந்த அதிபர், ஆசிரியர்கள் மீது கல்வி அமைச்சு கடுமையாக நடந்து கொள்கிறது.

எனவே இது விடயத்தில் கல்வி அமைச்சு தளர்வுப் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும்.-என்றார். (ச)

## வெள்ளம் அள்ளிச் சென்றது பாலத்தை

மஹியங்கனை, டிசெ.19

மழை வெள்ளத்தால் இரும்புப் பாலம் ஒன்று அடித்துச்செல்லப்பட்ட சம்பவம் மஹியங்கனையில் இடம்பெற்றுள்ளது. மஹியங்கனை,தெய்யத் தகண்டி பிரதான வீதியில் உள்ள பாலமே இவ்வாறு வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## கல்முனை மாநகர சபைக்கு நிரந்தர கட்டடம், வாகனங்கள்

### அதாவுல்லா – முதல்வர் சந்திப்பில் முடிவு

கல்முனை, டிசெ.19

கல்முனை மாநகர சபைக்கு நிரந்தர கட்டடம் ஒன்றை அமைத்துக் கொடுக்க உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

கல்முனை மாநகர முதல்வர் சிராஸ் மீரா சாஹிப் தலைமையிலான மாநகரசபை உறுப்பினர்களுக்கும் அமைச்சர் அதாவுல்லாவுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் போதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பு அமைச்சர் அதாவுல்லாவின் அக்கரைப்பற்று அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

கல்முனை மாநகரசபைக்கு நிரந்தர கட்டடமின்மை உட்பட பல்வேறு தேவைகள் குறித்து கல்முனை முதல்வர் தலைமையிலான குழுவினர் எடுத்துக் கூறினர்.

பல்வேறு தேவைகள் குறித்து கல்முனை முதல்வர் தலைமையிலான குழுவினர் எடுத்துக் கூறினர்.

இதன்போதே நிரந்தர கட்டடம் ஒன்றைப் பெற்றுக் கொடுக்க அமைச்சர் அதாவுல்லா இணக்கம் தெரிவித்ததுடன், தேவையான வாகனங்களை வழங்குவதாகவும் உறுதியளித்தார்.

# சீரற்ற காலநிலை 4917 பேர் பாதிப்பு

### 9 பேர் சாவு; 7 பேர் காயம்

கொழும்பு,டிசெ.19

நாட்டின் பல பாகங்களிலும் நிலவிவரும் மழை, மண்சரிவு, மரம்முறிவு, வெள்ளம் போன்ற சீரற்ற காலநிலையால் இதுவரை 1219 குடும்பங்களைச் சேர்ந்த 4917 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதில் 9 உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளதுடன் 7 பேர் காயமடைந்துள்ளனர். ஒருவர் காணாமற் போயுள்ளார்.

சீரற்ற காலநிலை, சுழல் காற்று காரணமாக 8 வீடுகள் முற்றாகவும், 495 வீடுகள் பகுதி அளவிலும் சேதமடைந்துள்ளன.

சீரற்ற காலநிலையால் இடம்பெயர்ந்த 830 குடும்பங்களைச் சேர்ந்த 3411 பேர் 18 தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

**மாத்தளை மாவட்டம்**

சீரற்ற காலநிலையால் மாத்தளை மாவட்டத்தில் 363 குடும்பங்களைச் சேர்ந்த 1487 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மாத்தளையில் 8 பேர் உயிரிழந்துள்ளனர். 5 பேர் படுகாயமடைந்துள்ளனர். ஒருவர் காணாமல் போயுள்ளார். 38 வீடுகள் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன. 161 குடும்பங்களைச் சேர்ந்த 742 பேர் 8 தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

**கண்டி மாவட்டம்**

கண்டி மாவட்டத்தில் இதுவரை 66 குடும்பங்களைச் சேர்ந்த 266 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒருவர் உயிரிழந்துள்ளதோடு, இருவர் காயமடைந்துள்ளனர். 4 வீடுகள் முழுமையாகவும், 24 வீடுகள் பகுதி அளவிலும் சேதமடைந்துள்ளன. இடம்பெயர்ந்த 30 குடும்பங்களைச் சேர்ந்த 140 பேர் 2 தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

**நுவரெலியா மாவட்டம்**

இந்த மாவட்டத்தில் சீரற்ற காலநிலையால் 29 குடும்பங்களைச் சேர்ந்த 126 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 10 வீடுகள் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன. இடம்பெயர்ந்த 5 குடும்பங்களைச் சேர்ந்த 30 பேர் ஒரு தற்காலிக முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

**பொலனறுவை மாவட்டம்**

இந்த மாவட்டத்தில் 44 குடும்பங்களைச் சேர்ந்த 120 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 8 வீடுகள் முழுமையாகவும் ஒரு வீடு பகுதி அளவிலும் சேதமடைந்துள்ளன.

**பதுளை மாவட்டம்**

இந்த மாவட்டத்தில் 113 குடும்பங்களைச் சேர்ந்த 448 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு வீடு முழுமையாக சேதமடைந்துள்ளது. பாதிக்கப்பட்ட 78 குடும்பங்களைச் சேர்ந்த 330 பேர் ஒரு தற்காலிக முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

**மட்டக்களப்பு மாவட்டம்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை 632 குடும்பங்களைச் சேர்ந்த 2466 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். சுழல் காற்று காரணமாக 72 வீடுகள் முழுமையாகவும், 432 வீடுகள் பகுதி அளவிலும் சேதமடைந்துள்ளன. நிர்க்கதியான 556 குடும்பங்களைச் சேர்ந்த 2169 பேர் 7 தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (ச-31)

## மின்னல் தாக்கம்; மீனவர் படுகாயம்

மின்னல் தாக்கத்துக்கு இலக்காகிப் படுகாயமடைந்த நிலையில் மீனவர் ஒருவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஏறாவூர், புன்னைக்குடா கடலில் இவர் மீன் பிடித்துக் கொண்டிருக்கும்போது நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

களுவன்கேணியில் வசிக்கும் எஸ். வடிவேல் (வயது-55) என்ற நபரே இவ்வாறு மின்னல் தாக்கத் துக்கு இலக்காகியுள்ளார். (ச)

## படகு கவிழ்ந்தது; மீனவர்களை காணவில்லை

### தேடும் பணியில் மக்கள்

எருவில்,டிசெ.19

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள காங்கேயனோடை வாவியில் மீன்பிடிக்கச் சென்ற இரண்டு மீனவர்கள் படகு கவிழ்ந்ததில் காணாமல் போயுள்ளனர் என்று காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

காங்கேயனோடை, 13 வட்டாரத்தை சேர்ந்த எஸ்.எச்.சறூக் (வயது-42), ஏ.பி.றபாய்தீன்(வயது-34) ஆகிய இரண்டு மீனவர்களும் ஒரு படகில் காங்கேயனோடை வாவியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது வீசிய காற்றினால் படகு வாவிக்குள் கவிழ்ந்துள்ளது.

இதையடுத்தே இந்த மீனவர்கள் இருவரும் காணாமல் போயுள்ளனர். இவர்களைத் தேடும் நடவடிக்கையில் அந்தப் பிரதேச மீனவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கடற்படையினருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என்று காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர். (ச-31)

## வெள்ளத்தில் ரயில்...



கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை முதல் பெய்துவரும் அடை மழையால் கண்டி ரயில் நிலையத்துக்குள் வெள்ளம் தேங்கி நிற்பதால் ரயில் போக்குவரத்துகள் பாதிப்படைந்துள்ளன.

## கல்முனையில் வீதிகளை புனரமைக்க நடவடிக்கை

கல்முனை, டிசெ.19

கல்முனைப் பிரதேச வீதிகள் மற்றும் வடிகால்கள் அபிவிருத்தி சம்பந்தமாக ஆராயும் விசேட கூட்டம் இடம்பெற்றது.

இந்தக் கூட்டம் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் தலைமையில் அவரது அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கல்முனை மாநகர பிரதேசத்தில் புனரமைக்கப்படாமலுள்ள வீதிகள், வடிகால்களை புனரமைப்பதற்கான வழிவகைகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் மிக விரைவாக கல்முனைப் பிரதேசத்தின் சகல வீதிகளும் வடிகால்களும் புனரமைக்கப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் வேண்டுகோள் விடுத்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?



**மேஷம்:** திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். உடன்பிறந்தவர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். நட்பு வட்டாரம் விரிவடையும். குடும்பத்தினரின் எண்ணங்களைக் கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். அரச காரியங்களில் இருந்து வந்த தடைகள் விலகும்.



**இடபம்:** உடன்பிறந்தவர்களின் நீண்ட நாள் ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். வியாபார ரீதியாக சிலரைச் சந்திப்பீர்கள். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும். பெற்றோரின் ஆதரவு கிட்டும்.



**மிதுனம்:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். தாயின் உடல்நிலை சீராக இருக்கும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்தபடி உதவிகள் கிடைக்கும். மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.



**கடகம்:** வேலைச்சுமையால் உடல் அசதி, மனச்சோர்வு வந்து நீங்கும். குடும்பத்தில் உள்ளவர்கள் யாரும் உங்களைப் புரிந்துக் கொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள். அவசரப்பட்டு அடுத்தவர்களை விமர்சிக்க வேண்டாம். சிறுசிறு அவமானம் ஏற்படக்கூடும்.



**சிங்கம்:** முடியாமல்போன சில காரியங்களை இன்று முடிப்பீர்கள். புதிய வேலைக்கு முயற்சி செய்வீர்கள். கண் எரிச்சல், தூக்கமின்மை விலகும். பழைய நண்பர்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். பேச்சில் கம்பீரம் பிறக்கும்.



**கன்னி:** உங்களின் வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியிடம் அனுசரித்துப்போவீர்கள். புதிய எண்ணங்கள் மனதில் தோன்றும்.

**நாளை**

மார்கழி -05 வியாழக்கிழமை 20.12.2012
திதி: அட்டமி பி.இ 01.33 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி பி.ப 01.53 வரை
சுபநேரம்: 07.54- 09.24 வரை
ராகுகாலம்: 01.54- 03.24 வரை



**துலாம்:** மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு மரியாதை கூடும். வியாபார ரீதியாக முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் ஆதரவு உண்டு.



**விருச்சிகம்:** பரபரப்புடன் காணப்பட்ட நீங்கள் இன்று குடும்பத்தினருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள். அவர்களின் எண்ணங்களைப் பூர்த்தி செய்வீர்கள். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். கோபம் நீங்கும்.



**தனுசு:** வியாபாரத்தில் இருந்துவந்த சிக்கலுக்கு முடிவு கட்டுவீர்கள். நீண்டநாள் ஆசைகளைப் பூர்த்தி செய்துகொள்வீர்கள். தந்தையின் உடல்நிலை சீராக இருக்கும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் மன உளைச்சல் விலகும்.



**மகரம்:** எதிர்ப்புகள், இழப்புகள், ஏமாற்றங்கள் நீங்கும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். சகோதரர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் கடன்களை விரைந்து வசூலிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணிகளிலிருந்து வந்த தேக்க நிலை மாறும்.



**கும்பம்:** எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியவில்லையே என்று ஆதங்கப்படுவீர்கள். உங்களை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள். வாக்குறுதியை நிறைவேற்றப் போராட வேண்டி வரும். கணுக்கால் வலிக்கும்.



**மீனம்:** குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். வெளிவட்டாரத்தில் நிதானம் அவசியம். பணப்பற்றாக் குறையால் பிறரிடம் கடனாக வாங்க வேண்டி வரும். அரச விவகாரங்களில் அலட்சியம் வேண்டாம். உத்தியோகத்தில் பணிகளைப் போராடி முடிப்பீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 | | 8 | 9 | | 4 | | 2 |
| 5 | | | 4 | | | | | 7 |
| 7 | 9 | | | 2 | 3 | 6 | | |
| 4 | | 3 | 2 | | 1 | | | |
| | 7 | | | | | | 1 | |
| | | | 7 | | 5 | 2 | | 6 |
| | | 7 | 1 | 5 | | | 2 | 3 |
| 3 | | | | | 2 | | | 8 |
| 8 | | 1 | | 3 | 4 | | 6 | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 5 | 9 | 2 | 7 | 6 | 4 | 1 | 8 |
| 4 | 7 | 6 | 8 | 9 | 1 | 3 | 2 | 5 |
| 8 | 1 | 2 | 5 | 4 | 3 | 7 | 9 | 6 |
| 1 | 4 | 7 | 6 | 2 | 5 | 8 | 3 | 9 |
| 5 | 9 | 8 | 7 | 3 | 4 | 1 | 6 | 2 |
| 6 | 2 | 3 | 1 | 8 | 9 | 5 | 7 | 4 |
| 2 | 3 | 4 | 9 | 7 | 8 | 6 | 5 | 7 |
| 9 | 6 | 1 | 4 | 5 | 7 | 2 | 8 | 3 |
| 7 | 8 | 5 | 3 | 6 | 2 | 9 | 4 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# மரண அறிவித்தல்

செல்வி

## ஜெயக்குமாரி சங்கரப்பிள்ளை

லிங்கபவனம், கரணவாய் மத்தி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயக்குமாரி சங்கரப்பிள்ளை நேற்றுமுன்தினம் 17.12.2012 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் அன்புப் புதல்வியும், லிங்கேஸ்வரன்(சுவிஸ்) நவநீதன் (பொறியியலாளர்,SLT), திருச்செல்வம் (கண்ணன்-லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கிருஷ்ணமாலா, சிவபானு ஆகியோரின் மைத்துனியும், துஷானி, வினுஜன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(19.12.2012) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'லிங்கபவனம்'
கரணவாய் மத்தி,
கரவெட்டி.
தொ.பே:021 226 3943

தகவல்:
குடும்பத்தினர்.

(வி/2654)(5-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கிங்ஸ்பரி ஆடம்பர ஹோட்டல், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை திறந்துவைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன, மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், கொழும்பு மாநகர முதல்வர் மொஹமட் முஸம்மில் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# செல்வந்தர்களுக்கு வரிச்சலுகை; சாதாரண மக்களுக்கு வரிச்சுமை

## சஜித் பிரேமதாச சொல்கிறார்

**மக்களின் பணத்தைக் கொண்டு லம்போகினி மோட்டார் பந்தயக் கார்களை இறக்குமதி செய்ய 200 மில்லியன் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.**



கொழும்பு,டிசெ.19

செல்வந்தர்களுக்கு சலுகைகளை வழங்கிவரும் இந்த அரசு, சாதாரண பொது மக்கள் மீது வரிச் சுமையை திணிக்கிறது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கிரிகொல்லவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒரு லீற்றர் பெற்றோல் மூலம் அரசு இதுவரையில் 32 ரூபா லாபம் ஈட்டியுள்ளது. தற்போது அந்தத் தொகை 42 ரூபாவாக உயர்வடைந்துள்ளது.

மக்களின் பணத்தைக் கொண்டு லம்போகினி மோட்டார் பந்தயக் கார்களை இறக்குமதி செய்ய 200 மில்லியன் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

பெற்றோல் விலை உயர்வினால் சாதாரண பொது மக்களே அதிகளவில் நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடும்.

ஒரு லீற்றர் பெற்றோலை இறக்குமதி செய்வதற்காக அரசு 92 ரூபாவை மட்டுமே செலவிடுகிறது.- என்றார்.(ச)

# நாடாளுமன்ற முறைமைக்கு சவால் விடுக்க முடியாது

## வாசுதேவ கூறுகிறார்



கொழும்பு,டிசெ.19

நாடாளுமன்ற முறைமைக்கு சவால் விடுக்க முடியாது என்று தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அரச அச்சகப் பேரவையின் 56 ஆவது வருடாந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நிறைவேற்று அதிகாரமோ அல்லது நீதிமன்றக் கட்டமைப்போ நாடாளுமன்றத்துக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியாது. நாட்டின் நீதியை நிலை நாட்டுவதே நீதிமன்றக் கட்டமைப்பின் முதன்மைக் கடமை. கொள்கை அடிப்படையிலான தீர்மானங்களில் நீதிமன்றம் தலையீடு செய்ய முடியாது. நீதிமன்றக் கட்டமைப்பு அரசியல் மயப்படுத்தப்பட்டால்அது பாதகமான நிலைமையை ஏற்படுத்த வழிகோலும்.- என்றார். (ச)

### சீரற்ற காலநிலை காரணமாக

# பரீட்சைக்கு தோற்றமுடியாத மாணவருக்கு மாற்றுத் திட்டம்

## பரீட்சைகள் திணைக்களத்துக்கு ஆலோசனை

கொழும்பு,டிசெ.19

சீரற்ற காலநிலை காரணமாக ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்ற முடியாத மாணவர்களுக்காக மாற்று வேலைத்திட்டமொன்றை செயற்படுத்துமாறு கல்வி அமைச்சு பரீட்சைகள் திணைக்களத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

நாட்டின் பல பாகங்களில் பெய்துவரும் கடும் மழை காரணமாக நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற கணித பாடப் பரீட்சைக்குப் பல மாணவர்கள் தோற்றவில்லை.

மாத்தளை, நாவுல பரீட்சை மத்திய நிலையத்தில் 18 மாணவர்களுக்கு இவ்வாறு பரீட்சை எழுத முடியாது போயுள்ளது. பதுளை, மீகஹகிவுல பகுதி மாணவர்களும் பரீட்சை எழுதவில்லை.

இதேவேளை மழை காரணமாகப் பரீட்சைக்குத் தோற்ற முடியாது போன மாணவர்கள் குறித்துக் கவனம் செலுத்தப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யு.எம்.என்.ஜே.புஸ்பகுமார தெரிவித்தார்.

இந்த மாணவர்களுக்கு எவ்வகையான திட்டத்தை செயற்படுத்துவது என்று இன்னும் தீர்மானிக்கவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை பொலனறுவை , பக்கமுன மகா வித்தியாலயப் பரீட்சை நிலையத்தில் பரீட்சை எழுதிய 30 மாணவர்களுக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை வீடு செல்ல முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. அந்த மாணவர்களுக்கு தங்குமிட வசதி, உணவு என்பன கொடுத்து நேற்று செவ்வாய்க்கிழமை பரீட்சைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் என்று பொலனறுவை மாவட்ட செயலாளர் நிமல் அபேசிறி தெரிவித்தார். (ச)

# பொதுநலவாய நாடுகள் மாநாட்டுக்கு ஆஸ்திரேலியா பூரண ஆதரவு வழங்கும்

## அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு,டிசெ.19

இலங்கையில் அடுத்த வருடம் இடம்பெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டுக்காக இலங்கைக்குத் தேவையான அரசியல் மற்றும் தொழில்நுட்ப ரீதியிலான உதவிகளை ஆஸ்திரேலியா வழங்கும் என்று ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் பொப் கார் தெரிவித்தார்.

பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கான சகல தொழில்நுட்ப உதவிகளையும் ஆஸ்திரேலியா வழங்கும் என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது, இலங்கையில் நடைபெறவுள்ள மாநாட்டுக்குப் போக வேண்டாமென கனடா அழுத்தம் கொடுக்கும் நிலையில் ஆஸ்திரேலியா, இலங்கைக்கு ஆதரவு வழங்குமா எனக் கேட்டதற்கு பதிலளித்த பொப் கார்,

கனடா மனித உரிமை கள் பற்றிய பிரச்சினை குறித்து இலங்கையுடன் பேச வேண்டும். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை மையப்படுத்தி இலங்கையுடன் கனடா பேச முடியும் என்று கூறினார்.

மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு குறித்த பிரச்சினைகளை பேசித் தீர்க்கும் அணுகுமுறையை கடைப்பிடிக்க வேண்டும். நாம் இந்தச் செயற்பாடுகளுக்கு எமது உதவித் திட்டங்கள் மூலம் உதவி வழங்குகின்றோம் என்று அவர் கூறினார்.

இலங்கையிலிருந்து ஆஸ்திரேலியாவுக்கு வருவோரில் பலர் பொருளாதார நோக்கில் புலம்பெயர்வோர். அவர்களை 72 மணித்தியாலங்களில் திருப்பி அனுப்புவதற்கான கொள்கைத் தீர்மானங்களையும், அதற்கான நடவடிக்கைகளையும் எடுத்து விட்டோம் என்று அவர் தெரிவித்தார்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளுக்காக ஆஸ்திரேலியா 20 மில்லியன் டொலர் உதவியை வழங்கும். கல்விக்கான உதவியாக 34 மில்லியன் ஆஸ்திரேலிய டொலர்களை வழங்கும் என்று அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் குறிப்பிட்டார்.

இலங்கைக்கான நான்கு நாள் பயணத்தை மேற்கொண்டுள்ள பொப் கார், இலங்கையுடனான பொருளாதார, வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளை ... நோக்கில் பல சந்திப்புக்களை மேற்கொண்டார். (ச)

## பொலிஸ் அதிகாரிகளுக்கு பிணை

கொழும்பு காரோட்டப் பந்தயத்தின் போது நுழைவுச் சீட்டின்றி நுழைய முயற்சித்து கடமையிலிருந்த பொலிஸாருக்கு இடையூறு விளைவித்த பாதுகாப்பு அமைச்சு பிரிவைச் சேர்ந்த இரு பொலிஸ் அதிகாரிகளைப் பிணையில் செல்ல கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்ற இந்தக் காரோட்டப் பந்தயத்தின்போது இடையூறு விளைவித்த குறித்த பொலிஸ் அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களை தலா 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல கோட்டை நீதிவான் கனிஷ்க விஜேரத்ன அனுமதி வழங்கியுள்ளார்.

இந்த நபர்கள் நுழைவுச் சீட்டின்றி வந்ததை அடுத்து அவர்களைப் பந்தயம் இடம்பெறும் இடத்துக்குச் செல்ல பொலிஸார் அனுமதி மறுத்துள்ளனர். இதனால், கடமையிலிருந்த பொலிஸார் மீது இவர்கள் கற்களை வீசி தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

இந்தநிலையில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும், சட்ட மருத்துவரின் மதுபோதைப் பரிசோதனைக்கு உட்படுத்தியதையடுத்து அவர்கள் மது அருந்தியிருந்தமை தெரியவந்துள்ளது. இந்த நிலையிலேயே, இவர்களுக்கு நீதிமன்றம் பிணையில் செல்ல அனுமதி வழங்கியுள்ளது.(ச)

# அரசின் நடவடிக்கையால் மக்கள் பெரும் குழப்பத்தில்

## கயந்த கருணாதிலக்க எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு,டிசெ.19

அரசின் நடவடிக்கைகளினால் நாடு எந்தத் திசை நோக்கி நகர்கின்றது என்பது பற்றிய குழப்பத்தில் மக்கள் ஆழ்ந்துள்ளனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உலகம் அழிவடையும் என்ற நோக்கத்தில் அரசு செயற்பட்டு வருகிறது. நாட்டின் சகல துறைகளிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

நீதிமன்றக் கட்டமைப்பின் சுயாதீனத்தன்மையை உறுதிப்படுத்துமாறு கோரி சட்டத்தரணிகள் போராடுகின்றனர்.

நாட்டில் இடம்பெறும் சம்பவங்கள் தொடர்பில் சர்வதேச சமூகம் உன்னிப்பாக அவதானித்து வருகின்றது.

சர்வதேச சமூகம் மனித உரிமைப் பேரவை போன்றன நாட்டுக்கு எதிராக சதி செய்வதாக அரசு குற்றம் சுமத்துகின்றது.

எனினும், சர்வதேச சமூகம் நாட்டின் விவகாரங்களில் தலையீடு செய்வதற்கான சந்தர்ப்பத்தை அரசே ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.- என்றார். (ச)

# எம்.பிகளின் சொத்து விவரம் அம்பலப்படுத்த நடவடிக்கை

## தேர்தல் கண்காணிப்பு அமைப்பு தகவல்

கொழும்பு,டிசெ.19

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொத்து விவரங்களை அம்பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான விவரங்கள் பகிரங்கப்படுத்தப்பட வேண்டியது அவசியமானது என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'கமெநகும' திட்டத்துக்கான முன்மொழிகளை சமர்பிக்குக

### அரச அதிபர் கோரிக்கை

'கமநெகும' உட்கட்டுமாண திட்டத்தின் கீழ் தீவகத்தின் மூன்று பிரதேச சபைகளுக்கு 300 மில்லியன் ரூபாவுக்கான வேலைத்திட்ட முன்மொழிவுகளை விரைந்து அனுப்பி வைக்குமாறு யாழ். அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கேட்டுள்ளார்.

நெடுந்தீவு - வேலணை - ஊர்காவற்றுறை ஆகிய மூன்று பிரதேச சபைகளுக்குத் தலா நூறு மில்லியன் ரூபா வீதம் 300 மில்லியன் ரூபாவினை வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ வழங்கி இருந்தார்.

இவ்வாறு கிடைக்கப்பெற்ற உள்ளூராட்சி சபைகளுக்கான கருத்திட்டம், முன்மொழிவு, வரைபடம், மதிப்பீடு என்பவற்றைத் தொகுத்து உடன் திணைக்களத் தலைவர்களூடாக அனுப்பி வைக்குமாறு அரச அதிபர் கேட்டுள்ளார்.

(41)


## விற்பனையாளர் தேவை (இருபாலரும்)

எமது Serendib Enterprise நிறுவனத்திற்கு Electrical, Garments, General materials போன்றவற்றை விற்பனை செய்வதற்கு விற்பனையாளர்கள் உடனடியாகத் தேவை.
நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.
0716647692
(26922)(2.6)
127 /5, மின்சார நிலைய வீதி,
யூபிலீ பஜார், யாழ்ப்பாணம்

## வீடு வாடகைக்கு

யாழ். போதனா வைத்தியசாலைக்கு மிக அருகில் நான்கு அறைகள், இரண்டு குளியல் அறைகள், வாகனத் தரிப்பிடம், முற்று முழுதாக மாபிள் பதித்த புதிய வீடு வாடகைக்கு உண்டு.
தொ.பே: 077 775 5175, 021 222 9140
(26958)(5-6-7)


## முதலாம் ஆண்டு நினைவு

அமரர் ஞானபிரகாசம் மாசிலாமணி



மலர்வு
04.07.1940

உதிர்வு
19.12.2011

இமைகள் மூடித் திறப்பதற்குள்
வருடமோ ஒன்றானது
நாம் வாழும் நாள்களில் உம்
நினைவுகள் எம்முடன் வாழும்.

கணவர்,
மகன்
மருமகள் } பிரான்ஸ்,
பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல. 87,300 வீட்டுத்திட்டம்,
நாவற்குழி.
(26953)(45.7.6)

## 10 சிறைகளில் இலங்கையர் சவூதியில் தடுப்பு

சவூதி அரேபியாவில் உள்ள 10 சிறைச் சாலைகளில் குற்றச் செயல்களில் ஈடுபட்ட இலங்கையர்கள் தடுத்து வைக் கப்பட்டுள்ளதாக சவூதி அரேபியாவுக் கான இலங்கைத் தூதரக பதில் நிர்வாக அதிகாரி சரத்குமார வீரசிங்க தெரிவித்துள் ளார். தாம் பதவி யேற்ற காலப் பகுதியில் மத் திய கிழக்கில் பணி புரியும் இலங்கையர் களுக்கு சுமார் 600 இற்கும் மேற்பட்ட பிரச் சினைகள் இருந்தன. ஆனால் அவை தற் போது 24 ஆகக் குறை வடைந்துள்ளதாகவும் சரத்குமார குறிப்பிட் டார்.


## 2013 இற்கான புதிய அனுமதிகள்
## BUTTERFLY INTERNATIONAL SCHOOL

Education is Salvation
Main Street, Chankanai. T.P.: 077 243 6737

### ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலை

யாழ்ப்பாண மாவட்டத்தில் தரம் வாய்ந்த முன்னணி ஆங்கில மொழி மூலமான பாலர் பாடசாலையான Butterfly International School இக்கு புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களை இன்று (19.12.2012) புதன்கிழமையில் (நேரம்: 8.30-11.30) இருந்து பெற்றுக்கொள்ளலாம்.





### அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டவை இன்றே முந்துங்கள்

| Play Group | Montessori | PreSchool |
|---|---|---|
| வயது 2+ முதல் வயது 3 வரை | வயது 3+ முதல் வயது 4 வரை | வயது 4+ முதல் வயது 5+ வரை |

- ★ சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட Dr.Maria montessori இன் Method இல் உள்ளக,வெளியக விளையாட்டுக்கள், அனுபவமும் அர்ப்பணிப்பும் கூடிய ஆசிரியர்களினாலான கற்கை நெறிகள்.
- ★ சிறார்களின் திறமைகளை வெளிக்கொணரும் நிகழ்வுகளில் சகலரும் பங்கு பெறுவர்.
- ★ விளையாட்டுப்போட்டி,English Concert, முத்தமிழ்விழா, சித்திரக்கை வேலைக் கண்காட்சி, Graduation Ceremony

சனி,ஞாயிறு மற்றும் வாரநாள்களில் ஆங்கில கணினி வகுப்புக்கள் நடைபெறும்.

Director
Butterfly International School.
(26926)(5-6-7)


## புலோலி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்
## புலோலி கிழக்கு பருத்தித்துறை

### சேவிஸ் நிலையம் குத்தகைக்கு வழங்கல்

எமது சங்க சேவிஸ் நிலையம் குத்தகைக்கு வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விருப்பமுடையோர் மீளளிக்கத்தக்க வைப்புப்பணமாக ரூபா 1000/= வைப்புச் செய்து இதற்கான விண்ணப்பப்பத்திரத்தை தலைமை அலுவலகத்தில் பெற்று அதனைப் பூர்த்தி செய்து ஒரு கடிதவுறையினுள் வைத்து ஒட்டி 31.12.2012 இற்கு முன்னர் பொது முகாமையாளர், புலோலி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், புலோலி கிழக்கு,பருத்தித்துறை எனும் முகவரியிட்டு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும்.

புலோலி ப.நோ.கூ.சங்கம்,
புலோலி கிழக்கு, பருத்தித்துறை.
(/2659)(6.7.4)


உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்னை மடியில்
06.09.1966
இறைவன் அடியில்
19.11.2012

### கணபதிப்பிள்ளை சாந்தகுமாரன்


(துனியார் பேருந்து உரிமையாளரும், துணுக்காய்சாலை, பிரபல வர்த்தகரும்)

கடந்த 19.11.2012 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் 15.12.2012 அன்று கீரிமலை புனித தீர்த்தக்கரையில் இடம்பெற்றன. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (19.12.2012) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வில் கலந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளு மாறு அழைப்பதோடு, மேலும் எமது குடும்பத் தலைவர் நோயுற்ற வேளையில் வைத்திய உதவிகள் வழங்கிய வைத்தியர்கள், வைத்திய தாதியர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் மறைவுச் செய்தி கேட்டு பல வழிகளில் ஆறுதல் கூறியோருக்கும் உடன் இருந்து உதவிகள் புரிந்தோருக்கும் நேரில் வந்து அஞ்சலி செலுத்தியோருக்கும், தொலைபேசி ஊடாக அனுதாபச் செய்தி யைப் பகிர்ந்து கொண்டோருக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் வெளி யிட்டோருக்கும் மேலும் பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்தோருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகள் உரித்தாகுக.

இல.70, ஜெயந்தி நகர்,
கிளிநொச்சி.
T.P.0776273834
(C/2661)(2.6.7)

மனைவி,
பிள்ளைகள்.

## ஈர விழிகளுடன் இரண்டு வருடங்கள்....



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 10 - 04 - 1982 | 11 - 01 - 2011 |

எமது அன்புக்கும் பாசத்துக்குமுரிய பாசமகன்

### அமரர் அன்னராசா தபீபன்

வசந்தம் வீசும் வாழ்வுப் பாதையிலே
சுகந்தம் வீசும் உறவுகள் சூழ்ந்து
செல்லப்பிள்ளையாக வாழ்ந்தவேளை
இளமையிலே முடிவெழுதி கவர்ந்ததேனோ?
மாறாத சோகமுடன் மனமுருகிப் புலம்புகின்றோம்
கனத்த இதயமுடன் கண்ணீரால் அஞ்சலிக்கின்றோம்
ஆண்டுகள் இரண்டுகள் ஆனபோதும்
ஆறவில்லை எம் மனம் காயவில்லை எம் ஈரவிழிகள்.

161, காளாநகர் வீதி,
வெல்லாணற்பிள்ளையார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.
(26954)(2)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தோல், கண், மற்றும் சிறுவருக்கான

## விசேட கிளினிக் ஆரம்பமாகியது சாவகச்சேரி வைத்தியசாலையில்

தென்மராட்சி, டிசெ.19

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் தோல் மற்றும் கண், சிறுவர் விசேட கிளினிக்குகள் ஆரம்பித்தமைக்கு நோயாளர்கள் மாகாண சுகாதாரப் பணிப்பாளருக்கும் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கும் நன்றி தெரிவித்துள்ளனர். அத்துடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் நடத்தப்படும் கிளினிக்குகளுக்கு நோயாளர்கள் செல்ல வேண்டி இருக்கிறது. சாவகச்சேரி வைத்தியசாலை யில் இதுவரை ஆரம்பிக்கப்படாத கிளினிக்குகளையும் ஆரம்பிக்குமாறு கோரியுள்ளனர்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை ஏ-9 வீதியுடன் இணைந்துள்ளதால் பச்சிலைப்பள்ளி, வடமராட்சி கிழக்கு, கிளிநொச்சி, கரைச்சி, பூநகரி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் இலகுவாக சிகிச்சை பெற முடிகிறது. மேலும் வைத்தியசாலையில் நடத்தப்படும் தோல், கண், சிறுவர் கிளினிக் போன்றவை நடத்தப்படுவதால் அனைத்து நோயாளர்களும் நேரவிரயம், பண விரயம் ஆகியவை குறைந்து அலைச்சலின்றி கிளினிக்கில் கலந்து கொண்டு தமது வீடுகளுக்குச் செல்ல முடிகிறது. இங்கு பெரும்பாலான கிளினிக்குகள் நடத்தப்படுவதால் நோயாளர்கள் சிரமமின்றி சிகிச்சை பெற முடிகிறது. இதுவரை இந்த வைத்தியசாலையில் நடத்தப்படாது யாழ்.போதனா வைத்திய சாலையில் மட்டும் வைத்திய நிபுணர்களால் நடத்தப்படும் கிளினிக்குகளையும் இங்கு நடத்தி நோயாளர்களுக்கு சிறந்த சேவைகளை வழங்குமாறும் கேட்டுள்ளனர். (3-9)

## தனிநாயகம் அடிகளாரின் வாழ்வும் தமிழ் பணியும் ஆய்வு

100 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு

கொழும்புத்துறை, டிசெ.19

தமிழறிஞர் வண.பிதா தனிநாயகம் அடிகளாரின் வாழ்வும் தமிழ்ப் பணியும் தொடர்பான ஆய்வு முயற்சியை மேற்கொள்ளும் நடவடிக்கை இந்திய அருட்தந்தையினால் யாழ்பாணத்தில் இடம்பெற்று வருகின்றது.

தனிநாயகம் அடிகளாரின் 100 ஆவது பிறந்த தினம் அடுத்த ஆண்டு கொண்டாடப்படவுள்ளதையொட்டி தமிழ்நாடு அன்னை வேளாங்கண்ணி ஆலய இறைதியான அமைப்பின் பொறுப்பாளர் அருட்திரு அமுதன் அடிகளார் இந்தப் பணியில் ஈடுபட்டு கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவரான தனிநாயகம் அடிகளாரின் சமய, தமிழ்ப் புலமை, மொழிப்பற்று தொடர்பான தகவல்களை நெடுந்தீவில் உள்ள அவரது உறவினர்கள் மற்றும் பல்கலைக்கழக பேராசிரியர்கள், புத்திஜீவிகள், மூத்த அருட் தந்தையர்களைச் சந்தித்து திரட்டி வருவதாக அருட்தந்தை தெரிவித்தார்.

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள 100 ஆவது ஜனன விழாவில் இந்த ஆய்வு நூல் வெளியிடப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது. (3-135)

## சமய சந்நிதிகளில்

மாவைக்கந்தன் ஆலயத்தில் சிவகாமசுந்தரி சமேத சிதம்பர நடராஜப் பெருமான் சந்நிதியில் திருவெம்பாவை பூசைத் திருவிழா நடைபெறவுள்ளது.

இன்று புதன்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகும் திருவெம்பாவைப் பூசை தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும். (3)

★ ★ ★

நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலயத்தில் திருவெம்பாவை பூசை இன்று 19 ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறும் இந்த நிகழ்வில் தினமும் விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து திருவெம்பாவை பாடல்கள் பாடப்படும். (3-100)

## துர்நாற்றம் வீசும் கழிவுநீர் கால்வாய்

அசௌகரியங்களை எதிர்கொள்ளும் பயணிகள்

கொழும்புத்துறை, டிசெ.19

தூர இடங்களுக்கான தனியார் போக்குவரத்து பஸ் தரிப்பு நிலையத்திற்கு அருகில் உள்ள புல்லுக்குளப் பகுதியில் கழிவு நீர்க் கால்வாய் சீரான நீரோட்டமின்றி துர்நாற்றம் வீசுகின்றது.

இதனால் தொலைதூரப் பயணங்களை மேற்கொள்ள வரும் பயணிகளும், சாரதி, நடத்துநர்களும் பல அசௌகரியங்களை எதிர் நோக்குவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

யாழ்.நகரப் பகுதியில் சேரும் கழிவுநீரை கடலுக்கு அனுப்பும் கால்வாயிலும் புல்லுக்குள ஓரமாக புதிதாக அமைக்கப்பட்ட கடலுக்கு கழிவுநீரை எடுத்துச் செல்லும் நிலக்கீழ்குழாயின் ஆரம்ப இடத்திலும், கழிவுநீர் தேங்கி நின்று துர்நாற்றம் வீசுவதுடன், நுளம்புப் பெருக்கத்தையும் உண்டு பண்ணுகிறது. அதே வேளை நகரப்பகுதிக் கழிவு நீரை எடுத்துவரும் கால்வாய் நீண்டகாலமாக தூர்வு எடுக்காது அணைச் சுவர்கள் இன்றியும் காணப்படுவது நீரோட்டத்தைத் தடைப்படுத்துவதாகக் கூறப்படுகிறது.

இந்தப்பகுதியில் நடைபாதை வியாபார நிலையங்கள், பஸ் நிலையம் உட்பட மக்கள் நடமாட்டம் மிகுந்து காணப்படுவதால் யாழ்.மாநகர சபை இந்த விடயத்தில் கவனம் எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (3-135)

## மணிவாசகர் சபை மாணவரைக் கௌரவிக்கும்

காரைநகர், டிசெ.19

காரைநகர் மணிவாசகர் சபை நடத்திய சைவசமய பாடப் பரீட்சையில் அதி உயர் புள்ளிகளைப் பெற்ற ஐவர் தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

கடந்த மாதம் தரம்- 2 - தரம்-11 வரையான காரைநகர் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களிடையே சமய பாடப் பரீட்சை நடத்தப்பட்டது. இந்தப் பரீட்சையில் சுமார் ஆயிரத்து 200 மாணவர்கள் தோற்றி இருந்தனர். அவர்களில் அதி உயர் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு எதிர்வரும் 25 ஆம் திகதி ஈழத்துச் சிதம்பர வசந்த மண்டபத்தில் இடம்பெறவுள்ள மணிவாசகர் விழாவில் தங்கப் பதக்கம் சூட்டி கௌரவிக்கப் படவுள்ளனர்.

செல்வி பி.ரேந்தினி தரம்-03 (யாழ்ற்ரன் கல்லூரி), செல்வன் கி.மதுஷன் தரம்- 4 ( ஊரி .அ.மி.த.க. பாடசாலை), செல்வி பா.சிவராஜினி, தரம்- 6(யா/கலாநிதி ஆதியாகராசா ம.ம.வி), செல்வி செ.கமலேஸ்வரி (தரம்-9- யாழ்ற்ரன் கல்லூரி), செல்வி க.சாந்தினி, தரம்-11 (யா/ கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.) ஆகிய ஐந்து மாணவர்களுமே தங்கப் பதக்கம் வழங்கி கௌரவிக்கப் படவுள்ளனர். (3-250)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

மேற்படி சீட்டிழுப்பு 10.12.2012 இல் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பழைய மாணவர் தாய்ச் சங்கத்தினரால் மேற்கொள்ளப்பட்டது.

**சீட்டிழுப்பின் முடிவுகள் பின்வருமாறு**

★ முதலாம் பரிசில் இல. 173
★ 2 ஆம் பரிசில் இல. A 550
★ 3 ஆம் பரிசில் இல. 749
★ 4 ஆம் பரிசில் இல. 140
★ 5 ஆம் பரிசில் இல. 20

ஆறுதல் பரிசில்களின் இலக்கங்கள்:
*743, 552, 172, 3437, 159, 179, 3319, 178, 58, 195*

வெற்றியாளர்கள் பரிசுக்குரிய இலக்கங்களைக் கொண்ட ரிக்கெட்டுக்களுடன் மேற்படி சங்கச் செயலாளர்/ அதிபருடன் தொடர்பு கொள்ளவும்.

கந்தரோடை,
சுன்னாகம்.

செயலாளர்,
ஸ்கந்தா பழைய மாணவர் தாய்ச் சங்கம்.

(28984)(2.6)

## மின்சாரம் வந்தது உதயபுரம் பகுதிக்கு

கொழும்புத்துறை,டிசெ.19

கொழும்புத்துறை உதயபுரம் பகுதிக்கு அண்மையில் மின்சார விநியோகம் வழங்கப்பட்டுள்ளது. மணியந்தோட்டத்திலிருந்து உயர் மின்வலு மார்க்கம் உதயபுரத்துக்கு கொண்டு செல்லப்பட்டு, மின்மாற்றி பொருத்தப்பட்டு இலங்கை மின்சார சபையால் மின் விநியோகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மீளக்குடியமர்ந்த இந்தப் பிரதேசத்திலுள்ள வீதிகளுக்கு வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளதோடு, வீடுகளுக்கு 6 மாதகாலத்துக்கு இலவச மின்னிணைப்பு வடக்கின் வசந்தத்தின் கீழ் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அதே வேளை போக்குவரத்து மேற்கொள்ள முடியாதிருந்த உதயபுரம், கடற்கரை வீதி செப்பனிடப்பட்டு பாவனைக்கு விடப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவித்தனர்.

(3-135)

## ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர் தாய்ச் சங்கம் வருடாந்த பொதுக்கூட்டம்


23.12.2012 நடைபெறவிருந்த வருடாந்தப் பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்படுகின்றது. மேற்படிக் கூட்டம் 06.01.2013 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஸ்கந்தவரோதயக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

கந்தரோடை,
சுன்னாகம்.

செயலாளர்,
ஸ்கந்தா பழைய மாணவர் தாய்ச் சங்கம்.

(28970)(2.6)

## கண்ணீர் அஞ்சலி



### துரையப்பா இரத்தினேஸ்வரி

எமது ஸ்தாபனத்தில் கடமையாற்றும் சக ஊழியரான துரையப்பா றமேசனின் *பாசமிகு தாய்* துரையப்பா இரத்தினேஸ்வரி 17.12.2012 சிவபதம் அடைந்தசெய்தி கேட்டு நாம் எல்லோரும் அதிர்ச்சி அடைந்தோம்.

அன்னாரின் இழப்பின் சோகத்தால் ஆழ்ந்துள்ள குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி! !சாந்தி!!!*

38, யாழ்.வீதி,
மானிப்பாய்.

சுந்தர்சன் உரிமையாளரும்,
சக ஊழியர்களும்.

*(சி/2660)(2-6-7)*

## திருவெம்பாவை ஓதல்

யாழ்ப்பாணம், டிசெ.19

யாழ்.சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் திருவெம்பாவை ஓதல் நிகழ்வு நடைபெறவுள்ளது. இன்று புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை காலை 8.30 மணிக்கு நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஆர்வமுள்ளவர்கள் கலந்துகொள்ளலாம் என சைவபரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

(3)

## இலிகிதர் தேவை

யாழ். நகரப்பகுதியில் வசிக்கும் சட்டத்தரணி ஒருவருக்கு இலிகிதர் தேவை. தமிழ் தட்டெழுத்து தெரிந்திருத்தல் அவசியம்.

தொடர்பு : 0779672613

(26974)(14)

## காணி உடன் விற்பனைக்கு

கொடிகாமம் - பருத்தித்துறை வீதி காக்கியங் குளத்துக்கு மேற்குப்பக்கமாக புதிதாகக் கட்டப்பட்ட காளிகோயிலுக்கு அண்மையில் குடியிருப்பாளர் காணிவிற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு :
0776094911,0772487170

## வீட்டுப்பணிப் பெண் தேவை

சாவகச்சேரியில் உள்ள அரச உத்தியோகத்தரின் வீட்டில், பிள்ளைகளைப் பராமரிக்க வீட்டுப் பணிப்பெண் தேவை.

★ வேலை நேரம் : காலை 7.00 மணி- மாலை 3.00மணி வரை

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

*தொடர்புகளுக்கு : 0775278917*

(26955)(7)

## மரண அறிவித்தல்

### துரைச்சாமி ஆச்சிப்பிள்ளை



பலாலி மத்தியைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட துரைச்சாமி ஆச்சிப்பிள்ளை கடந்த (16.12.2012) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை-கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற துரைச்சாமியின் அன்பு மனைவியும் பாலசுப்பிரமணியம் (அமெரிக்கா), பரமேஸ்வரன் (கனடா), யோகாம்பிகை (ஆஸ்திரேலியா), உருத்திரகுமார் (ஆஸ்திரேலியா) லோகநாதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், சகுந்தலா (அமெரிக்கா), சந்திராமொழி(கனடா) சற்குணநாதன் (ஆஸ்திரேலியா), தனேஸ்வதி (ஆஸ்திரேலியா), ஞானசரஸ்வதி (லண்டன்) ஆகியோரின் மாமியும், பாலகுமார் (அமெரிக்கா), கிருசாந்தன், சாயிவந்தனா(கனடா), பிரபுசங்கர் பவானி (ஆஸ்திரேலியா), சாயிபிரியதர்சன்(ஆஸ்திரேலியா), திவாகரன், வர்ணிக்கா(லண்டன்), ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (20.12.2012) வியாழக்கிழமை நடைபெற்று மு.ப 10.00 மணியளவில் கோப்பாய் கந்தன்காடு இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

V.Cமுன், அதிகாரிவீதி,
கோப்பாய் தெற்கு.

(26963)(14)

தகவல்.
குடும்பத்தினர்.

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA No -1
புறொயிலர் குஞ்சுகள்,
*22.12.2012*
விநியோகிக்கப்படும்

றாஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
T.P : 077 609 0926

(26958)(6-7-45)

## விற்பனைக்கு

நல்லினப் பன்றிக் குட்டிகளும் இறைச்சிப் பன்றிகளும் விற்பனைக்குண்டு.

T.P No :0775250996

## முதலாம் ஆண்டு நினைவு



அமரர் ஞானபிரகாசம்
மாசிலாமணி

மலர்வு
04.07.1940

உதிர்வு
19.12.2011

இமைகள் மூடித் திறப்பதற்குள்
வருடமோ ஒன்றானது
நாம் வாழும் நாள்களில் உம்
நினைவுகள் எம்முடன் வாழும்.

இல. 87,300 வீட்டுத்திட்டம்,
நாவற்குழி.

கணவர்,
மகன்
மருமகள் } பிரான்ஸ்,
பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்.

(26953)(45.7.6)

## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியம் தம்பிராஜா



இல. 107, சேர் பொன். இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் தம்பிராஜா நேற்று (18.12.2012) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை- செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து - சிந்தாமணி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தம்பிராஜாவின் அன்பு மனைவியும்,தேவராசா (கனடா), யோகராஜா (கனடா),கௌசலா, சித்திரா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், செல்லத்தம்பி, மகேந்திரன் (கனடா), வசந்தா (கனடா), ஜெயக்குமாரி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், தர்மலிங்கம் (கனடா) , தவமணி ஆகியோரின் சகோதரியும்,காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, செல்லத்துரை, றோசம்மா மற்றும் நடேசு, தங்கச்சியம்மா, தம்பித்துரை, இரத்தினம், விக்ரோறியா (கனடா) ஆகியோரின் மைத்துனியும், அலன், துரிதா, நிகேஷன், கோகுலன், விசாகன், மீரா, அருண், நிலானி, அபினன் ஆகியோரின் பேர்த்தியும், திருமதி யோகேஸ்வரி ஐயாத்துரையின் சிறிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2012) புதன்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல107,சேர் பொன்.
இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
தேவராஜா, யோகராஜா
புதல்வர்கள்,
செல்லத்தம்பி (மருமகன்)
077844 5602

## 25 ஆம் ஆண்டு நினைவுப்பதிவு



உதிப்பு
29.04.1969

அழிப்பு
19.12.1987

ஈற்றெஸ் செந்தில்குமரன்

கால் நூற்றாண்டு முன்னாலே
அந்நாளில் உயிர்க்காவிகள்
உனக்கு புதைகுழி அமைத்தார்கள்
நாம் உன்னைக் கல்லறைக்கு மாற்றி
எம் நெஞ்சக்கூட்டில் இட்டு

பிரிவால் துயருறும்

சித்தப்பா - குடும்பம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது அயலவரும் நற்பண்புள்ள ஒத்துழைப்பாளருமாகிய கு.செல்வகுமார் அவர்களின் தந்தை

**இளையதம்பி குமாரசாமி**

அவர்களின் திடீர் மரணச் செய்தி கேட்டு TCT குடும்பம் ஆழ்ந்த துயரமடைவதோடு, அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

527,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (26969)(6-6-7)

TCT பணிப்பாளர்,பணியாளர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## செல்லத்துரை பார்வதியம்மா

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் தற்காலிகமாக கனடாவையும் , ஜேர்மனியையும் வசிப்பிடமாகக் கொண்ட திருமதி. செல்லத்துரை பார்வதியம்மா நேற்று (18.12.2012) செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை -பொன்னம்மா தம்பதியரின் இளைய மகளும், காலஞ்சென்ற சுந்தரம் ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சுந்தரம் செல்லத்துரையின் அன்பு மனைவியும், சுகந்தா, வசந்தா(ஜேர்மனி), ஜெயந்தி(கனடா), அனுசியா (ஜேர்மனி), செல்வரூபன்(கனடா), ஜெயரூபி(கனடா), கிரிஜா(ஜேர்மனி), ஸ்ரீபவானி(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும், ஜெகதீஸ்வரன்(துளசி மாடம், சிற்றி ஸ்ரார், யாழ்ப்பாணம்), கணேஸ்வரன்(ஜேர்மனி), சுதர்சன்(கனடா), புவனேந்திரன் (ஜேர்மனி), குகனேஸ்வரி (கனடா), சரவணபவான் (கனடா), ரவிதாஸ் (ஜேர்மனி), முரளீதரன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும், ஜனார்த்தனன், ஜெய்சன், ஜெரூசன், கஜானன், கஜானி, மிதுன், ஆத்பவான், தக்ஷா, கோசயன், யோபி, விதுசன், துஷான், திரிபுரா, கருணன், சாருகா, ராகுல், சமீறா ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரசுவாமி, தங்கம்மா, பூரணம்மா, செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தேவாலய வீதி,
தாவடி தெற்கு , கொக்குவில்.
ஜேர்மனி-004924316573

தகவல்:
ஜெகதீஸ்வரன்
(மருமகன்).

SALE நத்தாரை முன்னிட்டு ஒரு சில தினங்கள் மட்டுமே..... அதிரடி விலைக்கழிவில் SALE

**Desktop Offer-1**
Intel Dual Core G630
M/Board Intel DH61
2GB Ram - Kingston
HDD 500 GB Samsung
ATX Casing 250W
DVD Writer Samsung
Monitor 19" LED Sumsung
Keyboard, Mouse, Speaker
UPS 650VA
Dos Free
Price :- 495,00/=

**Desktop Offer-2**
I3 Intel 2120 3rd Gen
M/Board Intel DH61
2GB Ram - Kingston
HDD 500 GB Samsung
Casing ATX 250W
DVD Writer Samsung
Monitor 19" LED Sumsung
Keyboard, Mouse, Speaker
UPS 650VA
Dos Free
Price :- 585,00/=

**Laptop Offer**
HP CQ-43
B960 Intel Processor
2GB Ram , HDD 500GB
14" LED Display
DVD/RW, BT ,Webcam
O/S - Dos Free
Price :- 545,00/=

Free !! Antivirus Panda 2012

Note
1-3 வருட வரையறுக்கப்பட்ட உத்தரவாதம்.
கையிருப்பில் உள்ளவரை மட்டுமே....

*Sales, Repair, & maintenance, Software Develop. and etc ...*

*SDS Computer Technologices*
*No. 42/2, College Road, Neeraviady, Jaffna.*
*Tel :- 021 2224500*
*Hotline :- 0777 874705*

எங்களின் நோக்கம் உங்களின் தொழில்நுட்ப முன்னேற்றம்

கட்டணச்சலுகையில் கணினிக்கற்கை நெறிகள்
DMI COMPUTER EDUCATION

- Diploma in Microsoft Office
- Adv. Dip. in Hardware & Networking
- Dip. in Pre-Press Desktop Publishing
- Dip.in Web Designing & Development
- Dip. in Computerized Accounting
- Tally Financial Accounting Training
- Master Dip. in Multimedia & Animation

#AutoCAD # Maya #JAVA

நவீன தொழில்நுட்பங்கள், Advanced Video Editing மென்பொருள்களையும் உள்ளடக்கிய தமிழ் மொழி விளக்கங்களுடனான முழுமையான Video Editing கற்கை நெறி.



Video Production & Multimedia

Int. to Digital Video, Adobe Premiere CS 5, ParticleIllusion, Photoshop CS6 Pinnacle Studio HD 16, COOL 3D Studio, Adobe After Effects, & Nuendo,

☑அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
☑சர்வதேச அங்கீகாரம் பெற்ற (ISO-9001:2008) CERTIFIED சான்றிதழ்கள்
☑இலகு தவணைக்கட்டண வசதிகள். ☑ இங்கிலாந்து, இந்திய பாடநூல்கள்.

ஒவ்வொரு வாரமும் புதிய பிரிவுகள் ஆரம்பம்.

அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கணினி கல்விக்கு

DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி. | சாவகச்சேரி | [illegible] |
|---|---|---|---|
| No.113, கன்னாதிட்டி வீதி, Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) Tel. : 021-226 2470 | No.174, கண்டி வீதி (HNB அருகில்) Tel.:021-227 0243 | Tel.:021-224 1970 |

### தமிழக மீனவர்கள் 14 பேர் கைது

கச்சதீவில் தமிழக மீனவர்கள் 14 பேர் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மண்டபம் பகுதியைச் சேர்ந்த கோவிந்தராஜ், செல்வராஜ், முத்துமாரி, ராமு ஆகிய 4 பேர் கடந்த சனிக்கிழமை கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர். சனிக்கிழமை இரவு கச்சதீவுக்கு அருகே மீனவர்கள் சென்றபோது படகு பழுதானது. இதனால் அவர்கள் நால்வரும் கச்சதீவில் போய்த் தங்கி னர்.

அதையடுத்து அவர்கள் திரும்பி வராததால், அவர்களை மீட்க கடந்த ஞாயிற்றுக்கிழமை பாலு என்பவருக்குச் சொந்தமான படகில் 4 மீனவர்கள் சென்றனர். அவர்கள் மீனவர்களைத்தேடிக்கொண்டு கச்சதீவுக்குச் சென்றனர். இந்தநிலையில், அந்தப் பகுதிக்குச் சென்ற இலங்கைக் கடற்படை யினர், இந்த 8 மீனவர்களையும் கைது செய்தனர்.

கச்சதீவுக்கு அருகே புதுக்கோட்டை ஜெகதாப் பட்டிணத்தைச் சேர்ந்த மீனவர்கள் 6 பேர் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அவர்களையும் இலங்கைக் கடற்படையினர் கைது செய்து கச்சதீவில் வைத்துள்ளனர். (வ)

**விற்பனைக்கு**

புதிய Canon EOS 7D Camera (Kit) விற்பனைக்கு உண்டு.
தொடர்பு- 0772298861

**வீட்டுப் பணிப்பெண் தேவை**

சிறிய அரச உத்தியோகத்தர் குடும்பத்துக்கு வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய 40 வயதுக்கு மேற்பட்ட பணிப் பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். வேலை மிகவும் குறைவு.
தொடர்பு: 0770872446.
இடம் -கோண்டாவில்.

# மரண அறிவித்தல்

## யோசேப் யோண்பிள்ளை



யாழ்ப்பாணம் பாஷையூரைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் வடக்கு சந்திர புரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட யோசேப் யோண்பிள்ளை நேற்று (18.12.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பாக்கியவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான யோசேப்-எலிசபெத் தம்பதியரின் அன்பு மகனும், இறப்பியேல்-செல்வபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், மேரி கிறாஸ் (பவா), மேரிஜெரிமிணா (சாந்தி), அமலதாஸ்(ரகு), புஸ்பதாஸ் (சுரேஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஆனந்தராசா, கொன்சாங்ரீவல்ஸ் (சிந்தாத்துரை), சந்திர வதனி (பவி), சுகந்தி ஆகியோரின் அன்பு மாமனும், கிசோக்குமார், அசோக்குமார், றொசானி, அனிற்றா, அஜித்தா, அஜந்தன், அனஸ்ரீன், அனுசன், அனுஷிரிகா, கிளறியா, கிறேயஸ், புளோறியஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (19.12.2012) புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு மட்டுவில் வடக்கு லூர்த்துமாதா தேவாலயத்தில் நடைபெற்று பூதவுடல் மட்டுவில் லூர்த்து மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிலிப்ஸ் ஒழுங்கை,
மட்டுவில்வடக்கு, சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

# வாகனம் விற்பனைக்கு



JL XXXX எனும் இலக்கமுடைய லங்கா அசோக் லெய்லன்ட் பஸ் விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 0773159841
மு.யோகராஜா,
கே.கே.எஸ்.றோட்,
மருதனார்மடம், இணுவில்.
(26928)(2.6)

# அறிவித்தல்




இந்தப் படத்தில் காணப்படும் இளம் வயது நபர் 17.12.2012 திகதியிலிருந்து எமது பாதுகாப்பில் உள்ளார். அவர் செக்சேட்டும் ஜம்பரும் அணிந்திருந்தார். தயவு செய்து இக் குறித்த நபருக்குரியவர்கள் கீழ்க் கண்ட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அவரைப் பொறுப்பேற்கவும்.

விஜயசுலோசனா, வீரபத்திரர் கோயிலடி, அரசடிலேன், பண்ணையம்பதி, பருத்தித்துறை. தொ.பே.0776659235
(25569)(2.6)

# மரண அறிவித்தல்

## பரமநாதன் நடராசா
(சிமெந்துத்தொழிற்சாலை முன்னாள் ஊழியர்)



ஓட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரமநாதன் நடராசா நேற்று (18.12.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (19.12.2012) புதன்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

254,மானிப்பாய்வீதி, ஓட்டுமடம்,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
(மக்கள், மருமக்கள்,பேரப்பிள்ளைகள்)

# மரண அறிவித்தல்

## கதிரேசு கந்தையா

சரசாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரேசு கந்தையா நேற்று (18.12.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரேசு-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தங்கம்மாவின் பாசமிகு அருமைச் சகோதரனும் பரமேஸ்வரி, சிவானந்தன், குணரட்னம் (ஆசிரியர்), திருமகள் (இத்தாலி) ஆகியோரின் தந்தையும் கோபாலகிருஷ்ணன் (பனை அபிவிருத்திச் சபை), விஜயராணி, ராஜினி(ஆசிரியை) உதயகுமார் (இத்தாலி) ஆகியோரின் மாமனும் துவாரகா (NSB), தாட்சாயினி (NSB), திருமாறன் (மக்கள்வங்கி), பகீரதன், பாமினி, வைஷ்ணவி, சாகித்தியா, காருண்யா, பிரசாத், அபிநாஸ், அஷ்வியா, ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (19.12.2012) புதன்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சரசாலை தெற்கு, சவகச்சேரி. (26976)(14)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண வர்ண இரவு நாளை கோலாகல நிகழ்வு

## வீர, வீராங்கனைகள் கௌரவிப்பு

வலி.வடக்கு, டிசெ.19

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில், 'வர்ண இரவுகள்' நிகழ்வு கோப்பாய் தேசிய கல்வியியற்கல்லூரி மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை மாலை 5 மணியளவில் இடம் பெறவுள்ளது.

மூன்றாவது வருடமாக வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்படவுள்ள இந்த 'வர்ண இரவுகள்' நிகழ்வில் வடமாகாணத்தைச் சேர்ந்த சுமார் 300 க்கும் மேற்பட்ட வீரர்களும் வீராங்கனைகளும் கௌரவிக்கப்படவுள்ளனர். அத்துடன் வீரர்களை பயிற்றுவித்து, அவர்கள் வாகைசூடி பதக்கங்களைப் பெற உந்துதலாகச் செயற்பட்ட குறித்த வீரர்களின் பயிற்றுவிப்பாளர்களுக்கும் இந்தவருடம் முதல் முறையாக கௌரவிப்பு வழங்கப்படவுள்ளது.

இந்த வருடம் மாகாண, தேசிய மட்டங்களில் சாதனைகளை நிகழ்த்திய பாடசாலைகள், கழகங்கள் என்பவற்றைச் சேர்ந்த வீரர்கள், வீராங்கனைகள், பயிற்றுநர்கள் விளையாட்டுத்துறைக்கு சேவையாற்றியோர் என்போர் இந்த வர்ண நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளார்கள்.

உதைபந்து, கராத்தே, கபடி, உடற்பயிற்சி, மெய்வன்மை, கிரிக்கெட் போன்ற நிகழ்வுகளில் தேசிய, மாகாண ரீதியில் சாதனை படைத்தவர்களே இந்தக் கௌரவிப்பை பெறவுள்ளனர்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 213 வீர, வீராங்கனைகளும், வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 42 வீர, வீராங்கனைகளும் ,மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 35 வீர, வீராங்கனைகளும் கிளிநொச்சிமாவட்டத்தைச் சேர்ந்த 10 வீர, வீராங்கனைகளும் இதன்போது விருதுபெறவுள்ளனர்.

இந்த வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் பதக்கங்களுடன், பணப்பரிசில்களும் இதன்போது வழங்கப்படவுள்ளன. இது தவிர தேசிய மட்டம் என்ற எல்லையைக் கடந்து சர்வதேச ரீதியில் சாதனைபடைத்தவர்களும் இதன்போது விசேட விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்த நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும், வடமாகாண பிரதம செயலர் ஆர்.விஜயலட்சுமி, யாழ்.மாநகர முதல்வர் ப.யோகேஸ்வரி ஆகியோர் கௌரவ விருந்தினராகவும், யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ந-86-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.19

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும் கழத்தின் முன்னாள் வீரர்களான சாந்தன், யூட்கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காகவும் நடத்தப்படும் 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை மின்னொளியில் இடம்பெறும் ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு-

**மாலை 6 மணி**

ஈகிள்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் இளந்தென்றல் விளையாட்டுக் கழகம்.

* * *

நியூ வோரியர்ஸ் விளையாட்டுக்கழகத்தின் முதலாம் ஆண்டு நிறைவையொட்டி, அழைக்கப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையே நடத்தப்படும் லீக் முறையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு-

**மாலை 3 மணி**

புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் எதிர் பன்னாலை கணேஷன் விளையாட்டுக்கழகம்.

**மாலை 4 மணி**

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம், எதிர் கே.கே.எஸ் விளையாட்டுக்கழகம் . (ந-23)

## உதயதாரகை உத்வேகத்தில் அடிபணிந்தது இளம்பறவை

யாழ்ப்பாணம்,டிசெ 19

கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் 'சோ-ஆ' நிறுவனத்தின் வேலைத்திட்ட கிராமங்களை சேர்ந்த விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த உதயதாரகை விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று சம்பியனானது.

இந்த இறுதியாட்டம் இரணைப்பாலை சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது. இதில் சிலாவத்தை இளம்பறவை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டுக்கழக அணி களமிறங்கியது.

இரு அணிகளும் களத்தில் ஒன்றையொன்று விட்டுக்கொடாது சமபலத்தோடு மோதிக்கொண்டன. இதனால் ஆட்டத்தில் எந்த அணி வெற்றிபெற்று சம்பியனாகப் போகின்றது என்பதை எவராலும் கணிக்க முடியாது இருந்தது. ஏற்கனவே காலிறுதி, அரையிறுதி போட்டிகளில் தமது எதிரணிகளை சுலபமாக வீழ்த்தி முன்னேறிய இந்த இரு அணிகளும் இறுதிப்போட்டியில் பலத்த எதிர்ப்பை சந்திக்கவேண்டியிருந்தது.

ஆயினும் பலதடவைகள் முன்னேறித்தாக்கும் முயற்சிகளில் தோற்றுப் போனாலும், நம்பிக்கையோடு போராடிய கிளிநொச்சி உதயதாரகை வீரர்கள் தமக்குக் கிடைத்த சந்தர்ப்பம் ஒன்றை கோலாக்கினர். இதற்குப் பதிலடியாக தமது தரப்பில் கோலடிக்க இளம்பறவைகள் அணியினர் முயன்றபோதும், இறுதிவரை அந்த முயற்சி கைகூடவில்லை. இதனால் ஆட்டநேர நிறைவில் கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டுக்கழகம் 1:0 என்ற கோல்கணக்கில் இளம் பறவைகள் அணியை வீழ்த்தி சம்பியனானது.

(ந-23)

## திருமலை மெய்வன்மைச் சங்கத்துக்கு சுசந்திக்கா புதிய தலைவராகத் தெரிவு



திருகோணமலை,டிசெ.19

திருகோணமலை மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தின் புதிய நிர்வாகக் குழுவின் தலைவராக ஒலிம்பிக்கில் பதக்கம் வென்றவரும், பிரபல குறுந்தூர ஓட்டவீராங்கனையுமாக சுசந்திக்க ஜெயசிங்க தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் திருகோணமலை மக்கெய்சர் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது. இதன்போது போட்டியின்றி ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்ட நிர்வாக சபையினரின் விவரம்-

தலைவர்- சுசந்திக்க ஜெயசிங்க

உபதலைவர்கள்- எம்.ஸி.எம்.அரிக், ஏ.எச். விமலசேன.

செயலாளர்- எஸ்.விஜயநீதன்

உப செயலாளர்- கே.உமாசுதன்

பொருளாளர்- ஏ.டபிள்யு. எம் .பொசித்

நிர்வாக சபை உறுப்பினர்கள்- ஜி.பி.ஜோன். பிள்ளை, ஜ.இசோக், கே. எம்.ஹரிஸ், டி.எம்.ஈ.டி. பண்டார, எக்ஸ்.சி.தேவநேசன், எஸ்.அபயநாயக்க, ஜே.சுபாசினி, ரி.நிசாந்தினி

(ந-23)

## ஒட்டுசுட்டான் பிரதேச செயலக அணி கரப்பந்தாட்ட இரு பிரிவிலும் சம்பியன்

யாழ்ப்பாணம்,டிசெ 18

ஜனாதிபதி தங்கக் கிண்ணத்துக்காக முல்லைத்தீவு மாவட்ட ரீதியில் நடத்தப்பட்ட ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இரு பிரிவுகளிலும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத் தெரிவு அணி சம்பியனை வென்றது.

இந்தச் சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டி மாங்குளம் பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது.

முதலில் இடம்பெற்ற ஆண்களுக்கான கரப்பந்து இறுதியாட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத் தெரிவு அணியை எதிர்த்து துணுக்காய் பிரதேச செயலக தெரிவு அணி மோதிக் கொண்டது.

5 செற்களைக் கொண்ட இந்தப் போட்டியில் இரு அணிகளும் மாறிமாறி புள்ளிகளை குவித்த வண்ணம் இருந்தன. நான்காவது சுற்றுவரை இந்த பலப்பரீட்சை தொடர்ந்தது. ஆயினும் வெற்றியாளரைத் தீர்மானிக்கும் இறுதிச் சுற்றில் உச்சகட்ட திறமையை வெளிப்படுத்திய ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத் தெரிவு அணி இறுதிச் சுற்றை தன்வசமாக்கியது. இதனால் அந்த அணி 3:2 என்ற செற்கணக்கில் வெற்றியீட்டி சம்பியனானது.

தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத் தெரிவு அணியை எதிர்த்து பாண்டியன் குளம் பிரதேச செயலகத் தெரிவு அணி மோதிக் கொண்டது.

3 செற்களைக் கொண்ட இந்த இறுதியாட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக தெரிவு அணி 2:0 என்ற செற்கணக்கில் இலகுவாக வெற்றியீட்டி சம்பியனானது.(ந-23)

## ஒலிம்பிக்ஸ், பிக்வூட் அணிகளுக்கு வாகை

யாழ்ப்பாணம்,டிசெ 18

திருகோணமலை உதைபந்தாட்ட லீக் தமது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தி வரும் 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை மக்கெய்சர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் ஒலிம்பிக்ஸ், பிக்வூட் ஆகிய அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற ஆட்டத்தில் கிறின்லைட் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக் கழகஅணி மோதிக் கொண்டது. இதில் ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக்கழக அணி 9:2 என்ற கோல் கணக்கில் அபார வெற்றியீட்டியது.

மாலை இடம்பெற்ற ஆட்டத்தில் ஜமாலியா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பிக்வூட் விளையாட்டுக்கழக அணி களமிறங்கியது.

இதில் இறுதிவரை போராடிய பிக்வூட் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் ஜமாலியா அணியை வீழ்த்தி வாகைசூடியது. (ந-23)

## அரையிறுதியில் ஹென்றிஸ்

யாழ்ப்பாணம்,டிசெ.19

பருத்தித்துறை லீக்கின் அனுமதியுடன் ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் 9 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற மூன்றாவது காலிறுதியாட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டி அரையிறுதி ஆட்டத்துக்கு தகுதிபெற்றது.

இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணிக்கும், அண்ணா சிலையடி விளையாட்டுக் கழகத்துக்கும் இடையில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் இளவாலை யங்ஹென்றிஸ் அணி 3:0 [illegible] வெற்றி [illegible] (ந-23)



யாழ்.உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்திய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் சிறந்த வீரர் மற்றும் அதிக கோல்களை அடித்த வீரர் ஆகிய விருதுகளை வென்ற நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த [illegible]லனுக்கு , ஜனசக்திக் காப்புறுதி நிறுவனத்தின் (ஆயுள்) பிராந்திய முகாமையாளர் தேசமானிய இ.ஆனல்ட் விருது வழங்கிக் கௌரவிக்கிறார்.(ந-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸி.யில் அசிங்கம்



ஆஸ்திரேலியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணிக்கும், ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான 3 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தில் இலங்கை அணி தோல்வியடைந்துள்ளது. இலங்கை அணி போராட்டத்தை வெளிப்படுத்திய போதிலும், இறுதியில் தோல்வியைச் சந்தித்தது.

ஹோபார்ட்டில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்திருந்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 5 இலக்குகளை இழந்து 450 ஓட்டங்களைப் பெற்று தனது இன்னிங்ஸை இடைநிறுத்தியது.

துடுப்பாட்டத்தில் ஆஸ்திரேலிய அணி சார்பில் மைக்கல் கிளார்க் ஆட்டமிழக்காமல் 115 ஓட்டங்களையும், பிலிப் ஹியுஸ் 86 ஓட்டங்களையும், மைக்கல் கிளார்க் 74 ஓட்டங்களையும், மத்தியு வேட் ஆட்டமிழக்காமல் 68 ஓட்டங்களையும், டேவிட் வோணர் 57 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர். இலங்கை அணி சார்பாக சானக வெலகெதர 3 இலக்குகளையும், ஷமின்ட எரங்க ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இதன் பின்னர் தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி திலகரட்ண டில்ஷானின் 147 ஓட்டங்கள், அன்ஜலோ மத்தியுஸின் 75 ஓட்டங்கள், பிரசன்ன ஜெயவர்தனவின் 40 ஓட்டங்களின் துணையோடு 336 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக பீற்றர் சிடில் 5 இலக்குகளையும், நதன் லயன் 2 இலக்குகளையும் கைப்பற்றியிருந்தனர்.

தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 278 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்திருந்தது.

அவ்வணி சார்பாக டேவிட் வோணர், மைக்கல் கிளார்க், எட் கோவன் ஆகியோர் அரைச்சதங்களைப் பெற்றுக் கொண்டனர். பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக ரங்கன ஹேரத் 5 இலக்குகளையும், சானக வெலகெதர 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

393 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 119.2 பந்துப் பரிமாற்றங்களில் 255 ஓட்டங்களைப் பெற்று சகல இலக்குகளையும் இழந்து 137 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இலங்கை அணி மேலதிகமாக 10.4 பந்துப் பரிமாற்றங்கள் துடுப்பெடுத்தாடியிருந்தால் ஆட்டத்தை சமநிலையில் முடித்திருக்கலாம்.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக குமார் சங்ககார 63 ஓட்டங்களையும், திலான் சமரவீர 49 ஓட்டங்களையும், திமுத் கருணாரத்ன 30 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக மிற்சல் ஸ்ரார்க் 5 இலக்குகளையும், பீற்றர் சிடில் 4 இலக்குகளையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக ஆஸ்திரேலிய அணியின் பீற்றர் சிடில் தெரிவானார்.

(5)



# டெஸ்ட் அணித் தலைவராக ஹோக்லி?



இந்திய டெஸ்ட் அணியின் தலைவராக மகேந்திரசிங் டோனிக்குப் பதிலாக இளம் துடுப்பாட்ட வீரர் விராத் ஹோக்லி நியமிக்கப்பட வேண்டும் என்று இந்திய அணியின் முன்னாள் தலைவர் சுனில் கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக இந்திய அணி டெஸ்ட் போட்டியில் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தியிருக்காததோடு, அணியின் தலைவரான மகேந்திரசிங் டோனி - டெஸ்ட் போட்டியில் சிறப்பாகச் செயற்பட்டிருக்கவில்லை.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள சுனில் கவாஸ்கர், நாக்பூர் டெஸ்ட் ஆட்டத்தின் நான்காம் நாள் வரை டோனி அணித்தலைவராகத் தொடர்ந்தும் செயற்பட தனது ஆதரவை வழங்கியிருப்பார் எனவும், ஆனால் நாக்பூர் ஆட்டத்தில் விராத் ஹோக்லியின் சிறப்பான சதம் காரணமாக விராத் ஹோக்லிக்குத் தனது ஆதரவை வழங்குவதாகத் தெரிவித்தார்.

ஆக்ரோஷமான ஆட்டத்துக்குப் பெயர் போன விராத் ஹோக்லி, 295 பந்துகளில் 103 ஓட்டங்களைப் பெற்று இந்திய அணி அந்த ஆட்டத்தை வெற்றி தோல்வியற்ற முடிவைப் பெறுவதற்கான காரணங்களில் ஒன்றாக அமைந்தார்.

தனது வழக்கமான வகையான ஆட்டத்துக்குப் பதிலாகப் பொறுமையாக ஆடி விராத் தன்னை வெளிப்படுத்தியுள்ளதாகத் தெரிவித்த சுனில் கவாஸ்கர், அவர் டெஸ்ட் தலைமைத்துவத்திற்குத் தயாராகியுள்ளதாகத் தான் கருதுவதாகவும் தெரிவித்துள்ளார்.

(5)

# பீற்றர்சிடில் சேதப்படுத்தினார்

ஆஸ்திரேலியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணிக்கும், ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் போது ஆஸ்திரேலிய அணியின் வேகப் பந்து வீச்சாளர் பீற்றர் சிடில் பந்தைச் சேதப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இலங்கை அணியின் முதலாவது இன்னிங்ஸின் போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கை அணி 5 இலக்குகளை இழந்து 248 ஓட்டங்களுடன் காணப்படும் போதே இது இடம் பெற்றுள்ளது.

ஆட்டத்தின் போது ஒளிபரப்பான காட்சிகளின் அடிப்படையில் பந்தினை பீற்றர் சிடில் தனது நகத்தைப் பயன்படுத்தி சேதப்படுத்துவது போன்று காணப்பட்டது. கிரிக்கெட் விதிகளின் படி இது தவறுாகும்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த இலங்கைக் கிரிக்கெட் அணியின் முகாமையாளர் சரித் சேனநாயக்க, அதுகுறித்த வீடியோ காட்சி தங்களிடம் காணப்படுவதாகவும், அனைவரும் அதைப் பார்வையிட முடியும் எனவும் தெரிவித்தார். அத்தோடு இது குறித்துப் போட்டி மத்தியஸ்தரிடம் அவர் உத்தியோகபூர்வமற்ற முறையில் முறையிட்டுள்ளார்.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபை, பந்தைச் சேதப்படுத்தியதாகத் தெரிவிக்கப்படும் ஊடக அறிக்கைகள் குறித்து போட்டி மத்தியஸ்தர் கிறிஸ் ப்ரோட் அறிவார் எனத் தெரிவித்துள்ளது. அத்தோடு இவ்விடயம் தொடர்பாக இலங்கைகிரிக்கெட் அணி இதுவரை உத்தியோகபூர்வ முறைப்பாட்டை மேற்கொள்ளவில்லை எனத் தெரிவித்துள்ளது.

மறுப்பு

பீற்றர் சிடில் பந்தைச் சேதப்படுத்தியமைக்கான ஆதாரங்கள் எவையும் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை என்று சர்வதேசக் கிரிக்கெட் சபையின் போட்டி மத்தியஸ்தர் கிறிஸ் ப்ரோட் தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக ஆராயப்பட்டதாகவும், பந்து சேதப்பட்டது என்பதற்கான ஆதாரங்கள் எவையும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை எனவும், அதன் காரணமாக இந்தக் குற்றச்சாட்டுக்களிலிருந்து பீற்றர் சிடில் விடுவிக்கப்படுவதாகவும் அறிவித்துள்ளார்.

நிறைவடைந்த முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் பீற்றர் சிடில் 9 இலக்குகளைக் கைப்பற்றி ஆட்டநாயகனாகத் தெரிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)



# சேவாக் சோம்பேறி

இந்திய அணியின் தொடக்க வீரரான வீரேந்திர சேவாக்கின் சோம்பேறித்தனமான களத்தடுப்பு கடும் விமர்சனத்திற்குள்ளானது.

நேற்றைய கடைசி நாள் ஆட்டத்தின் போது பெல் கொடுத்த பிடியெடுப்பை 'ஸ்லிப்பில்' கோட்டைவிட்டார். சேவாக், நேற்று முன்தினமும் இவ்வாறு பிடியெடுப்பை தவறவிட்டிருந்தார்.

இதனையடுத்து சுனில் கவாஸ்கர் அவரது சோம்பேறித் தனமான அணுகுமுறையை சாடியுள்ளார். இது குறித்து அவர் கூறுகையில், கெவின் பீட்டர்சன் 2 ஓட்டங்களில் இருந்தபோது ஜடேஜா பந்தை பீட்டர்சன் எட்ஜ் செய்தார், பந்து 'ஸ்லிப்' திசைக்கு தாழ்வாக சென்றது. அவர் குனிந்திருந்தால் அது பிடியெடுப்பு. ஆனால் அவர் குனியவில்லை.

நேற்று சற்று முன்பு அவர் சாவ்லா பந்தை பெல் கட் செய்ய முயல அது நேராக அவரது மார்பளவு உயரத்திற்குச் சென்றது. ஆனால் அவர் கையை எடுத்துக் கொள்வதில் கவனம் செலுத்தியதால் பந்து கோட்டைவிடப்பட்டது.

இது அநியாயம், சேவாக் குனியவில்லை. டெஸ்ட் கிரிக்கெட்டில் எப்போதும் சுழற்பந்து வீச்சாளர்கள் வீசும்போது முட்டிக்கு மேல்தான் பிடியெடுப்பு வரும் என்று எதிர்பார்ப்பதா? பிடியெடுப்புக்கள் எப்போதும் சுழற்பந்து வீச்சாளர்கள் வீசும்போது முட்டிக்கால் அளவு அல்லது அதற்குக் கீழ்தான் வரும் என்றார்.

அவர் நிற்கும் விதம் மூலம் இந்திய அணிக்கு ஒரு நன்மையையும் ஏற்பட்டு விடவில்லை எனவும் கூறியுள்ளார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஷஷ் அழுத்தம் போன்றிருந்தது



இந்தியாவுக்கெதிரான டெஸ்ட் தொடரை 2-1 என்ற கணக்கில் வெற்றி கொண்ட இங்கிலாந்து அணியின் தலைவர் அலஸ்ரெயர் குக், இந்தத் தொடரில் காணப்பட்ட அழுத்தம், ஆஸ்திரேலியாவில் இடம்பெறும் ஆஷஷ் தொடர் (வெளிநாட்டு ஆஷஷ்) போன்ற அழுத்தத்தை வழங்கியதாகத் தெரிவித்துள்ளார்.


இந்தத் தொடரின் முதலாவது ஆட்டத்தில் தோல்வியடைந்த இங்கிலாந்து அணி, அடுத்த 2 போட்டியிலும் வெற்றி பெற்றதோடு, நான்காவது ஆட்டத்தில் வெற்றி தோல்வியற்ற முடிவைப் பெற்று 2-1 என்ற கணக்கிலான தொடர் வெற்றியைப் பெற்றது.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்த அவர், அஹமதாபாத் ஆட்டத்தின் முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி சிறப்பாகத் துடுப்பெடுத்தாடியிருக்காத போதிலும், இரண்டாவது இன்னிங்ஸில் போராடியிருந்தமை முக்கியமானது எனவும், அந்த இன்னிங்ஸ் மூலம் பெறப்பட்ட தன்னம்பிக்கையை இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் இடம்பெற்ற மும்பை ஆட்டத்துக்கு எடுத்துச் செல்ல முடிந்ததாகத் தெரிவித்தார்.

முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் பின்னர் தங்களால் துடுப்பெடுத்தாட முடியும் எனத் தாங்கள் வெளிப்படுத்தியிருந்ததைப் போன்று தங்கள் அணியின் பந்துவீச்சாளர்களும் மிகச்சிறப்பாகச் செயற்பட்டிருந்ததாகத் தெரிவித்தார்.

பனஷார் இரண்டாவது ஆட்டத்தில் அணியில் இணைந்து மிகச்சிறப்பாகப் பந்துவீசியிருந்ததாகத் தெரிவித்த குக், கிரேம் சுவான், ஜேம்ஸ் அண்டர்சன் ஆகியோர் மிகச்சிறப்பான திறமையை வெளிப்படுத்தியிருந்ததாகத் தெரிவித்தார். (ஙு-5)

# எங்கே செல்லும் இந்தப் பாதை



டெஸ்ட் போட்டி மீதான ஆர்வம் இந்திய வீரர்களுக்கு எள்ளளவும் இல்லை. பணம் கொழிக்கும் ஐ.பி.எல்., தொடருக்கு தான் முக்கியத்துவம் அளிக்கின்றனர். அணித் தலைவர் பதவியை பிடிக்க மோதல், அணியில் ஒற்றுமையின்மை, தவறான வீரர்கள் தேர்வு போன்றவை அணியின் வீழ்ச்சிக்கு வித்திட்டது. இவ்வாறு இந்திய அணியின் தோல்வியை இந்திய ஊடகங்கள் கடுமையாகச் சாடியுள்ளன.

பாரம்பரியமிக்க டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா போன்ற அணிகள் ஆதிக்கம் செலுத்துகின்றன. ஆனால், இந்திய அணியால் மட்டும் தொடர்ந்து சிறப்பாக செயல்பட முடிவதில்லை. முன்பு வெளிநாடுகளில் தோல்வி அடைவது வாடிக்கையாக இருந்தது. தற்போது சொந்த மண்ணில் இங்கிலாந்திடம் வீழ்ந்தது ரசிகர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கு ஐ.பி.எல்., 'ரி-20' தொடர் முக்கிய காரணம். இதன் மூலம் கோடிகள் கிடைப்பதால், கிரிக்கெட் வீரர்கள் பகட்டான வாழ்க்கைக்கு மாறிவிட்டனர். ஒரு டெஸ்டில் விளையாடினால் ஒரு வீரருக்கு ரூ.7 லட்சம் தான் சம்பளம் கிடைக்கும். தவிர, 5 நாட்கள் களத்தில் கடுமையாக பாடுபடவேண்டும். இத்தகைய சிரமங்களை தற்போதைய வீரர்கள் எதிர்கொள்ள தயாராக இல்லை.

டெஸ்ட் போட்டியில் டோனியிடம் இருந்து தலைமைப் பதவியை பிடிக்க கம்பீர், சேவாக் முயற்சிக்கின்றனர். இப்படி பதவி போட்டி அதிகரித்தது, அணியின் நலனை பெரிதும் பாதித்தது. இது வீரர்கள் இடையே ஒற்றுமையின்மையை ஏற்படுத்தியது.

இந்திய தேர்வுக்குழுவினரும் தைரியம் இல்லாதவர்களாக உள்ளனர். பழம்பெருமைக்கு முக்கியத்துவம் அளித்து விளையாடாத வீரர்களுக்கும் தொடர்ந்து வாய்ப்பு அளிக்கின்றனர். உதாரணமாக இங்கிலாந்துக்கு எதிரான தற்போதைய நான்கு டெஸ்டில் சச்சின் சராசரியாக 18.66 ஓட்டங்கள் தான் எடுத்தார். ஆனாலும், இவருக்கு தொடர்ந்து வாய்ப்பு அளிக்கப்பட்டது.

டெஸ்ட் போட்டிக்கு எழுச்சி அளிக்கும் வகையில் அதிரடி நடவடிக்கைகளை இந்திய கிரிக்கெட் சபை விரைவில் மேற்கொள்ள வேண்டும். அப்போது தான் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக அடுத்து நடக்க உள்ள தொடரிலாவது சாதிக்க முடியும் என்று அந்த ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (5)


புதிய முகவரி
ஹரன் ஜுவல்லர்ஸ்
நகை - வைர வியாபாரிகள்
இல: 217, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021-2226083, 0714182480

கணினி திருத்தம் Computer Repair
உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்கள் வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம். அழையுங்கள் -0779086737
GUNAA BEST PC 52, HOSPITAL ROAD, JAFFNA.

வெளிவந்து விட்டது
இலங்கையின் பிரபல ஆசிரியர்
ஏ.எஸ்.ஜௌபர் அவர்களின்
தரம் 1 முதல் 5வரையான
*சுற்றாடல் *கணிதப் புதிர்(தரம் 5)
*தமிழ் *பூங்கா(தரம்4, 5)
*பரீட்சை வழிகாட்டி *அறிவுச் சாகரம்
*மொழி வளம்(தரம்4,5)
*மொழிப்பேழை(தரம்4,5)
*சுற்றாடல் சுகந்தம்(தரம்4,5)
இவை அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள அன்னை புத்தக சாலையை நாடுங்கள்
இஸ்லாமிக் புக் ஹவுஸ், கொழும்பு-09

தேவை
இயங்கிக்கொண்டிருக்கும் மருந்தகம் ஒன்றிற்கு மருந்தக உதவியாளர் தேவை.
(ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது).
தொடர்பு:- 0777526066
(26862)(2)

Sky Computers (Pvt) Ltd
TP: 021-222-1417 162, Main Street, Jaffna.
சிங்கள வகுப்பு
பிரபல ஆசிரியர் A.K. Moorthy
புதிய பிரிவு ஆரம்பம்
21.12.2012 - 3.30 - 4.30
(திங்கள், வெள்ளி)
அடிப்படையிலிருந்து சிங்களம் கற்பிக்கப்படும்.

சிங்கப்பூர், மலேசியா
Student visa
மாதாந்த வேதனத்துடன்
திசைகாட்டி பிறைவேற் லிமிட்
175,பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
0212219016
(26900)(45.6.7)

பிலாறஸ், நாட்டில் மருத்துவம், பொறியியல்
A/L- 3S போதுமானது இலங்கையில் அங்கீகாரம்
திசைகாட்டி பிறைவேற் லிமிட்
175,பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
0212219016
(26899)(45.6.7)

ஆள்சேர்ப்பு
திசைகாட்டி குழுமத்தின் 'முத்துமணி காமன்ஸ்' நிறுவனத்துக்கு தையல்மெசின் இயக்குநர் (பயிலுநர்)சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர், பொருளாதார வசதி குறைந்த, ஓரளவு தையல் தெரிந்த 18-45 வயதுக்குட்பட்ட பெண்கள் விண்ணப்பிக்கவும்
யாழ்ப்பாணத்தில் வைத்தே பயிற்சியளிக்கப்படும். எமது பிரதேச சமூக விழுமியங்கள் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படும்.
தொடர்பு: முகாமையாளர்,
முத்துமணி காமன்ஸ்
175,பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 077 8418 344
(26923)(45.6.7)

HOTEL NOKIYA
நா சுவைத்திட மனம் நிறைவடைய மனம் மகிழ்ந்திட
HOTEL NOKIYA வின்
இன்றைய SPECIAL
இந்தியன் புரியாணி
With ரைத்தா ஒனியன் செலட்
சூப் free>
அனைத்து வகை ஸ்பெஷல் கொத்து
உங்களின் தேவைக்கேற்ப அலுவலகம், தொழிலகம், இல்லங்கள், வர்த்தக நிலையங்கள் போன்ற இடங்களுக்கு விநியோகம் செய்யப்படும்.
இல-110, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(26883)(9.14) தொடர்பு- 0779258957

இந்திய சாஸ்திரியார் வருகை
யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்
ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
S.N. குமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா?வெளிநாடு செல்லத் தடையா?, மனஉளைச்சலா ?
எந்தப்பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்
(காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை)
பீப்பிள்ஸ் இன் (PEOPLE INN)
இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)
T.P: 072 6816681, 0726816691
(20772)(15-14)

Ranjanas CERAMIC
சர்வதேச தரத்தில்...
சாதாரண விலையில்...
X-MAS
வருட இறுதி விற்பனைத் தள்ளுபடி
Sale
Don't think just buy
SPECIAL OFFER
The metro engineering (pvt) ltd
# 212, Palaly Road, Jaffna. 021 222 0033 / 021 222 0044
#05,Stanley Road, Jaffna. 021 222 4777/021 222 4888
#05A, Kodikamam Road, Nelliyadi. 021 226 2000 /021 226 3111

லக்ஸ்மி காகிதாதிகளின் மாணவச் செல்வங்களுக்கான மாபெரும் மலிவு விற்பனை
2013ஆம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் மாணவ மணிகளுக்கு
*அப்பியாசக் கொப்பிகள் *எழுது கருவிகள் *கவரிடும் வர்ணக் கவர்கள் *பயிற்சி புத்தகங்கள் *நத்தார் புதுவருட கொண்டாட்டத்துக்கான அலங்காரப் பொருள்கள் *மங்களகரமான நிகழ்வுகளுக்கான றெஜிபோம் கட்டிங் எழுத்துக்களையும் மிக மலிவான முறையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
2013ஆம் ஆண்டிற்கான கலண்டர்கள், டயரிகள்
இல 02, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொடர்பு- 021 2224375


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.12.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

வாழ்க்கையில்
எதிரிகளே இல்லாமல்
இருப்பவன்...
வாழ்வை முழுதாக
வாழவில்லை
என்றுதான் அர்த்தம்.
-சேகுவேரா

# புதன் பொய்கை A

உதயன் டிசெம்பர் 19 2012 புதன்கிழமை பக்கங்கள்: நான்கு


*சண்டேலீடர் ஆங்கில வாரஇதழில் நிரஞ்சல்லா ஆரியசிங்கவும், கிரிசாந்தி கிறிஸ்தோப்பரும் இணைந்து எழுதியுள்ள செய்திக்கட்டுரையின் தமிழாக்கம்.*

# தமிழர் மனங்களை அபகரிக்க முடியாது

**வடக்கில் வாழும் தமிழ் மக்களின் நிலங்களை இலங்கை இராணுவத்தைப் பயன்படுத்தி இலங்கை அரசு அபகரிப்புச் செய்யலாம். ஆனால் இந்த வழியில் தமிழர் மனங்களை ஒருபோதும் அபகரித்துவிட முடியாது.**

இலங்கை உள்நாட்டுப் போர் முடிவடைந்து மூன்று ஆண்டுகளும் ஏழு மாதங்களும் கடந்த நிலையிலும் கூட, வடக்கு கிழக்கில் வாழும் பல ஆயிரக் கணக்கான மக்கள் தமது சொந்த இடங்களுக்கு இன்னமும் திரும்பிச் செல்லமுடியாத நிலையில் வாழ்வதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் அழுத்தம் கொடுத்துள்ளது.

யாழ். குடாநாட்டைச் சேர்ந்த 84,000 மக்களும், திருகோணமலையின் சம்பூர் பிரதேசத்தைச் சேர்ந்த 6000 மக்களும் தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்ல முடியாது தொடர்ந்தும் இடம்பெயர்ந்து வாழ்வதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இவர்கள் தவிர, இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்றவர்களில் 150,000 பேர் இன்னமும் அங்குள்ள அகதி முகாம்களில் வாழ்வதாகவும், இவர்கள் இலங்கைக்கு திரும்பி வருவதில் விருப்பங் கொண்டிருந்தாலும் கூட, அடிப்படை வசதிகளைக் கூட நிறைவேற்ற முடியாத வெற்றுக் காணிகளில் இவர்கள் குடியமர்த்தப்படுவதற்கான அனுமதி கூட மறுக்கப்பட்டுள்ள நிலையில் தொடர்ந்தும் இந்திய அகதி முகாம்களில் வாழ்வதாகவும் சுமந்திரன் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இடம்பெயர்ந்த மக்கள் என்று எவரும் இல்லை என இலங்கை அரசு தொடர்ந்தும் அறிவிக்கின்றது. கடந்த ஒக்ரோபரில் இறுதியாக இருந்த இடம் பெயர்ந்தோர் முகாமும் மூடப்பட்டு விட்டதாகவும், வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் மிகப் பாதுகாப்பாக மீள்குடியமர்த்தப்பட்டதாகவும் இந்நாட்டு அரசு தெரிவித்திருந்தது.

ஆனால் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டு சிலவாரங்களில் இந்த 'மீள்குடியமர்வு' தொடர்பான உண்மை என்ன என்பதை ஊடகங்கள் வெளியிடத் தொடங்கின.

கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட மீள்குடியமர்வு விடயம் முற்றுமுழுதாக பூர்த்தியாக்கப்பட்டு விட்டதாக கடந்த மாதம் ஜெனிவாவில் இடம்பெற்ற பூகோள கால மீளாய்வுக் கூட்டத்தில் இலங்கை அரசு உறுதிப்படுத்த வேண்டியிருந்தது.

இதற்காகவே தனது நாட்டில் எந்தவொரு இடம்பெயர்ந்தவர்களும் இல்லை எனவும், அனைத்து மக்களும் மீள்குடியமர்த்தப்பட்டுவிட்டதாகவும் பொய்யான பரப்புரையை மேற்கொண்டிருந்தது.

இதன் காரணமாகவே மெனிக் பாம் முகாமில் இறுதியாக எஞ்சியிருந்த 6000 வரையான மக்களை சீனியாமோட்டை என்கின்ற காட்டுப் பகுதியில் அவசர அவசரமாக குடியேற்றியது. இதன் மூலம் அனைத்துலக சமூகத்தை நம்பவைக்க முடியும் என இலங்கை அரசு கருதியது.

அனைத்துலக சமூகத்தைத் திருப்திப்படுத்துவதற்காக இலங்கை அரசு அவசர அவசரமாக மெனிக்பாம் முகாமை மூடிவிட்டு, அங்கிருந்த மக்களை சீனியாமோட்டை என்ற காட்டுப் பகுதியில் குடியேற்றியதாக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

"இந்த மக்கள் தாம் தற்போது தங்கியிருக்கும் சீனியாமோட்டை காட்டுப் பகுதியில் இருந்து ஒரு கிலோமீற்றருக்கும் குறைவான தூரத்திலுள்ள தமது சொந்தக் காணிகளில் எப்போது மீள்குடியேற்றப்படுவோம் என காத்திருக்கின்றனர். போரின் விளைவால் உடல், உளரீதியாகப் பாதிக்கப்பட்ட இந்த மக்கள் தொடர்ந்தும் பல்வேறு துன்பங்களைச் சந்திக்க வேண்டிய நிலையில் வாழ்கின்றனர். மீள்குடியேற்றம் என்பது வெறுங் காடுகளில் இறக்கிவிடுவதைக் குறிக்கின்றதா?" எனவும் சுமந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

"வடக்கில் எந்தவொரு இடம்பெயர்ந்தோர் முகாம்களும் காணப்படவில்லை என்பது இலங்கை அரசின் வாதமாகும். ஆனால் யாழ்ப்பாணத்தில் தற்காலிக இடைத் தங்கல் முகாம்களும், நலன்புரி நிலையங்களும் காணப்படுகின்றன. இவற்றை இலங்கை அரசு 1996 ஆம் ஆண்டில் இருந்து நிர்வகித்து வருகிறது. இவ்வாறு இடம்பெயர்ந்த மக்கள் இந்த முகாம்களில் வாழ்கின்றனர்" எனவும் சுமந்திரன் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

"இலங்கையின் வடக்கில் மீள்குடியமர்வு நடவடிக்கை முடிவடைந்து விட்டதாக அரசு அறிவித்துள்ளது. ஆனால் இது முற்றிலும் பொய்யான தகவலாகும். யாழ்ப்பாணத்தில் 26 ஆண்டுகால பழமை வாய்ந்த 11 நலன்புரி நிலையங்கள் காணப்படுகின்றன. இந்த முகாம்களில் தற்போது நூறாயிரம் மக்கள் வரை வாழ்கின்றனர். இவற்றை இலங்கை அரசாங்கமே நிர்வகிக்கின்றது.

ஆனால்இவற்றை அரசு வெளியில் தெரிவிக்கவில்லை. 'மீள்குடியேற்றப்பட்ட' மக்கள் பலர் இன்னமும் தமது உறவுகளதும், நண்பர்களதும் வீடுகளில் வாழ்கின்றனர். இவர்கள் ஒன்றுக்கும் பயன்படாத வெற்றுக் காணிகளில் வாழ்வதற்கான அனுமதி கூட வழங்கப்படாத நிலையில் இவ்வாறு வாழ்கின்றனர்" என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிறிதொரு நாடாளுமன்ற உறுப்பினரான சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

காலத்திற்கு காலம் அரசு இடம்பெயர்ந்தோர் முகாம்களின் பெயர்களை மாற்றுவதன் மூலம் வெளியுலகில் இவ்வாறான எதுவும் இல்லை என்பதை நம்ப வைக்க முயல்வதாகவும் சுரேஷ் பிறேமச்சந்திரன் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

"யாழ்ப்பாணத்தில் 24 கிராம சேவையாளர் பிரிவில் மக்கள் குடியமர்த்தப்படவில்லை. இவற்றைஇராணுவம் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. இங்கு மக்கள் குடியேற அனுமதிக்கப்படவில்லை. இந்தக் கிராமசேவைப் பிரிவுகள் இராணுவத்தால், அல்லது அரசுடன் தொடர்புடையவர்களாலோ நிர்வகிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் இத்தகைய பிரச்சினை நிலவுகிறது. ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து நிர்க்கதியான நிலையில் உள்ளபோதிலும், இவர்கள் தமக்கான வாழ்விடத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது துன்பப்படுகின்றனர்" எனவும் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியிலுள்ள பரவிப்பாஞ்சன் எனும் கிராமத்தில் முன்னர் விடுதலைப் புலிகளின் அரசியல் செயலகம் காணப்பட்டது. பொதுமக்கள் இங்கு செல்வதற்கான அனுமதி இன்னமும் வழங்கப்படவில்லை. விடுதலைப்புலிகளின் முகாமுக்குப் பதிலாக தற்போது இராணுவ முகாம் காணப்படுகிறது. இதனால் மீண்டும் மக்கள் அங்கு வாழமுடியாத நிலையிலுள்ளனர்.

மன்னாரிலுள்ள முள்ளிக்குளம் கிராமத்தில் 100 வரையான மீனவ மற்றும் விவசாயக் குடும்பங்கள் வாழ்ந்தனர். ஆனால் தற்போது இராணுவத்தினர் இந்தக் கிராமம் முழுவதையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளனர். இந்த மக்களை வேறிடங்களில் குடியேறுமாறு இராணுவத்தினர் பணித்தனர்.

இந்தநிலையில் தற்போது இந்த மக்கள் குடியேற்றப்பட்ட இடத்தில் தமது பாரம்பரிய வாழ்வாதாரத் தொழில்களை மேற்கொள்ள முடியாதுள்ளதாகவும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இடம்பெயர்ந்த 200,000 மக்களும் மீள்குடியமர்த்தப்பட்டதாக அரசு அறிவித்துள்ள போதிலும், இந்தப் புள்ளி விவரத்தின் உண்மைத்தன்மை தொடர்பில் சந்தேகம் நிலவுவதாக சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

"இந்தப் புள்ளிவிவரங்களை அரசு தயாரிக்கின்றது. இதனால் இவற்றை நாம் முற்றுமுழுதாக நம்ப முடியாது. எந்தவொரு இடத்திலும், எந்தவொரு புள்ளி விவரத்தையும் நூறு வீதம் தயாரித்துக் கொள்ள முடியாது. சிறிலங்காவில் மீள்குடியேற்ற அமைச்சு உள்ளபோதிலும், மக்களின்மீள்குடியேற்றத்தை சிறிலங்கா இராணுவத்தினரே மேற்கொள்கின்றனர்" என சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

எது எவ்வாறிருப்பினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் முன்வைக்கப்பட்ட இக்குற்றச்சாட்டை இராணுவத்தின் ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் றுவான் வணிகசூரிய மறுத்துள்ளார்.

"நாங்கள் மீள்குடியமர்வை மேற்கொள்வதாக த.தே.கூ. கருதுகிறது. மீள்குடியமர்வு மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலர்களாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. இந்நடவடிக்கையில் எமது உதவியையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கோருமிடத்தே நாங்கள் இவ்வாறான செயற்பாடுகளில் தலையீடு செய்கிறோம்" என பிரிகேடியர் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

இதேவேளையில், 1996 இல் பலாலி விமானப் படை முகாம் அமைக்கப்பட்டுள்ள காணிகளுக்குச் சொந்தமான 84,000 மக்கள் தமது சொந்த இடங்களிலிருந்து துரத்தப்பட்டனர். இவர்கள் சார்பாக 2003 இல் சுமந்திரன் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் ஒன்றைச் செய்திருந்தார்.

நீதிமன்றக் கட்டளையின் படி, இந்த நிலங்களுக்குச் சொந்தக்காரர்கள் சிலர் படிப்படியாக அவர்களது இடங்களுக்கு திரும்பிச் செல்ல முடியும் என அறிவிக்கப்பட்டது. ஆனால் இன்னமும் இந்தப் பகுதியைச் சேர்ந்த 28,270 வரையான குடும்பங்கள் தமது சொந்தக் காணிகளுக்குச் செல்லமுடியாது வாழ்கின்றனர்.

"நீதிமன்றில் அரசால் வழங்கப்பட்ட பலாலி விமானப் படை முகாம் அமைந்துள்ள காணிகளின் உரிமையாளர்கள் தொடர்பான விவரம் சரியாகக் காணப்பட்டது. ஆனால் இந்தக் காணிகளில் இராணுவத் தளம் ஒன்று அமைக்கப்பட உள்ளதாக அரசு தெரிவித்திருந்தது. இது போன்ற தனியாருக்குச் சொந்தமான ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களை அரசு எவ்வாறு சுவீகரிக்க முடியும்?" எனவும் சுமந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

"பலாலியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு 33 மில்லியன் ரூபாய்களைச் செலவிடவுள்ளதாக அரசு அந்த நேரத்தில் அறிவித்திருந்தது. இவ்வாறான பெருந்தொகை நிதியை அரசு ஏன் செலவிட வேண்டும்?இந்த மக்கள் அவர்கள் சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்வதை அனுமதித்திருந்தால் சிறிலங்கா அரசாங்கம் 33 மில்லியன் ரூபாய்களை சேமித்திருக்க முடியாதா?" எனவும் சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

"இவ்வாண்டு ஜனவரி மாதத்தில் இருந்து இராணுவத்தால் பலாலி விமானப்படை முகாமைச் சுற்றி முள்வேலிகளை அமைக்கின்றது. இது தொடர்பாக நாம் சட்டமா அதிபரிடம் வினவிய போது இது தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது எனக் கூறினார்.

நாங்கள் இதன் ஒளிப்படங்களை அவரிடம் காண்பித்தோம். ஆனால் இதற்கான பதில் எமக்கு கிடைக்கவில்லை. பலாலி போன்று வடக்கு, கிழக்கில் பெருமளவான நிலங்களை இராணுவம் சுவீகரித்துள்ளது. இராணுவம் காணிகளைச் சுவீகரிக்கும் போது இது போன்று பொதுமக்களும் ஏன் காணிகளை சுவீகரிக்கக் கூடாது?" என நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மேலும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளையில், போரின் பாதிப்பால் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறி புத்தளம், கொழும்பு, அனுராதபுரம், பாணந்துறை போன்ற இடங்களில் வாழ்ந்த மக்களில் அண்மையில் தமது சொந்த இடங்களுக்கு திரும்பி அழிவடைந்த தமது நிலங்களில் தமக்கான புதுவாழ்வை ஆரம்பிப்பதில் பெரும் பிரயத்தனப்படுவதாக முஸ்லிம் காங்கிரசின் ஹசன் அலி குறிப்பிட்டுள்ளார்.

போர் முடிவடைந்து விட்டதாக அரசு அறிவித்த போதிலும், வடக்கு கிழக்கில் 150,000 இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளதன் காரணம் என்ன? யுத்தம் உண்மையில் முடிவடைந்திருந்தால் வடக்கில் வாழும் மூன்று பொதுமக்களுக்கு ஒரு இராணுவம் நிறுத்தப்பட்டுள்ளதன் காரணம் என்ன? இதுதொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் அழுத்தம் கொடுத்து வருகிறது.

அரசு தமிழ் மக்களின் பாதுகாப்பில் இவ்வளவு அக்கறை காட்டுவதன் இரகசியம் என்ன? சிங்கள மக்களுக்கு வழங்காத இவ்வாறானதொரு சலுகையை அரசு வடக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு மட்டும் காட்டுவதன் காரணம் என்ன?

"போர் ஆரம்பித்ததில் இருந்து மீள்குடியேற்றம் வரை அரசு தமிழ் மக்கள் விடயத்தில் மோசடியை மட்டுமே செய்கிறது" என யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த புவியியற் துறை பேராசிரியர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

"வடக்கில் வாழும் ஒவ்வொரு தமிழ் மகனும் காலையில் எழும்போது இராணுவத்தின் அல்லது அவனது துப்பாக்கியிலேயே விழிக்கின்றான்.

வடக்கில் வாழும் தமிழ் மக்களின் நிலங்களை இராணுவத்தைப் பயன்படுத்தி சிறிலங்கா அரசு அபகரிப்புச் செய்யலாம். ஆனால் இந்த வழியில் எமது மனங்களை ஒருபோதும் அரசு அபகரித்துவிட முடியாது" எனவும் பேராசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(நன்றி புதினப்பலகை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமர்ந்திருப்பதைக் குறைத்தால்

## ஆயுள் அதிகமாம்





அதிக நேரம் ஆசனத்தில் அமர்ந்திருந்து தொழில்புரிவதானது ஆயுள் குறை வடைவதற்கு காரணமாக அமையும் என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

வளர்ந்தவர்கள் ஒரு நாளில் அதிகபட்சமாக 3 மணித்தியாலங்கள் மாத்திரம் அமர்ந்திருந்தால் அவர்கள் மேலதிகமாக இரண்டு வருடங்கள் வாழ முடியும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

தொலைக்காட்சி பார்ப்பதும் இதேபோன்ற விளைவை ஏற்படுத்துவதாக ஆய்வாளர்களின் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

தொலைக்காட்சி பார்ப்பதைத் தினமும் இரண்டு மணித்தியாலங்களாக மாத்திரம் மட்டுப்படுத்துபவர்கள் ஏறத்தாழ ஒன்றரை வருடங்கள் மேலதிகமாக வாழமுடியும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

உடல் உழைப்பு குறைந்த வாழ்க்கை முறையானது, அதிக உடற் பருமன், உடற்திடமின்மை ஆகியவற்றுக்குக் காரணம் என்று நிபுணர்கள் நீண்டகாலமாக தெரிவித்து வந்துள்ளனர். இவ்விடயம் இதய நோய்கள், சர்க்கரை நோய் மற்றும் புற்றுநோய் என்பவற்றுடனும் தொடர்புள்ளதாகக் கருதப்படுகிறது. ஆசனத்தில் அமர்ந்திருக்கும் நேரத்தைக் குறைப்பதற்காக, தொலைபேசி உரையாடல்களை மேற்கொள்ளும்போது எழுந்து நிற்குமாறு மருத்துவ நிபுணரான டாக்டர் டேம் சாலி டேவிஸ், கடந்த வருடம் ஊழியர்களை அறிவுறுத்தியிருந்தார்.

வளர்ந்தவர்கள் அதிகமான நேரம் அமர்ந்திருப்பது அமெரிக்காவில் 27 வீதமான உயிரிழப்பு பகுதியளவில் காரணமாக உள்ளது என்று லூசியானா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் கண்டறிந்தனர். அதேபோன்று 19 வீதமான உயிரிழப்புக்கு அளவுக்கதிமாக தொலைக்காட்சி பார்ப்பது பகுதியளவில் காரணம் என க் கண்டறியப்பட்டது.

எமது இதயத்தைத் தொடர்ச்சியாக ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள வேண்டும். தொலைக்காட்சியை அதிகநேரம் பார்வையிடாமல் விளையாட்டுகளில் ஈடுபடுதல் போன்ற செயற்பாடுகள் உடலை சுறுசுறுப்புடன் இயக்குவதற்கான வழிமுறைகளாகக் காணப்படுகின்றன.

### 2012 இல் பிறந்த குழந்தைகளுக்கு

## ஆயுள் 100...!



2012 இல் பிறந்த குழந்தைகளுக்கு ஆயுள் 100

ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த முதலீட்டு நிறுவனம் ஒன்று நடத்திய ஆய்வில் 2012 இல் பிறந்த,பிறக்கும் குழந்தைகளில் மூன்றில் ஒரு பங்கினர் 100 வயது வரை வாழ்வார்கள் என்று தெரியவந்துள்ளது. அவர்கள் 70 வயது வரை வேலை செய்வார்கள் என்று அந்த ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

2012 ஆம் ஆண்டில் பிறந்த, பிறக்கும் குழந்தைகளில் 39 வீத பெண் குழந்தைகளும், 32 வீத ஆண் குழந்தைகளும் 100 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடுவார்களாம். அதாவது ஆண்களை விட அதிகமான பெண்கள் 100 வயதைத் தொடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.



### மாசடைந்த தொடுவில்லைகளால்

## கண்களுக்கு ஆபத்து



மாசடைந்த தொடுவில்லைகளால் கண்களுக்கு ஆபத்து

மாசடைந்த நீரில் காணப்படும் ஒரு வகை அமீபாவினால், தொடுவில்லை (லென்ஸ்) அணிபவர்களின் கண்களின் விழிவெண்படலத்துக்கு பாதிப்பு ஏற்படலாம் என்று விஞ்ஞானிகளால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தூசி, கடல் நீர், மழைநீர், நீச்சல் தடாகம் என்பவற்றில் காணப்படும் ஒருவகை அமீபாவினால், தொடுவில்லை அணியும் மில்லியன் கணக்கான மக்கள் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளனர் என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர். இந்தப் பாதிப்பானது சிறிதாக இருக்கலாம். ஆனால், அதற்கான மருத்துவ சிகிச்சைகள் வலிகள் மிகுந்ததாக இருக்கும். தொடுவில்லை அணிபவர்கள் இந்த ஆபத்தை எதிர்கொள்கிறனர் என்று மேற்கு ஸ்கொட்லாந்து பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பயோனா ஹென்ரிக்ஸ் தெரிவித்தார்.

அசுத்தமான தொடுவில்லைகள் மற்றும் அதற்கான பாதுகாப்பு பெட்டிகளிலிருந்தும் இந்த அமீபாவைக் காணக்கூடியதாக இருந்ததாக அபர்தீன் நகரில் நடைபெற்ற பிரிட்டன் விஞ்ஞான விழாவில் தெரிவிக்கப்பட்டது என்று பிரிட்டன் பத்திரிகையொன்று குறிப்பிட்டுள்ளது. இவ்வாறான தொடுவில்லைகளைக் கண்களில் அணியும்போது ஒருவகையான அமீபா விழிவெண்படலத்தின் வெளிப்புறத்திலிருந்து ஊடுருவ ஆரம்பிப்பதுடன் இனப்பெருக்கமும் செய்யும் என்று தெரிவிக்கப்பட்டது.

கண்களில் அரிப்பு ஏற்படுதல், கண்ணீர் வடிதல், பார்வை மங்கலடைதல், ஒளியில் கண்கூசுதல், மேல் கண்ணிமையில் வீக்கம், தீவிரமான வலி உணர்தல் போன்றவை இதற்கான அறிகுறிகளாகும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர். இதனால் பார்வை நிரந்தரமாக இழக்கப்படும் ஆபத்தும் ஏற்படலாம் என்று கண்மருத்துவரான கிறேம் ஸ்டீவன்ஸன் தெரிவித்தார்.

பிரிட்டனில் இத்தகைய பாதிப்பு ஏற்பட்டு பதிவுசெய்யப்பட்டவர்களில் 75 வீதமானோர் மருத்துவர்களால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றாதவர்களாக உள்ளனர் என்று அவர் கூறினார். அதிகமானவர்கள் தமது கண்தொடுவில்லை மற்றும் பாதுகாப்புப் பெட்டகங்களை வெளிக் குழாய் நீரில் கழுவுகின்றனர். இதன்போது நுண்ணுயிர்கள் இலகுவாக தொற்றிக்கொள்கின்றது. பின்பு இந்த தொடுவில்லைகளை அணியும்போது அவை கண்களுக்கு ஆபத்தை ஏற்படுத்துகின்றன. தொடுவில்லைகள் மற்றும் தொடுவில்லைகளுக்கான பாதுகாப்பு பெட்டகங்களைத் தினமும் தூய்மையாக வைத்திருப்பதனூடாக கிருமிகளிடமிருந்து [illegible] இருக்கும்போது கண்ணாடிகள், தொடுவில்லைகள் அணிந்திருப்பதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு பிரிட்டன் தொடுவில்லைகள் சங்கம் தெரிவித்துள்ளது. அவ்வாறு இல்லாது தொடுவில்லைகளை அணிந்திருந்ததால் குளிக்கும்போது கண்களை இறுக்கமாக மூடிக்கொள்ள வேண்டும் என்று குறித்த சங்கம் ஆலோசனை தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரச்சினையை கையாளத் தெரியவேண்டும்

நி.தர்ஷனோதயன்
வைத்திய அதிகாரி மாவட்ட ஆயுள்வேத
வைத்தியசாலை,மன்னார்

"நீ எதை நினைக்கிறாயோ அது வாகவே ஆகிறாய்" என்பது ஒரு பிரபலமான சொற்றொடர். நிச்சயமாக எல்லோருக்கும் தான் நன்றாக வாழ வேண்டும் என்பது தான் விருப்பமாக இருக்கும். ஆனால் அந்த நினைவு மட்டுமே உயர்வைத் தருமா? இது ஒரு வரியில் பதில் சொல்ல முடிகிற கேள்வி இல்லை. வீடு கட்ட அதுவும் உறுதியாகக் கட்ட நல்ல அத்திபாரம் தேவை தான். ஆனால் நல்ல அத்திபாரம் போட்டு விட்டதால் வீடு தானே எழும்பிவிடுமா என்ன?

அது நம் முயற்சிகளால் தான் உருவாகும் அது போலத் தான் இதுவும். உறுதியான அடித்தளம் போன்றது சாதகமான சிந்தனை. இதன் மேல் நம் வாழ்வை அமைத்துக் கொள்ளும் முயற்சி நம்முடையதாக இருந்தால் மாடமாளிகைகளும், கோபுரங்களும் கூட கட்டலாம்.

வாழ்வில் உயர்வதற்கு திட்டமிடுதல் மிகவும் அவசியம். உடனடி வாழ்க்கைக்குத் திட்டமிடுதல் நீண்ட கால வாழ்வுக்குத் திட்டமிடுதல் என்று இது இரண்டு பிரிவில் வரும். இவற்றைத் திட்டமிடுவதற்கு முன்பு நாம் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டியது ஒன்று உண்டு. நம் கடந்த காலத்தில் ஏதாவது தோல்விகளைச் சந்தித்திருந்தால் அதை வெறும் அனுபவ பாடமாக மட்டுமே ஏற்றுக் கொள்ளும் மனோபாவத்தை வளர்த்துக் கொள்ளுதல் முக்கியம்.

நேற்று நடந்ததை நினைத்து அழுது கால விரயம் செய்வதை விட இன்று அதுவும் இந்த நிமிடம் என்ன செய்கிறோம்; அது நம் உயர்வுக்கு வழி வகுக்குமா என்று யோசித்து செயலில் இறங்குவதுமேல்.

நேற்று நடந்துவிட்ட தவறை நினைத்து இன்றைய பொழுதையும் வீணாக்குவதுதான் அநேகர் செய்யும் தவறு. இன்றைய நம் ஊக்கம் நாளைய நம் தலைவிதியை நிர்ணயிப்பது. ராமனும் லட்சுமணனும் இரட்டையர். இருவருக்கும் திருமணமானது அண்ணனுக்கு ஐந்து பெண்கள் தம்பிக்கும் ஐந்து பெண்கள்.

ஐந்துமே பெண்ணாகப் பிறந்ததை நினைத்து நொந்து நொந்து போனார் ராமன். இந்தக் கவலையினாலேயே அவர் புறமோஷன் பாதித்து கிளாக்காகவே காலம் தள்ளி ஓய்வும் பெற்றார். பெண்களைப் படிக்க வைத்து ஆகப்போவது என்ன? நாளைக்கு வேறொரு வீட்டுக்குப் போகப் போகிறவள் தானே! என்கிற எண்ணத்தால் படிக்கவும் வைக்கவில்லை. ஐந்தும் பெண்ணாகப் பெற்றவள் என்று மனைவியை கரித்து கொட்டியதில் அவள் பேச்சும் அறிவுரைகளும் காதில் ஏறவில்லை. கல்யாண வயது வந்து கடந்தும் போனது. சரியான வரன்கள் அமையவில்லை. கல்வியும் இல்லை. செல்வமும் இல்லை என்றபோது அந்தப் பெண்கள் சீர்கெட்டுப் போனார்கள்.

ராமனின் தம்பி லட்சுமணனுக்கும் ஐந்து பெண்கள். ஆனால் அவர் பெண் குழந்தைகள் பிறக்கப் பிறக்க உத்வேகத்துடன் உழைத்து படிப்படியாக புறமோஷன் அடைந்து அலுவலக மேலாளர் ஆனார். தன் காலில் நிற்கும் தைரியம் தன் பெண்களுக்கு வேண்டும் என்பதற்காக நிறையப் படிக்க வைத்தார். நல்ல வேலைகளிலும் அவர்கள் அமர்ந்து விட குடும்பத்தில் எப்போதுமே குழப்பமில்லை.

இது ஏதோ கற்பனைக் கதை அல்ல. நாம் தினம் காண்பது தான். சகோதரர்களாக இருந்தாலும் இரு வேறுபட்ட கோணத்தில் சிந்தித்து இரு வேறு துருவங்களாக அவர்களை ஆக்கிவிட்டது.

இதே போல் தான் சில பெற்றோர் தம் குழந்தைகளை அவர்கள் மனநிலை புரியாமல் அல்லது அதைப் புரிந்து கொள்ள விரும்பாமல் தாம் விரும்பும் படிப்பில் தள்ளுவதும் இது புதை குழிக்கு ஒப்பாக சமயத்தில் மாறிவிடுகிறது.

அஸ்வத்தா என்றொரு பையன் நல்ல புத்திசாலி. ஆனால் கணக்கில் தான் 'வீக்' என்றொரு மாறாத எண்ணம் உள்ளவன். இது தேறாத கேஸ், உதவாக்கரை என்ற



எதிர்நீச்சல் போட்டு தொடர்ந்து முயன்று கொண்டு இருந்தால்தான் கரையேற, வெற்றி காண முடியும். ஆனால் நம் முயற்சிகள் நம்மைக் களைப்படையச் செய்வனவாக இருந்து விடக் கூடாது.

சொற்களைக் கேட்டுக் கேட்டு சலித்துப் போய் என்னிடம் வந்த போது 'டிப்றெஸ்ட்' ஆக இருந்தான். அடுத்தடுத்த தினங்களில் வந்த போது அவன் எழுதிய ஆங்கிலக் கட்டுரைகளை, தமிழ் கவிதைகளைப் படிக்க நேர்ந்த போது அவனது இலக்கிய ஆர்வம், அதிலிருந்த தரம் தெரிய வந்தது. அவன் அப்பா அதை ஏற்க தயாராக இல்லை. 'ஆமாம் பெரிய ஷேக்ஸ்பியர்' என்று கேலியாக சொன்னார். அவரைப் பொறுத்த வரையில் ஆண்கள் என்றால் என்ஜினியர் அல்லது டாக்டராக இருக்க வேண்டும். படிப்பில் மெடல்களை குவிக்க வேண்டும். பணமும் புகழும் வந்து குவிய வேண்டும். இது போன்று குறுகிய நோக்கு குழந்தைகளின் எதிர்காலத்தைப் பாழாக்கி விடும் என்பதை சிலர் உணர்வதில்லை.

ஆனால் உயர வேண்டும் என்று நினைக்க வேண்டுமே தவிர அதை எல்லைக்குள் அடைக்க முற்படக் கூடாது. ஆழமான நீர்ச் சுழலில் மாட்டிக் கொள்ளும் ஒருவன் உயிர் தப்பிக்க எத்தனை முயற்சி செய்து கரையேற பிரயத்தனம் செய்வானோ அத்தகைய முயற்சி உள்ள ஒரு மனிதன் வாழ்க்கையில் எந்த உயரத்தையும் மிக எளிதாக அடைவான். நீர்ச் சுழலில் மாட்டிக் கொண்டவன் எவ்வாறு ஒரு நிமிடம் அசந்தாலும் சுழல் அவனை விழுங்கி விடுமோ அத்தகையதுதான் நம் வாழ்க்கைச் சூழலும்.

எதிர்நீச்சல் போட்டு தொடர்ந்து முயன்று கொண்டு இருந்தால்தான் கரையேற, வெற்றி காண முடியும். ஆனால் நம் முயற்சிகள் நம்மைக் களைப்படையச் செய்வனவாக இருந்து விடக் கூடாது: கட்டாயத்தினால் எதையும் நிரந்தரமாகச் சாதித்து விட முடியாது. விருப்பமுடன் முயல்வதுதான் வெற்றியை ஈட்டித் தரும்.


இது கூடாது, அது கூடாது, அவர்களோடு பேசாதே, அங்கு போகாதே என்று கட்டளைகள் பிறப்பிப்பதை விட அந்த எதிர்மறை செயல்களைச் செய்வதால் என்ன பாதிப்பு வரும் என்பதை எடுத்துச் சொல்லும் போது குழந்தைகளோ பெரியவர்களோ நம் கருத்தை அறிந்து கொள்ள முடியும்.

ஓர் அரசன் தன் மகனிடம் நாளை நீ அரசனானால் கூட இந்த அறையைத் திறந்து பார்க்க முயலாதே' என்று பூட்டிய அறை ஒன்றைக் காட்டினான். அப்போதே இளவரசனுக்கு ஓர் ஆர்வம் தோன்றிவிட்டது. காலம் ஓடியது. அரசன் மாண்டான். இளவரசன் அரசனானான். தன் தந்தை தடை விதித்திருந்த அறைக்குள் என்னதான் இருக்கிறது என்று பார்க்கும் ஆவல் மேலிட்டது. யாருமறியாத போது போய் தனியாக அந்த அறையைத் திறந்து பார்த்தான். பூட்டைத் திறந்த மாத்திரத்தில் கல்லாக சமைந்து போனான். இது கற்பனைக் கதைதான். ஆனால் விளக்கமில்லாத வெற்று வார்த்தைத் தடைகள் என்ன விபரீதத்தை உண்டாக்கும் என்பதற்கும் உதாரணம். எதையும் கையாளும் விதம்தான் தோல்விக்கோ வெற்றிக்கோ காரணமாகிறது. ★

## மக்கள் வரிப்பணத்தில்...

இலங்கையில் நீதித்துறையின் சுயாதீனமே கேள்விக் குறியாகியுள்ளது. நாட்டின் தலைவரின் எண்ணப்படி சகலரும் தாளம் போட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். யாழ்ப்பாணத்திலும் தன்னைத் தானே மன்னனாக உருவகித்துக் கொள்ளும் தியேட்டர்காரர், தான் ஆயுதவழியிலிருந்து ஜனநாயக வழிக்குத் திரும்பி விட்டதாக அடிக்கடி பெருமை கொள்வார். ஆனால் அவரது செயற்பாடுகளுடன் இன்னமும் ஆயுதபாணிகள் போன்ற பாணியிலேயே சர்வாதிகாரத் தனமாகவே உள்ளன. தனது கட்சிக் கூட்டத்தையும் இப்போது மக்கள் வரிப்பணத்தில் வைக்கத் தொடங்கி விட்டார். மக்கள் வரிச்சுமையால் துவண்டு கொண்டிருக்க மக்களின் துன்பத்தின் மேல் தனது கட்சிக் கூட்டத்தை நடத்திக் கூத்தடிக்கத் தொடங்கி விட்டார்.

அண்மையில் நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் விடுமுறை தினமான ஞாயிற்றுக்கிழமை கூட்டமொன்றை அவர் நடத்தியிருந்தார். யாழ்ப்பாணத்தில் உள்ள சகல அரச அதிகாரிகளும் அதற்கு வரவேண்டும் என்று அன்புக் கட்டளையும் பிறப்பித்திருந்தார். கூட்டத்தில் தனது கட்சி அமைப்பாளர்கள், கட்சி ஆதரவாளர்களையும் அழைத்திருந்தார்.




இதற்கு அவரது கட்சி தவிர்ந்த வீட்டுக் கட்சிக்காரர் சிலர் சென்ற போது, உங்களுக்கு அழைப்பு அனுப்பவில்லையே என்று கேட்டிருக்கின்றார். அதற்கு அங்கிருந்த அரச அதிகாரிகள் வாய் மூடி மௌனிகளாக இருந்தனர். அரச அலுவலகத்தில், அரச அதிகாரிகளுடன் நடக்கும் கூட்டத்துக்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் வராமல் தனது கட்சி அமைப்பாளர்களை மட்டும் அழைப்பது எந்த வகையில் நியாயம் ?

இத்துடன் முடிந்தால் பரவாயில்லை. மீண்டும் ஒரு ஞாயிற்றுக்கிழமை இரவு அரச அலுவலகங்களுக்கு எல்லாம் தலைமைச் செயலகமாக உள்ள அந்த அலுவலகத்தில் மீண்டும் தியேட்டர்காரரின் கட்சிக் கூட்டம் இடம்பெற்றது. இதற்கு அரச அதிகாரிகள் அழைக்கப்பட்டிருந்ததுடன் கட்சி அமைப்பாளர்களும் அழைக்கப்பட்டு இராப் போசனமும் சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

மக்களின் வரிப்பணத்தில் கூத்தடிக்கும் இவர்கள்தான் மக்கள் சேவகர்களா? நீங்களே முடிவெடுங்கள்.

-நக்கல் நரசிம்மன்.

## உதயனை விமர்சியுங்கள்

உதயன் பத்திரிகை வெளிவரத் தொடங்கிய காலம் முதல் பத்திரிகையை நான் வாசிக்கத் தவறுவதில்லை. உதயன் பத்திரிகையில் வெளிவரும் செய்திகள், கட்டுரைகள், ஏனைய மாணவர்களின் ஆக்கங்கள் மிகவும் பயனுள்ளதாகும்.

தற்போது அனைத்து விடயங்களும் பத்திரிகையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆனால் பத்திரிகையில் பொறிக்கப்படும் எழுத்துக்களை வாசிப்பது மிகவும் கடினமாக உள்ளது.

சிறிய எழுத்தாக இருப்பதால் வயது முதிர்ந்தவர்கள் ·மிகவும் சிரமப்பட்டு வாசிக்கிறார்கள். எனவே இதனைக் கருத்தில் கொண்டு பிரசுரிக்கப்படும் எழுத்தின் அளவை சற்றுப் பெரிதாகப் பிரசுரித்து அனைவரும் வாசிக்கக் கூடியதாக உதவவும். எதிர்காலத்தில் இது போன்ற சிறிய எழுத்துடன் பிரசுரிக்கும் போது வாசகர்களின் ஆர்வம் மிகக்குறையும்.

நீண்டகால வாசகர் என்ற முறையில் நான் இந்தக் கருத்தை முன் வைக்கின்றேன். தொடர்ந்தும் உதயன் பத்திரிகை யாழ்ப்பாணத்தில் பத்திரிகைத்துறை ரீதியாக மக்களுக்கான பணியை செவ்வனவே வழங்க வேண்டும் எனவும் வாழ்த்துகிறேன்.

**முத்துத்தம்பி,**
**கோண்டாவில்.**

★ ★ ★

தற்போதைய இணையத்தளப் பாவனைகளுக்கு நிகராக பல்வேறு தகவல்களை நாளாந்தம் உதயன் பத்திரிகை சுமந்து வருவது வரவேற்கத் தக்கது. ஆனால் தற்போது சமயம் சார்ந்த விடயங்கள் உள்வாங்கப்படுவது மிகக்குறைவாக உள்ளது.

யாழ்ப்பாணத்தின் மூத்த பத்திரிகை எனும் ரீதியில் எமது பண்பாடுகளுக்கு அடித்தளமாக இருக்கும் மதவழிபாடுகள் சார்ந்த தகவல்கள் நற்சிந்தனைகளை புகட்டுவதாக அமைவதால் அது போன்ற தகவல்களை வெளியிடலாம்.

இந்த நற்சிந்தனைகள் இளைய சமுதாயத்தையும் நல்வழிப்படுத்தும். எனவே பத்திரிகைத் துறை ரீதியாக இந்தப் பணியை மேற்கொள்ளலாம்.

செய்திகள், தகவல்கள் சகலவற்றையும் அறியக்கூடியதாகவும், பொது அறிவைக் கற்றுத் தருவதாக அமைந்தாலும் எமது சமுதாயத்தை நல்வழிப்படுத்து வதாக அமைவது மதம் சார்ந்த தகவல்கள் என்பதை மறக்க முடியாது.

எனவே இந்த பயன்தரு பணியை உதயன் செய்ய வேண்டும் என்பதே வாசகன் என்ற ரீதியில் என்றுடைய எதிர்பார்ப்பாகும்.

**சிவா,**
**மானிப்பாய்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகள் இறைவனின் அற்புதமான படைப்புகளே



■ ராஜா

(கடந்தவாரத் தொடர்ச்சி....)

சினிமாவில் தங்கள் விருப்பக் கதாநாயகன் வில்லன்களை அரிவாள், துப்பாக்கி, கத்தி, வெடிகுண்டு போன்ற கொடூரமான ஆயுதங்களால் தாக்கி அழிப்பதைக் கண்டு மகிழ்கின்றனர். அத்துடன் கதாநாயகன் செய்வது போன்ற பாவனைகளை செய்து பார்த்து மகிழ்கின்றனர். பள்ளி ஆசிரியைக் கொலை செய்த இர்பான், அக்னிபாத் எனும் இந்தி படத்தை பலமுறை பார்த்ததாகவும், அதிலிருந்தே இந்தச் செயலுக்குரிய உத்வேகத்தை அடைந்ததாகவும் சொல்லி இருக்கின்றான். குழந்தைகள் தம்மைச் சுற்றி நடப்பவற்றைப் போல செய்தல் (Imitation) என்னும் முறையில் தம்முடைய நடவடிக்கை களை வடிவமைத்துக் கொள்கின்றனர்.

பள்ளி ஆசிரியை கொலை சம்பவத்தில் அடுத்த சிக்கல் கல்விமுறை. குழந்தைகளின் விருப்பத்திற்கு கொஞ்சமும் இடம் தராத கல்விமுறை அவர்களை வெறுப்படைய செய்கிறது. எதைப்படிக்க வேண்டும் என்பதைக் குழந்தைகள் தீர்மானிப்பதில்லை. சொல்லப்போனால் அவர்களின் பெற்றோர்களும் தீர்மானிப்பதில்லை. உண்மையில் உலக முதலாளிகளே இதனைத் தீர்மானிக்கும் ஆற்றல் பெற்றிருக்கிறார்கள். தங்களுடைய பொருளாதார நலனுக்கு தேவையானவற்றையே அவர்கள் கல்வி என்று போதிக்கின்றனர், அவற்றைக் கற்பதையே வெற்றிக்கான பாதையாகவும், அவ்வாறு கற்பவர்களை முன் மாதிரிகளாகவும், ஊடகங்களின் வழியாக தொடர்ந்து வலியுறுத்துகின்றனர். இதனால் பெற்றோர்கள் சிலகுறிப்பட்ட கல்விப் பிரிவுகளை மட்டும் இலக்காக வைத்து வகுப்பிலிருந்தே குழந்தைகளை வளர்க்க தொடங்குகின்றார்கள். அக்குழந்தைகளின் விருப்பங்கள் புறக்கணிக்கப்படுகின்றன. இன்னும் சொல்லப்போனால் தன்னுடைய விருப்பம் என்னவென்று அந்தக் குழந்தை தெரிந்து கொள்ளாமல், தெரிந்து கொள்ள வாய்ப்பில்லாமல் வளர்கின்றது. தனியார் பள்ளிகள் இந்தச்சூழலைத் தங்களுடைய லாப நோக்கில் பயன்படுத்தி அறுவடை செய்கின்றனர்.

மருத்துவம், பொறியியல் போன்ற படிப்புகளை முன்வைத்து குழந்தைகளிடம் மதிப் பெண் நோக்கிய கல்விமுறையை திணிக்கின்றனர். பாடத் திட்டம் எனும் ஒரு வட்டத்துக்குள் இருந்து கொண்டு நல்ல மதிப்பெண் எடுக்காத குழந்தைகளை வாழவே தகுதியற்றவர்கள் போல் அவற்றைத் திரும்பத் திரும்பச் சொல்லி நம்ப வைக்கின்றனர். அத்துடன் அம்மாணவர்களை ஆசிரியர்களின் வழியாக தண்டிக்கவும் செய்கின்றனர்.

தன்னுடைய மனநிலைக்கு ஏற்புடையதாக இல்லாத பாடங்களைப் படிக்கவேண்டிய கட்டாயத்தில் இருக்கும் மாணவர்கள், அதில் போதுமான மதிப்பெண்கள் எடுக்கமுடியாமல் போகும் நிலையில் தங்கள் வாழ்க்கை குறித்த சுயபிரக்ஞையை அழித்துக் கொள்கின்றனர். தனக்கென்று எதிர்காலம் இல்லை என்று உறுதியாக நம்பும் மாணவன் நிகழ்காலத்தைப் பாழாக்கத் தொடங்குகின்றான். தனக்காக மற்றவர்கள் உருவாக்கிய இலக்கை அவன் மதிப்பதில்லை. அதை அடைவது அவனுக்கு கடினமாதாக இருப்பதால் அதைத் தூக்கி எறிய துணிகின்றான். இந்த உலகில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்குள்ளும் தனித்து வமிக்க ஒரு ஆளுமை மறைந்திருக்கின்றது. அந்த ஆளுமை தனக்கான தருணங்களை எதிர்நோக்கி காத்திருக்கின்றது. தக்க சூழ்நிலைக்காக துளிர்க்கவோ, பூக்கவோ வேண்டி மறைந்திருக்கின்றது.

அந்த ஆளுமையின் முக்கியத்துவத்தை முதலில் நாம் புரிந்துகொள்ளவேண்டும். அந்த ஆளுமையின் வளர்ச்சிக்கு நாம் துணை நிற்க வேண்டும். இதற்கான வழிமுறைகளைப் பள்ளிக்கூடமும், பெற்றோர்களும், சமூகமும் யோசிக்க வேண்டும். ஆனால் என்ன நடந்து கொண்டிருக்கிறது சமூகத்தில்?

யாருமே குழந்தையில் ஆளுமை குறித்து கிஞ்சித்தும் கவலை கொள்வதும் இல்லை. அப்படியொன்று இருப்பதாகக்கூட நினைப்பது இல்லை. வாய் திறந்து மழலை பேசும் பருவத் திலேயே குழந்தையிடம் நம்முடைய ஆசைகளைத் திணித்து விடுகிறோம். ஏனெனில் குழந்தைகள் பெரியவர்களை அலட்சியப் படுத்த முடியாது. பெரியவர்களைச் சார்ந்திருக்கிறார்கள் என்பதையும் தாண்டி குழந்தைகள் அவர்களை நேசிக்கிறார்கள். அளவற்ற நேசத்தின் விளைவாகவே பெரியவர்கள் சொல்வதைக் கேட்கவேண்டும், அதன்படி நடக்க வேண்டும் என்ற பேரவா குழந்தைகளுக்கு எழுகிறது. அதன் விளைவாகவே தன் இயல்பூக்க உணர்வைக் கைவிட்டுவிட்டு பெரியவர்களின் சொற்படி கேட்கத் தொடங்குகிறார்கள்.

பாருங்கள் எல்லாக் குழந்தைகளும் கிளிப்பிள்ளையைப் போல தாங்கள் இஞ்ஜினியர் ஆக வேண்டும் என்றோ அல்லது டொக்டர் ஆக வேண்டும் என்றோ ஒப்பிக்கும். அந்தக் குழந்தைகளுக்கு பொறியாளர் என்றால் யார் என்றோ மருத்துவர் என்றால் யார் என்றோ சற்றும் தெரியாத பருவத் தில் மந்தபுத்தியின் விளைபொருளான நம் ஆசையை குழந்தையிடம் திணிக்கிறோமோ? உலகம் பூரா வெறுமனே பொறியாளர்களும், மருத்துவர்களும் மட்டும் நிறைந்து விட்டால் போதுமா? ஏன் இப்படி? நம்முடைய சமூக அமைப்பு சில திட்டமிட்ட பிரச்சாரத்தின் மூலம் பொறியாளர், மருத்துவர் என்ற கல்வியை மதிப்புமிகு வியாபாரப் பொருட்களாக்கி அதை விற்பனை செய்யும் தந்திரங்களில் ஒரு சமூகத்தையே சிக்க வைத்திருக்கிறார்கள்.

ஒரு சமூகத்துக்கு அறிவியல் அறிஞர்கள் தேவையில்லையா? ஓவியர்கள் தேவையில்லையா? கணித மேதைகள் தேவையில்லையா? வரலாற்று ஆய்வாளர்கள் தேவையில்லையா? தொல்லியல் அறிஞர்கள் தேவையில்லையா? சுற்றுச்சூழல் அறிஞர்கள் தேவையில்லையா? நிர்வாகவியல் அறிஞர்கள் தேவையில்லையா? வேளாண்துறை விஞ்ஞானிகள் தேவையில்லையா? மெக்கானிக்குகள் தேவையில்லையா? விளையாட்டு வீரர்கள் தேவையில்லையா? இது போல எண்ணற்ற துறைகளும் தேவை தானே இந்த உலகத்தில் பின்னர் எப்படி மந்தபுத்தி உருவாகிறது? குழந்தைகள் வளரும் போதே அவர்களது ஆளுமைத் திறனின் முளைகள் மலரத்தான் செய்யும் அது ஓவியத்தில் இருக்கலாம்; பிரித்து இணைக்கும் செயற்பாடாக இருக்கலாம்; கணிதத்திலாக இருக்கலாம், கதை சொல்வதாக இருக்கலாம். விளையாட்டாக இருக்கலாம். எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். அதற்கு இடையூறு செய்யாமல் அடக்கி ஒடுக்காமல் அந்தந்த துறையில் வளர்வதற்கான உதவிகள் புரிந்தாலே போதும். குழந்தைகளின் அடிப்படையான அன்பு எல்லோரையும், எல்லாப் பொருள்களையும் நேசிக்கும் மனோபாவம் எந்தக்காயமுமின்றி, அடக்குதலும் இன்றி வெளிப்படும். எல்லாத் துறைகளிலும் சாதனைகள் படைக்கும், புதிய சமுதாயம் மலரும். உண்மையில் குழந்தைகள் [illegible] மனிதர்களுக்கு [illegible] கொடுக்கும் [illegible] மனிதர்கள். அவர்களை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ★


# எறும்பு மூளையின் சிறந்த முடிவு

(கடந்தவாரத் தொடர்ச்சி....)

> நம்மைப் போல மறைமுகத் திட்டம், கோஷ்டிப் பூசல் போன்றவை அவற்றுக்குக் கிடையாது. சுயநலம் இல்லாமல் பொது நலம் எது என்பதை மட்டுமே பார்த்து, சரியான தீர்மானத்தை நோக்கி விரைவில் வந்து குவிந்துவிடும்.

முடிவு எடுப்பதற்கு ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு மேற்பட்ட எறும்புகளோ நியூரான்களோ சம்மதம் தர வேண்டும். இந்த threshold - கடவு ரேகையின் அளவைக் கூட்டவோ குறைக்கவோ முடியும். சூழ்நிலையைப் பொறுத்து, சீக்கிரமாக முடிவெடுக்க வேண்டுமா, அல்லது துல்லியமான முடிவுகள் தேவையா என்பதைப் பொறுத்து இந்தக் கடவு ரேகையை முன்னோ பின்னோ தள்ளி அனுசரித்துக் கொள்கிறோம். இது எப்படி வேலை செய்கிறது என்பதைப் புரிந்து கொண்டால் நாளைக்கு அதே போல் சிந்தித்து முடிவு எடுக்கும் இயந்திரங்களைத் தயாரிக்க முடியும்.

கார்னெல் பல்கலையின் தாமஸ் சீலி, சமுதாயமாகச் சேர்ந்து வாழும் பூச்சியினங்கள் (social insects) என்ற ஐடியாவை மேலும் விரிவுபடுத்தி, அரசு செயற்படும் விதம் வரையில் கொண்டுபோகலாம் என்கிறார். ''தேனீக்களின் ஜனநாயகம்'' என்று அவர் எழுதிக் கொண்டிருக்கும் புத்தகம் அடுத்த வருடம் வெளி வருகிறது.



தேனீக்களிலிருந்து கொப்பி அடித்தால் நம்முடைய கூட்டு முடிவுகளும் அரச நிர்வாகமும் கூட மேம்படும் என்கிறார் சீலி. தேனீயும் எறும்பு போலவே சமுதாயப் பூச்சிதான். பல லட்சம் வருடமாக இந்தப் பூச்சிகள், கூட்டு முடிவுகள் எடுப்பதை வெற்றிகரமாகச் செய்து வருகின்றன. எனவேதான் இந்தக் கலையில் நன்கு தேர்ச்சி பெற்று விட்டன.

தேனீயுடன் ஒப்பிட்டால் பண்டைய கிரீஸ், ஏதென்ஸ் என்று மனித ஜனநாயகத்துக்கு வெறும் 2500 வயதுதான் சொல்லலாம். இன்னும் நாம் கலந்து ஆலோசித்து முடிவுகள் எடுக்கத் திணறுவதிலும், மைக்கைப் பிடுங்கி அடித்துக் கொள்வதிலும் ஆச்சரியமே இல்லை.

எறும்பும் தேனீயும் நல்ல முடிவுகளை விரைவாக எடுப்பதற்குக் காரணம், அதன் ஒவ்வொரு தனிப்பட்ட உறுப்பினரும் மிக எளிமையானவர்கள். பரோபகாரிகள். நம்மைப் போல மறைமுகத் திட்டம், கோஷ்டிப் பூசல் போன்றவை அவற்றுக்குக் கிடையாது. சுயநலம் இல்லாமல் பொது நலம் எது என்பதை மட்டுமே பார்த்து, சரியான தீர்மானத்தை நோக்கி விரைவில் வந்து குவிந்துவிடும். நம் ஜனநாயகத்தில், உடனடிப் பிரச்சினைகளில் சிக்கி நீண்ட கால முடிவுகள் தாமதமாகின்றன.

நியூரான்களையும், எறும்புகளையும் பார்த்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது ஒன்று இருக்கிறது. தனித்தனியாகப் பார்த்தால் இருப்பதிலேயே புத்திசாலிகளை விட அறிவுத்திறன் அதிகம் கொண்ட குழுக்கள் அமைப்பது எப்படி என்பதுதான் அது. ஆக, எறும்புப் புற்றைக் கவனித்து.அரச இயந்திரம் எப்படி இயங்குகிறது என்பதைக் கற்றுக்கொள்ள முடியும் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

இரண்டுக்குமே எறும்பு மூளைதான் என்று சொல்ல வருகிறார்களோ ? ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org